பதிப்பாசிரியர்
கொடுமுடி சண்முகப் பிரகதம்

# ஆய்வுத் தேன்

கொங்கு
வெளியீடு

(1973)

# ஆய்வுத் தேன்

## RESEARCH PAPERS ON HISTORY OF KONGU COUNTRY


பதிப்பாசிரியர் :

கொடுமுடி சண்முகப் பிரகதம்



கொங்கு பதிப்பகம்

26, இந்திரா நகர்,


சென்னை-600020.

© ச. பிரகதம் (1947)
கொங்கு வெளியீடு : 1
முதற் பதிப்பு : 1973

விலை ரூ. 4·00

நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை- 600014

# படையல்



பொன்விழாப் பெருந்தகை

பொறியாளர் **நா. மகாலிங்கம்**, B.Sc, F.I.E.,

அவர்களுக்கு

# பதிப்புரை

வரலாறு பெரும்பாலும் பேரரச மரபுகளைச் சுற்றியே எழுதப் படுகின்றது. கொங்கு நாடு, தனித்தன்மை பெற்றிருந்த போதிலும் தனி முடிமன்னர் ஆட்சி பெருததால், வரலாற்றாசிரியர் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. கோவைக் கிழார் இராமச்சந்திரஞ் செட்டியார், டாக்டர் ஆரோக்கியசாமி, புலவர்குழந்தை போன்றோர் பெருமுயற்சியால் எழுந்த வரலாறுகளே மூல நூல்களாக உள்ளன. காலப்போக்கில் கிடைக்கும் புதிய சான்றுகள் கொண்டு, அவ்வப் போது ஆராய்ச்சிகளை மேற்கொள்வது இன்றியமையாதது.

அந்த வகையில் 18-8-72 அன்று சென்னையில் வரலாற்றுக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கொங்கர் கோமான் நா. மகாலிங்கம் அவர்கள் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார்கள். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர், பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்கள் தலைமை ஏற்று கருத்தரங்கினை நடத்தி வைத்தார்கள்.

பன்னிரு இளம் ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டனர் தொல்லியலிலும், தமிழிலும் புலமை சான்ற இவர்களின் ஆய்வுரைகள் பல புதிய கருத்துக்களைத் தந்து வரலாற்றைச் செப்பம் செய் கின்றன. தமிழ் நிலத்தின் வரலாறு முழுமையடையும் முயற்சியில் இவர்களின் கருத்துக்கள், இன்றியமையாதன. கருத்தரங்கச் செய்திகள், காற்றோடு கலந்து விடாமல் கருத்துப் பேழையாகத் தங்களின் கைகளில் மலரக் காண்கின்றீர்கள்.

உணர்வுகளை மிஞ்சும் உண்மைகளைத் தேர்ந்து உலகிற்கு அளிப்பதே ஆராய்ச்சி ஆகும். ஆராய்ச்சிப் போக்கு வளர்ந்தாலே தமிழ்நிலத் தொன்மைப் பெருமைகள் துலங்கத் தோன்றி, வருங் கால ஏற்றத்திற்கு வழிவகுக்கும். ஆய்வுப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள 'கொங்கு' இதழின் சார்பாகத் தமிழ் மக்களின் கூர்த்த மதிக்கு இந்நூலைக் காணிக்கை யாக்குகின்றோம்.

ச. பிரகதம்

பதிப்பாசிரியர்

# எழுத்துரையாளர்கள்

1. நடன காசிநாதன் M.A.

தமிழகத் தொல்லியல் துறையில் கல்வெட்டாய்வாளராகப் பணியாற்றுகின்றார். தொல்லெழுத்துப் பயிற்சி மிக்கவர். வட்டெழுத்துக்களைப் படிப்பதில் வல்லவர். துறை வெளியீடுகள் பலவற்றைப் பதிப்பித்துள்ளார் 'காலச் சுவடுகள்' இவரது அண்மைக்கால நூல்.

2. மா. சந்திரமூர்த்தி M.A.

தமிழகத் தொல்லியல் துறையில் கல்வெட்டாய்வாளராகப் பணியாற்றுகின்றார். தொல்லெழுத்துப் பயிற்சி மிக்கவர். கலை வரலாற்றில் ஆர்வமுடையவர். துறை வெளியீட்டான 'கோயில் கலைகள்' என்ற நூலில் இவர் தனித்திறம் காணலாம்.

3. Dr. அர. சண்பகலட்சுமி

அண்மைக்காலம் வரை, சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையில் பணியாற்றினார். தமிழ் நாட்டில் சமணம் பற்றி விரிவாக ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். தற்போது தில்லியில் பணியாற்றுகின்றார்.

4. சா. குருமூர்த்தி M.A., M.Litt.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் துறையில் பணியாற்றுகின்றார். அகழ்வாராய்ச்சிகள் பலவற்றை முன்னின்று நடத்தியுள்ளார்.

5. Er. கொடுமுடி ச. சண்முகன்

தமிழகப் பொறியியல் பணித்துறையில், உதவிப் பொறியாளராகப் பணியாற்றுகின்றார். வரலாற்றுக் கருத்தரங்குகள் பலவற்றில் கலந்து கொண்டுள்ளார். அளக்கையியல் (Surveying) முதற்தொகுதி இவரது அண்மைக்கால நூல்.

6. எ. சுப்பராயலு M.A., M.Litt

'தமிழக வரலாறு' தொகுக்கும் குழுவில் துணையாசிரியராகப் பணியாற்றுகின்றார். சோழ நாட்டு உட்பிரிவுகள் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார்.

7. ஔவை. நடராசன் M.A., M.Litt.

தொழிலதிபர் நா. மகாலிங்கம் அவர்களைப் புரவலராகக் கொண்ட, இராமலிங்கர் பணி மன்றத்தின் பொறுப்பாளராகப்

பணியாற்றுகின்றார். தமது தந்தையார் ஔவை சு. துரைசாமி அவர்களைப் போலவே தமிழ்ப் பணிகளில் முன்னிற்பார்.

**8. புலவர் புது. போ. வேங்கடராமன்**

தர்மபுரி மாவட்டம் கடத்தூரில் தமிழாசிரியராகப் பணியாற்றுகின்றார். தொன்மைப் பொருட்கள் பலவற்றைத் திரட்டி வைத்துள்ளார். காசுகள் இவரது தொகுப்பில் முதன்மை பெறுகின்றன. நேரடி ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுத் தகவல் பல திரட்டி வைத்துள்ளார்.

**9. புலவர் வே. மகாதேவன்**

திருப்பனந்தாள் தமிழ்க் கல்லூரி முதல்வர் திரு. வேங்கடராமையா அவர்களின் மகனார். கருத்தரங்குகள் பலவற்றில் கலந்து கொண்டுள்ளார். தொல்லெழுத்துப் பயிற்சி உடையவர்.

**10. அ. இராசேந்திரன் M.A.**

கேரளப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை மாணவர். தொல்லெழுத்துப்பயிற்சி பெற்றவர். ஆராய்ச்சிகளில் ஈடுபாடு கொண்டு பலகட்டுரைகள் எழுதியுள்ளார். ஆத்தூர் வட்டத்தில் சில நடுகற்களைக் கண்டுபிடித்துப் படிஎடுத்துள்ளார்.

**11. க. ப. அறவாணன் M.A.**

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றுகின்றார். 'Research Papers on Tamilology' 'புரட்சிப்பொறிகள்' முதலாயின இவரது படைப்புகள். தொல்லெழுத்துப் பயிற்சி பெற்றவர். ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபாடு மிக்கவர்.

**12. புலவர் செ. இராசு**

'கொங்கு' திங்களிதழின் ஆசிரியர் 'ஈரோடு வரலாற்றுச் சங்கம்' என்ற அமைப்பில் பல கண்டுபிடிப்புகள் செய்துள்ளார். அறச்சலூர் தமிழிக் கல்வெட்டு இவர் முயற்சியாலேயே கண்டுபிடிக்கப்பட்டதாகும். 'எங்கள் பவானி' இவரது படைப்பாகும். ஏராளமான கருத்தரங்குகளில் கலந்து கொண்டுள்ளார்.

# பொருளடக்கம்


1. காசுகள்
நடன. காசிநாதன் 1

2. ஓமலூர்க் கோட்டை
மா. சந்திரமூர்த்தி 13

3. சமணம்
Dr. அர சம்பகலட்சுமி 23

4. 2000 ஆண்டுகட்கு முந்தைய தமிழகம்
சா. குருமூர்த்தி 33

5. ஆர்நாட்டாமலை.
Er. கொடுமுடி ச. சண்முகன் 39

6. நாட்டுப் பிரிவுகள்
Y. சுப்பராயலு 43

7. பொன்மலி கொங்கின் புலமை நங்கை
ஔவை நடராசன் 52

8. புறப் பொருட் சிற்பங்கள்
புலவர் புது. பொ. வேங்கடராமன் 59

9. கற்கடக மாராயன் கூடல்
புலவர் வே. மகாதேவன் 65

10. ஆத்தூர்க் கோட்டை
அ. இராசேந்திரன் 75

11. சங்க இலக்கியத்தில் கொங்கு
க. ப. அறவாணன் 80

12. ஊராட்சி முறை
புலவர் செ. இராசு 84

# கலை

இரா. நாகசாமி, M.A.

பல்லவர், பாண்டியர், சோழர் ஆய பெருமன்னர்கள் அழியாச் செல்வங்களை அளித்து தமிழகத்துக்குப்பெரும்புகழ் அளித்துள்ளனர். அது போன்று கொங்கு மண்டலமும் தமிழகத்துக்குச் சிறப்பான கலைச் செல்வங்களை அளித்துள்ளது என்பதில் ஐயமில்லை.

ஒரு நாட்டின் நில வளமும் செல்வப் பெருக்கமும் அந்நாட்டின் கலை வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைபவை. அந்த அடிப்படையில் பல்லவர் நாடும், சோழர் நாடும், பாண்டி நாடும் பெற்ற பெரும் செல்வம் பண்டைய கொங்கு நாட்டில் இல்லாதிருந்த காரணத்தால் இப்பகுதியின் கலை வளர்ச்சி மற்ற பகுதிகளோடு போட்டியிடும் அளவுக்கு இல்லாவிடினும், பெற்றுள்ள கலை தனக்கெனத் தனி நிலை வகுத்துக் கொண்ட தனிக்கலை ஆகும். கொங்கு நாட்டின் கலைகளைப் பற்றி இலக்கியங்கள் தெளிவாகக் கூறுகின்றன.

## செந்நாக்குன்று

புகளூருக்கு அக்கரையில் மோகனூர் அருகில் நான்கு கல் தொலைவில் செந்நாக்குன்று என்னும் ஒரு சிறு குன்று உண்டு. அதில் இயற்கையாக அமைந்த குகைத்தளம் ஒன்று உண்டு. அதில் சமணப் பெரியார்கள் வாழ்ந்த படுக்கைகள் உள்ளன. அவற்றில் ஒன்றில் 'ஸ்ரீவத்சம்' என்னும் மங்கல உருவம்

---

எழுத்துரை ஆசிரியர், தமிழகத் தொல்லியல் துறையின் இயக்குநர். காலிபங்கன் அகழ்களில் நேரடிப் பயிற்சி பெற்றவர். தமிழகத் தொல்லியல் துறை தொடங்கிய காலத்திலிருந்து, அத்துறையில் பணியாற்றி, கல்வெட்டு பிரிவு, ஒளிப்படப் பிரிவு, தொல்லியல் அகழ்வுப் பிரிவு, தொல்லெழுத்துபள்ளி ஆகியவகை கொண்டதாகத் துறையை விரிவாக்கியுள்ளார். மாமல்லையின் தோற்றம் பற்றிய இவரது ஆய்வால் உலகத் தொல்லியல் ஆய்வாளர்களில் ஒருவராகத் திகழ்கின்றார். ஏராளமான ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் எழுதியும், பதிப்புகள் செய்தும் உள்ளார். 'யாவரும் கேளிர்' இவரது அண்மைக்கால நூல் ஆகும்.



இரணியன் ஆகம்கீண்ட எம்மான்

நாமக்கல் சிற்பம்

சிற்பமாக செதுக்கப் பட்டுள்ளது. இது சற்றேறக்குறைய கி. பி. மூன்றும் நூற்றுண்டைச் சார்ந்ததாகும். கிடைத்துள்ளவற்றில் காலத்தால் மிகவும் முற்பட்டது இதுவே எனலாம்.

**நாமக்கல்**

இன்று நாமக்கல் என்று வழங்கப்படும் ஆரைக்கல் பண்டு அதியமான்'அரசர்களின் கீழ் இருந்தது. சங்க காலத்தில் ஒளவைக்கு நெல்லிக்கனி கொடுத்து புகழ் எய்திய நெடுமானஞ்சி, பின்னர் வந்த எழினி ஆகிய அரசர்களுக்கு பின்னர் கி.பி 8ம் நூற்றுண்டில் சோமன் என்னும் அதியேந்திரன் புகழ் மிக்கவனுய் ஆண்டிருக்கிருன். இவனுக்குப் பல பட்டப் பெயர்கள் இருந்திருக்கின்றன. இவன் பல்லவர்களில் சிறந்த இராஜசிம்மனின் நெருங்கிய உறவினனுய் இருந்திருக்க வேண்டும்.

இவன் வலி மிகுந்தவனுய் இருந்தான் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன இக்காலத்தில் பாண்டியர்கள் மிகவும் வலி பெற்று அண்டைநாடுகளை வென்று வந்தனர். அவர்களில் இராஜ சிம்மன் என்றும் பல்லவ பஞ்சனன் என்றும் பெயர் பெற்ற தேர் மாறன் என்பவன் காவிரியைக் கடந்து மழ கொங்கத்தை அடிப் படுத்தி, பாண்டிக் கொடுமுடி சென்று அங்கு பசுபதியின் :பன்ம பாதம் பணிந்தான் என்று வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது. இவ் வெற்றி அதியர்கள் மீது கொண்ட வெற்றி எனலாம்.

இவன் மகனுகிய பராந்தக நெடுஞ்சடையன் மீண்டும் இப் பகுதி மீது படையெடுத்து வெற்றி கண்டிருக்கிருன். இவன் பல்லவனை காவிரியின் தென்கரையில் பெண்ணுகடத்தில் வென்ருன் (வேள்விக்குச் செப்பேடு). பின்னர் காவிரியின் வடகரையில் ஆயிரவேலி அயிலூரிலும், புகழியூரிலும் அதியனை வென்ருன் என்று ஸ்ரீவரமங்கலம் செப்பேடு கூறுகிறது அதியனுக்கு உதவியாக பல்லவனும் கேரளனும் வந்தனர். அவர்களையும் நெடுஞ்சடையன் வென்ருன் என ஸ்ரீவரமங்கலம் செப்பேடு கூறுகிறது. ஆதலின் போர் புகழியூரில் நடந்தது தெளிவு. இப்போர் கடுமையாக நடந்திருக்கவேண்டும். தளவாய்புரம் செப்பேடுகள் பராந்தக நெடுஞ்சடையன் காடவனை கருவூரில் வென்ருன் என்று கூறுகின்றன புகளூர், கருவூர் இரண்டும் அருகருகில் உள்ளதை அனைவரும் அறிவர். இவ்விரண்டு வெற்றிகளும் ஒரே போரைக் குறிக்கின்றன எனில் தவருகா.

இவ்வரலாற்றுச் செய்திகளிலிருந்து சில உண்மைகள் பெறப் படுகின்றன. தேர்மாறன் மழ கொங்கத்தை அடிப்படுத்தபோதிலும்



ஏனத்தின் உருவில் எழில்நங்கை
உருக்கொண்ட வராகப் பெருமான்

நாமக்கல் சிற்பம்

விரைவில் அப்பகுதி சுதந்திரம் பெற்று வலிமை மிகுந்தது. அதனுல் தேர்மாறன் மகன் நெடுஞ்சடையின் மீண்டும் அங்கு கடும் போர் புரிய நேர்ந்தது. 2) அதியர்களும் பல்லவர்களும் மிக நெருங்கிய நண்பர்களாய் இருந்தனர். அதியன் மீது வந்த படையோடு பல்லவன் மருதூரில் போரிட்டிருக்கிருன். ஆதலின் பல்லவரது உதவி பெற்று அதியர் ஆண்டனர். இது நாமக்கல்லில் உள்ள அதியனது பெயர்களிலும், கலையிலும் தொனிக்கிறது.

பராந்தக நெடுஞ்சடையனுடன் போரிட்ட அதியன் யார்? இதற்குத் தெளிவாக விடை கூறுவது கடினம். இது காறும் நமக்குக் கிடைத்துள்ள கல்வெட்டுகளின்படி மிகவும் வலிவுள்ளஞக கி. பி. எட்டாம் நூற்ருண்டில் ஆண்டவன் நாமக்கல் குகைக் கோயிலைத் தோற்றுவித்த சோமஞகிய அதியேந்திரனே. ஆதலின் இவனே பராந்தக நெடுஞ்சடையனேடு போரிட்டான் எனலாம். அவன் பாண்டியனேடு போரிடும்போது மிகவும் தளர்ந்த வயதினனுய் இருந்திருக்க வேண்டும்.

இப் புகழ் வாய்ந்த அதியன் நாமக்கல்லில் இரண்டு குடைவரைக் கோயில்களைத் தோற்றுவித்திருக்கிருன். ஒன்று நரசிம்ம பெருமானுக்கும் மற்றது அரவணை துயிலும் அண்ணலுக்கும் ஆக்கப் பட்டன. இவற்றில் நரசிம்ம பெருமானுக்கு எடுத்த குடைவரைக் கோயிலில் ஐந்து சிற்பங்கள் உள்ளன. இவற்றில் நடுவில் உள்ளது அமர்ந்த நிலையில் உள்ள நரசிம்ம உருவாம். இதற்கு சிறப்பாக இன்றும் வழிபாடு நடக்கிறது. இது தவிர "இரணியன் ஆகம் கீண்ட எம்மாஞகத்" தோற்றமளிக்கும் நரசிம்மரின் மற்ருெரு உருவமும், ஏனத்தின் உருவில் எழில் நங்கை உருக்கொண்ட வராகப் பெருமானின் உருவமும், ஓங்கி உலகளந்த உத்தமன் உருவமும் அரவணையில் அமர்ந்த ஆதிப்பெருமானின் உருவமுமாக உள்ளன. பல்லவர் குடைவரைக் கோயில்களிலும் பாண்டியர் கோயில்களிலும் ஏராளமான சிற்பங்கள் உள்ளன. இருப்பினும் அவை அனைத்தையும் காட்டிலும் இங்குள்ளவை வடிவிலும் அமைதியிலும் புதுமை மிக்கவையாய் உள்ளன. இவற்றில் வராகப் பெருமானின் கால்கள் கடலில் மூழ்கி நிற்பவையாகக் காட்சி அளிக்கின்றன. இது பிற இடங்களில் காணப்படாத சிறப்பு.

அதே போன்று திரிவிக்கிரம அவதாரத்தில் குதிரையும் யூபமும் மேலே காண்பிக்கப் பட்டுள்ளன. இது அச்வமேதயாகத்தில் நடைபெற்றது என்பதை சித்திரிக்கிறது. இதுவும் பிற இடங்களில் காணுத சிறப்பு. அதே போன்று ஆதிநாதர் சிலையும் நரசிம்மர் உருவமும் பிற இடங்களைக் காட்டிலும் வேறுபட்டுள்ளன.

அரவணைகிடந்த அம்மானாகிய அனந்தசாயி குடைவரைக் கோயிலும் சிறப்புடையதே. இங்கு திரிவிக்ரமர் சிலை இருக்கிறது. இவற்றைக் காட்டிலும் அனந்தசாயி சிலை மிகச் சிறந்தது. அரவணை கிடந்த அண்ணலைச் சுற்றிலும் பல தெய்விக உருவங்கள் உள்ளன. இதேபோன்று திருமெய்யம் என்னும் இடத்திலும் உண்டு. ஆயினும் இங்குள்ள உருவங்கள் யாவர் எனக் கல்வெட்டே எடுத்துக் கூறுகிறது.

மார்க்கண்டேய மகரிஷி, பர்ணன் (கருடன்) வருணன், பிரும்மா, ஈசன், தக்ஷப் பிரஜாபதி, சந்திரன், சூரியன், தும்புரு, நாரதர், குரு, பிருகு, சார்ங்கம், கௌமோதகி, சக்ரம், பாஞ்சசன்யம், தோற்று ஓடும் மது கைடபர்கள் ஆகியோர் இந்த சய்ய கிருகத்தில் உள்ளனர் என அதியேந்திரன் வெட்டியுள்ள கல்வெட்டுக் கூறுகிறது. இதுபோன்று அனந்தசயனப் பெருமானைச் சுற்றி அமர்த்தப்படும் உருவங்கள் யாவை என அறிய இது உதவுகிறது. இதைத் தோற்றுவித்தவன் குணசீலன் என்னும் பெயர் பெற்றவன்.

நாமக்கல்லில் உள்ள சிலைகள் கி. பி. 8ம் நூற்றுண்டுக் கலைக்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டுகள். இரண்டே குடைவரைக் கோயில்களாயினும் ஒப்பற்ற சிற்பங்களைக் கொண்டுள்ள இவை இந்திய நாட்டுக் கலை வரலாற்றில் தனி இடம் பெறுபவை.

**சிங்கநல்லூர்**

கோவை மாநகருக்கு அருகில் சிங்கநல்லூர் என்னும் ஊரில் உலகளந்த பெருமானின் செப்புத் திருமேனி ஒன்று உள்ளது. வழிபாட்டில் உள்ள இப்படிவம் மிகவும் எழில் வாய்ந்தது. கல்லில் திரிவிக்ர மூர்த்தியை எவ்வாறு படைத்தனரோ அதேபோன்று செம்பிலும் வடிக்கப்பட்டுள்ளது. இதன் உருவ அமைதியும் வடிவும் நாமக்கல்லில் உள்ள திரிவிக்ரமர் சிலையைப் போலக் காணப்படுவது சிறப்பாகும். இதுவும் கி. பி. எட்டாம் நூற்றுண்டைச் சார்ந்தது என்பதில் ஐயமில்லை. இவ்வுருவத்தில் பல்லவர்களது தொடர்பைத் தெளிவாகக் காணலாம். இப்பகுதியில் பல்லவர் தொடர்பு மிகுந்திருந்ததை முன்னரே குறிப்பிட்டோம்.

**கொடுமுடி**

சிங்கநல்லூர் செப்புத் திருமேனியைப் போன்று பாண்டிக் கொடுமுடியில் வீரநாராயணப் பெருமான் கோயிலில் உள்ள திருமாலின் செப்புத் திருமேனியும் சற்றேறக்குறைய இதே காலத்தைச்

சார்ந்ததுதான். இதை முதன்முதலில் இக்கட்டுரை ஆசிரியர் 'லலித்கலா' என்னும் கலைப்பத்திரிகையில் 'கொங்குநாட்டின் அருங் கலைச் செல்வங்கள்'' எனப் பதிப்பித்தார். இதன் பின்னர் உலக கலை வரலாற்று நூல்களில் கொங்குநாட்டிலும் தனித்ததொரு கலை, உலகப் புகழ்மிக்க கலை இருக்கிறது என்பதை உலக வல்லுநர்கள் ஏற்றுக் கொண்டதோடன்றி இப்பொழுது கொங்குநாட்டுக் கலை என்றே பெயரிட்டு எழுதிவருகின்றனர். இந்திய நாட்டில் திருமால் செப்புத் திருமேனிகளிலேயே ஈடு இணையற்றது கொடுமுடி திருமால் திருமேனியே என லண்டன் மாநகர் பிரிட்டிஷ் பொருட் காட்சிசாலையின் இந்தியப் பிரிவுத் தலைவர் டக்ளஸ் பரட், என்ப வரும் நியுயார்க் மெட்ரோபோலிட்டன் மியூசியம், பத்திரிகையில் ஆஸ்வின் லிப்பே என்ற அமெரிக்கரும் இன்னும் பிற உலகக் கலை வல்லுநர்களும் இதைப் புகழ்ந்து எழுதி உள்ளனர். இவ்வொப்பரும் உருவம் இப்பொழுதும் கோயிலில் வழிபாட்டில் உள்ளது.

இத் திருமாலின் எழில் உருவைத் தவிர இதே கோயிலில் சதுரதாண்டவர் உருவம் ஒன்றும், ஆடவல்ல பெருமானின் உருவம் ஒன்றும் முப்புரம் எரித்த முதல்வன் உருவம் ஒன்றும் செம்பில் அழகுற வடிக்கப்பட்டு விளங்குகின்றன. இவை சற்றேறக் குறைய பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

தமிழகக் கலை வரலாற்றில் எளிமையாகக் கூறவேண்டுமானால் இரண்டை தெளிவாகக் கூறலாம்.

1. கல்லினால் வடித்தெடுக்கப்பட்ட சிற்பங்களில் பல்லவர் மிகச் சிறந்த படைப்புகளைத் தோற்றுவித்துள்ளனர். 2. சோழர்கள் உலகம் கண்டு வியக்கும் வண்ணம் செப்புத் திருமேனிகளைத் தோற்றுவித்துள்ளனர். கல்லில் வடித்த கவினுறு சிலைகளும், செம்பில் வடித்த செழுங்கலைச் செல்வங்களும் கொங்குநாட்டிலும் உண்டு என்பதற்கு நாமக்கல்லும் கொடுமுடியும் எடுத்துக்காட்டு களாகும். சிறப்பாக கொடுமுடியில் உள்ள திரிபுராந்தகர் செப்பு உருவம் கொங்குநாட்டினர் அளித்த பெருமிதச் செல்வமாகும்.

### தர்மபுரி

இன்று தர்மபுரி எனப் புகழ்பெற்ற பண்டைய தகடூரில் வரலாற்றுச் சிறப்புள்ள இரு கோயில்கள் உள்ளன. இவை இன்னும் வரலாற்று ஆசிரியர்களின் கவனத்தைக் கவரவில்லை. இவை இரண்டும் சிவாலயங்கள். அருகருகில் ஒரே திருச்சுற்றில் உள்ள இவற்றை, மல்லிகார்ஜுனர் கோயில் என அழைக்கின்றனர்.

இவை நுளம்பர் என்ற சிற்றரசர்களால் தோற்றுவிக்கப்பட்டவை. நுளம்பர்கள் தகடூரைக் கைப்பற்றி எட்டாம் நூற்றுண்டின் இறுதியில் சிலகாலம் ஆண்டனர். இக் காலத்தில் இக் கோயில் எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். இக் கோயிலின் சிறப்பு கருவறையின் முன்புள்ள மண்டபமாகும். இம் மண்டபத் தூண்கள் ஒப்பற்ற சிற்பச் செழுமை வாய்ந்தவையாகும். இவற்றின்மேல் உள்ள விதானமும் அழகிய சிற்பங்களைக் கொண்டது. சிறப்பாக நடமாடும் பெருமானின் உருவம் எழில் வாய்ந்தது. இருப்பினும் இவை தமிழக மரபில் இல்லாமல் அனந்தபூருக்கு அருகில் ஹேமாவதியைத் தலைநகராகக் கொண்ட நுளம்பர் மரபில் உள்ளன. இவையும் கொங்கில் கண்டு மகிழத்தக்க ஒப்பற்ற கலைப்படைப்புகளாகும்.

இவைதவிர ஏராளமான தனிச் சிற்பங்கள் உள்ளன. ஒரு நாட்டின் கலை பல சிறந்த கலைகளுடன் தொடர்புகொண்டு காலத்தையும் இடத்தையும் கடந்து காண்போர் மனதில் கலை இன்பம் அளிக்கும் வகையில் மிளிர்வது உலகம் அறிந்த உண்மையாகும் அக்கலை வரலாற்றில் கொங்குநாட்டுக் கலைக்கும் தனி இடம் உண்டு. சிறப்பு உண்டு.



# காசுகள்

நடனா. காசிநாதன்,M.A

கொங்கு நாடு என்பது இன்றைய சேலம், தர்மபுரி, கோவை மாவட்டங்களாகும். இம் மூன்று மாவட்டங்களில் அடங்கிய ஊர்களிலிருந்து கிடைக்கப் பெற்ற காசுகளையும் பிற மாவட்டத்திலிருந்து கிடைக்கப் பெற்ற கொங்கு சேரர் காசுகளையும் ஒரு தொகுப்பாகத் தொகுத்து அதன்மூலம் என்ன அறிய முடிகிறது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மாவட்டமும் ஊர்களும் :**

கோவை மாவட்டத்தில் 34 ஊர்களிலிருந்தும், தர்மபுரி மாவட்டத்தில் 18 ஊர்களிலிருந்தும், சேலம் மாவட்டத்தில் 14 ஊர்களிலிருந்தும், மதுரை மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியில் 2 ஊர்களிலிருந்தும், திருச்சி மாவட்டத்தின் வடமேற்குக் கோடியில் ஒரூரிலிருந்தும், தென்னார்க்காடு மாவட்டத்தில் ஓரூரிலிருந்தும் காசுகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. மதுரை மாவட்டத்தின் பகுதியும், திருச்சி மாவட்டத்தின் பகுதியும் கொங்கு நாட்டில் சேர்க்கப்பட்டதன் நோக்கம் அம்மாவட்டங்களின் சில பகுதிகள் முன்னர் கொங்கு நாட்டோடு இணைந்திருந்தவை. தென்னார்க்காடு மாவட்டம் திருச்சின்னபுரம் என்ற ஊரிலிருந்து கொங்கு சேரர் காசுகள் கிடைக்கப் பெற்றதால் அவ்வூர் இங்கு சேர்க்கப்படுகிறது.

**முத்திரை குத்திய காசுகள் :**

கொங்கு நாட்டில் கிடைக்கப் பெற்ற காசுகளிலே மிகவும் பழமையானவை முத்திரை பதிக்கப்பெற்ற காசுகள்தான் (Punch marked coins). இந்த முத்திரை பதிக்கப்பெற்ற காசுகள் கி.மு. மூன்றும் நூற்றுண்டிருந்து வழங்கி வந்தன. கொங்கு நாட்டில் மூன்று ஊர்களில் இக்காசுகள் கிடைத்துள்ளன. அவை மூன்றும் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவை. தாராபுரம் வட்டம் ஆலம்பாளையத்திலிருந்து 30-ம், பொள்ளாச்சி வட்டம் வக்கம்பாளையத்திலிருந்து 48-ம், ஈரோடு வட்டம் தயிராபாளையத்திலிருந்து 193-ம் கிடைத்துள்ளன. அனைத்தும் வெள்ளிக் காசுகள். தமிழகத்தில் கிடைத்துள்ள இவ்வகைக் காசுகளில் இப்பகுதியில்தான் ஏராளமாகக் கிடைத்துள்ளன.

**உரோமானியக் காசுகள் :**

கொங்குப் பகுதியில் இக்காசுகள் மொத்தம் 1521 கிடைத்துள்ளன. அனைத்து இந்தியாவிலும் கிடைத்துள்ள உரோமானியக் காசுகளைக் கணக்கில் கொண்டால் எண்பது சதவிகிதம் தமிழ் நாட்டில், அதுவும் கொங்கு நாட்டில் கிடைத்துள்ளன. இக்காசுகள் கிரேக்க மன்னர்கள் அகஸ்டஸ், டைபீரியஸ், நீரோ, ட்ராஜன் போன்ற மன்னர்களால் வெளியிடப்பெற்றவை. அவை கி.மு முதல் நூற்றுண்டு முதல் கி.பி. இரண்டாம் நூற்றுண்டு வரை அடங்கிய காலத்தில் வெளியிடப்பெற்றவை ஆகும். எனவே அந்தகால கட்டத்தில் தமிழகம், அதுவும் இப்பகுதி உரோமானியர்களோடு வாணிபத் தொடர்பை மிகவும் அழுத்தமாகக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இங்கு ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். இங்கு கிடைத்துள்ள உரோமானியக் காசுகளில் பெரும்பாலானவற்றில் அதை வெளியிட்ட மன்னனின் தலைப்பகுதி வேண்டுமென்றே சிதைக்கப்பட்டு காணப்படுகிறது. இதைக் காசு ஆய்வு செய்யும் அறிஞர்கள் உரோமானியர்கள் வேண்டுமென்றே செய்திருக்கிறுர்கள் என்றும், அவ்வாறு செய்யப்பெற்றது, நாணயமாக வழக்கில் இந்தியாவில் இருக்கக்கூடாது என்றும், அணியாகவோ அல்லது இருப்பாகவோவைத்து கொள்ளுவதற்குத்தான் அனுமதிக்கப்பட்டதென்றும் கூறுகின்றனர். அப்பொழுது இந்நிலத்தை ஆண்ட தமிழ் வேந்தர்கள் அவைகள் இந்நாட்டில் புழக்கத்தில் விடக்கூடாது என்று இவர்களாகவும் தடை செய்திருக்கலாம் அல்லவா? யோசிக்க வேண்டிய ஒன்று. உரோமானியக் காசுகள் தமிழ் நாட்டில் கிடைக்கின்றன. ஆனுல் தமிழ்நாட்டுக் காசுகள் உரோமில் கிடைத்திருக்கின்றனவா? கிடைக்கவில்லையெனில் ஏன்? ஆராயப்படவேண்டும். உரோமானியக் காசுகள் பொள்ளாச்சிவட்டம் அகிலாண்டபுரத்திலிருந்தும் உடுமலைப்பேட்டை வட்டம் வடக்கு பூதிநத்தத்திலிருந்தும் கோவை வட்டம் வெள்ளலூரிலிருந்தும், மதுரை வட்டம் கலயம்புத்தூரிலிருந்தும் திருச்சிவட்டம் கரூரிலிருந்தும், கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதில் வடக்கு பூதிநத்தத்திலிருந்து மட்டும் மொத்தம் 1398காசுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. வெள்ளலூரில் இக்காசுகளோடு 4 மோதிரங்களும், 2 வேலைப்பாடமைந்த மணிகளும், 1 தங்கத் தாம்பாளமும் வேறு சில பொருள்களும் எடுக்கப்பெற்றிருக்கின்றன.

**சங்க காலக் காசுகள் :**

நியாயமாக உரோமானியக் காசுகளுக்கு அடுத்தபடியாகச் சங்க காலக் காசுகள்தான் இடம்பெற வேண்டும். அவை இப்பகுதியில் இதுவரையில் கிடைக்கவில்லை. அல்லது கிடைத்திருந்தது என்றுல் என்னுல் சேகரிக்க முடியாமலும் இருக்கலாம். அவ்வாறு

கிடைக்காமல் இருந்திருந்தால் ஏன் இப்பகுதியில் கிடைக்கவில்லை என்ற வினு எழுகிறது. ஆனுல் இந்த காலத்தில் பூம்புகாரில் காசு வெளியிடப்பட்டிருப்பதற்கு ஆதாரமாக ஒரு காசு கிடைத்துள்ளது.

**கொங்கு சேரர் காசுகள் :**

கொங்கணி வமிசத்தைச் சேர்ந்த மன்னர்கள் கி.பி. நான்காம் நூற்றுண்டு முதல் கி.பி. 9-ஆம் நூற்றுண்டு வரை தமிழ் நாட்டில் ஒரு சிறு பகுதியை ஆண்டு வந்திருக்கிறுர்கள். அவர்கள் காலத்தில் வெளியிடப் பெற்ற சில காசுகள் கிடைத்துள்ளன. இக்காசுகள் எல்லாவற்றிலும் ஒரு பக்கம் யானை ஒன்று வலது பக்கம் பார்த்து நிற்கும் நிலையிலும், மறுபக்கம் சில பூ வேலைப்பாடுகளும் காணப் படும். இந்த காசுகளைப் போன்றே காஷ்மீரத்திலும் பல காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை ஹர்ஷதேவன் என்ற மன்னனுல் வெளியிடப்பட்டவை. இக்காசுகள் மொத்தம் 16 கிடைத்துள்ளன. கோபி வட்டம் கணக்கம்பாளையத்திலிருந்து 4 காசுகளும், கிருஷ்ண கிரி வட்டம் மேடப்பட்டியிலிருந்து 1 காசும், தென்னனூர்க்காடு வட்டம் திருச்சின்னபுரத்திலிருந்து 11 காசுகளும் எடுக்கப்பெற்றுள் ளன. இந்தக் காசுகளில் காணப்படும் யானையின் உருவமும், கங்க மன்னர்களில் செப்பேடுகளில் உள்ள முத்திரையில் காணப்படும் யானையின் உருவம் ஒன்றே போல் காணப்படுவதால் இக்காசுகளைக் கொங்கு சேரர் காசுகள் என்று கொள்கின்றனர்.

**கல்வெட்டுகளில் காசுகள் :**

இப்பகுதியில் காணப்படும் கி.பி 10,11, 12-ஆம் நூற்றுண்டுக் கல்வெட்டுகளில் சில காசுகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படு கின்றன. பொன், காணம், ஈழக்காசு போன்றவைகள் குறிப்பிடப் படுகின்றன.

**சோழர், பாண்டியர் காசுகள் :**

இப்பகுதி சோழ மன்னன் ஆதித்யன் காலம் முதல் பிற்காலச் சோழர்கள் காலம் வரை சோழர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தி ருந்தாலும் தமிழகமெங்கணும் பரவிக்கிடக்கும் முதலாம் இராஜராசன் காசுகள் இப்பகுதியில் கிடைக்காமலிருப்பது விந்தையாக உள்ளது. அதைப்போன்றே பாண்டியர் காசுகளும், இப்பகுதியில் கிடைக்க வில்லை.

பவானிக்குப் பக்கத்தில் நிறைய சோழர் காலக்காசுகள் கிடைத் துள்ளன என்பதாக இப்பொழுது செய்தி கிடைத்துள்ளது. அதைப்

போன்றே தர்மபுரி, மாவட்டம், கடத்தூரிலும் சோழர்காலக்காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**விஜய நகர் காலத்திய காசுகள் :**

ஹரிஹரர் புக்கர் ஆகியோரை முதன்மையாகக் கொண்டு தொடங்கிய விஜய நகர ஆட்சி பல காசுகளை வெளியிட்டிருக்கிறது. இராமதங்கா என்பது மிகவும் சிறப்புப் பெற்ற காசு ஆகும். அந்தக் காசுகூட இப்பகுதியில் கிடைக்கவில்லை. பிற்காலத்தில் விஜய நகர மன்னர்களிடத்தே சிற்றரசர்களாக விளங்கிய சிலரது காசுகள் கிடைத்துள்ளன. கிருஷ்ணகிரி வட்டம் கங்காதேவியிலிருந்து 22 செப்புக்காசுகளும், ஓமலூர் வட்டம் மூக்கனூரிலிருந்து 20 தங்கக் காசுகளும், தர்மபுரி வட்டம் எச்சனஹல்லியிலிருந்து 6 தங்கக்காசு களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**மைசூர் உடையார் காசுகள் :**

மைசூர் மன்னர்கள் கி.பி. 16-ஆம் நூற்றுண்டு முதல் ஆண்டு வந்திருக்கின்றனர். அவர்களில் கி.பி. 17 ஆம் நூற்றுண்டில் ஆட்சி புரிந்த காந்திரவ நரச ராஜா என்பவர் சிறந்த அரசராகத் திகழ்ந் திருக்கிருர். அவருடைய ஆட்சியில் சேலத்தின் ஒரு பகுதி அடங்கி யிருந்தது என்பதை அங்கு கிடைத்துள்ள அவர் காலத்திய காசு கள் நிருபிக்கின்றன. ஓமலூர் வட்டம் மூக்கானூரிலிருந்து 24 தங்கக் காசுகள் கிடைத்துள்ளன.

**கேஷ், பணம், பகோடா :**

இந்த காசுகள் கி.பி. 18-ஆம் நூற்றுண்டில் தென்னிந்தியாவில் புழக்கத்தில் இருந்திருக்கின்றன. 80 கேஷ் 1 பணம் என்றும், 42 பணம் 1 பகோடா என்றும் வழங்கியிருக்கின்றன. இந்த மூன்று வகைக் காசுகளும் கொங்கு நாட்டில் கிடைத்துள்ளன.

**கேஷ் :**

இது மிகச் சிறிய பகுதியாகும். ஒரே ஒரு தங்கக் காசு மூக்கா னூரிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

**பணம் :**

இந்தக் காசு கொங்கு நாட்டில் மொத்தம் 19 ஊர்களிலிருந்து 777 காசுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவை அனைத்தும் தங்கக் காசுகள். இவை உருவத்தில் மிகச் சிறியதாகவும், இரு பக்கங் களிலும் சில உருவங்கள் பொறிக்கப்பெற்றும் காணப்படும்.

**பகோடா :**

இந்தக் காசுகளும் தங்கக் காசுகளாகவே கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் மூன்று பிரிவுகள் இருந்திருக்கின்றன. 1. ஒரு சுவாமி பகோடா (Single Swami pagoda), 2 மூன்று சுவாமி பகோடா 3. பழைய நட்சத்திர பகோடா என்பவனவாகும். மூன்று சுவாமி பகோடாவில நடுவில் திருமாலும் இரு பக்கமும் இரு தேவியரும் இருப்பர். ஒரு சுவாமி பகோடாவில் நெடியோன் உரு மட்டும் காணப்படும். பழைய நட்சத்திர பகோடாவில் நட்சத்திரங்கள் பொறிக்கப்பட்டிருக்கும். இத்தகையக் காசுகள் 8 ஊர்களிலிருந்து 54 காசுகள் கிடைத்துள்ளன.

**முகம்மதியர் காசுகள் :**

தமிழகத்தில் விஜயநகர ஆட்சி முடிவுற்ற பின் சில பகுதிகளில் முகம்மதியர் ஆட்சி தொடங்கியது. கி.பி. 1707-ல் ஔரங்கசீப் இறந்த பிறகு பலர் தில்லி அரியணையில் அமர்ந்தார்கள். கி.பி. 18-ஆம் நூற்றுண்டின் கடைசிப் பகுதியில் இரண்டாம் ஆலங்கீரும் அவரது மகன் இரண்டாம் ஷாஆலமும் சிறிது காலம் ஆட்சி செலுத்தினார்கள். அவர்கள் காலத்திய காசுகள் கொங்குப் பகுதியில் பெருமளவில் கிடைத்துள்ளன. உடுமலைப்பேட்டை வட்டம், கொண்டம்பட்டி என்ற ஊரிலிருந்து மட்டும் ஆலங்கீர் காலத்தியக் காசு 97-உம் இரண்டாம் ஷாஆலத்தின் காசு இரண்டும் கிடைத்துள்ளன. மேலும் இதே வட்டத்தில் பழவடி என்ற ஊரிலிருந்தும், கோபி வட்டம் பழனி கவுண்டன் பாளையம்பட்டூரிலிருந்தும், ஈரோடு வட்டம் அத்தயம் பாளையத்திலிருந்தும் (திப்புவின் காசுகள் 25 ஆலங்கீருடையதும் இரண்டாம் ஷாஆலத்தினுடையதும் 28.) இவர்கள காலத்திய காசுகள் நிரம்பக் கிடைத்துள்ளன இவர்கள் காசுகள் அனைத்தும் வெள்ளிக் காசுகள்.

**திப்பு, ஹைதர் காலத்தியக் காசுகள் :**

கி.பி. 18-ஆம் நூற்றுண்டில் ஆங்கிலேயர்களுக்குப் பெரும் தலைவலியாக இருந்தவர்கள் மைசூரில் ஆட்சிபுரிந்து வந்த ஹைதர் அலியும் அவரது மகன் திப்புசுல்தானும் ஆவர். அவர்கள் பிரெஞ்சுக்காரர்களோடு சேர்ந்து கொண்டு ஆங்கிலேயரை கடைசி வரையில் எதிர்த்து வந்திருக்கின்றனர். அவர் காலத்தியக் காசுகளும் இப்பகுதியில் கிடைத்துள்ளன.

**ஹைதர் அலி :**

ஹைதர்அலி காசுகள் அனைத்தும் தங்கக் காசுகள். மொத்தம் 26 காசுகள் கிடைத்துள்ளன, அவைகளில் ஒரு புறம் உமா

மஹேஸ்வரரின் உருவம், மற்றொரு புறம் 'ஹை' என்று தேவநாகரி யிலும் காணப்படுகின்றன. ஹிஜிரா ஆண்டு 1216 என்று குறிக்கப் பட்டுள்ளது.

**திப்பு :**

திப்புக் காசுகள் தங்கத்திலும் வெள்ளியிலும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. 213 காசுகள் 6 ஊரிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள் ளன. அவைகளில் சிலவற்றில் இரு பக்கங்களிலும் பர்ஷியன் எழுத்தில் பெயர் பொறிக்கப்பெற்றுள்ளன.

**இந்தோ ஆங்கிலக் காசுகள் :**

இந்தியாவை ஆங்கிலேயர் கைப்பற்றியதும் அவர்கள் வெளி யிட்ட பல காசுகளும் இங்கு கிடைத்துள்ளன. இக்காலத்தியக் காசுகளில் முக்கியமானவை பேரரசி விக்டோரியா, ஏழாம் எட்வர்ட், நான்காம் வில்லியம் ஆகியோரது காசுகளாகும். இவைகள், தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களில் காணப்படுகின்றன. மேற் கூறப்பெற்றவை அல்லாது 3 வெனீசு நாட்டுக் காசுகளும் கிடைத் துள்ளன. அவை தங்கக் காசுகளாக உள்ளன.

**நாம் அறிந்து கொள்வது :**

கொங்கு நாடு கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கொண்டே வாணிபத்தில் சிறந்து விளங்கியது என்றும், அதுவும் கிரேக்க நாட் டோடு பெருமளவில் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தது என்றும் தெரிந்து கொள்ள முடிகிறது. சோழர் பாண்டியர் காலங்களில் இப் பகுதியில் ஓரளவு செல்வாக்கு குறைந்திருந்தது என்பதும் பின்னர் விஜயநகர் காலம் தொட்டு திரும்பவும் இப்பகுதி தனது பெருமையை நிலைநாட்டியிருக்கிறது என்பதும் தெரியவருகிறது. ஹைதர் அலி போன்ற மன்னர்கள் தாங்கள் முகம்மதிய மதத்தைச் சேர்ந்தவர் களாக இருப்பினும் 'உமா மஹேஸ்வரர்' போன்ற இந்தக் கடவுளர் களின் உருவங்களைக் காசுகளில் பொறித்து இந்து மக்களிடையே நல்லுறவை வளர்த்துக் கொண்டனர் என்பதும் அறிதற்பாலது.

பிற்சேர்க்கை : காசுகள் கிடைத்த இடங்கள்

| S.No. | Village | Taluk | District | No. of coins and the issuer | Year of Discovery |
|---|---|---|---|---|---|
| 1. | Alampalayam | Dharapuram | Coimbatore | 1 Panam (G.C.) | 1949 |
| 2. | Akilandapuram | Pollachi | ,, | 5 Roman Silver Coins | 1941 |
| 3. | Annamalaihalli | Dharmapuri | Salem | 23 Panams (G.C.) | 1940 |
| 4. | Attayapalayam | Erode | Coimbatore | 53 (S. C.) Tippu-25 Alamgir & Sha Alem II - 28 | 1930 |
| 5. | Athipalayam | Palani | Madurai | 34 Panams (G.C.) | 1968 |
| 6. | Chinchalli | Kollegal | Coimbatore | 6 Panams (G.C.) | 1938 |
| 7. | Chinnagumannur | Dharmapuri | Dharmapuri | 10 Panams (G.C.) | 1959 |
| 8. | Chinnapallapadi | Uthangarai | Dharmapuri | 10 Panams (G.C.) | 1969 |
| 9. | Chintalapadi | Harur | ,, | 57 East India Company Coins (S.C.) | 1940 |
| 10. | Dinnahalli | ,, | ,, | 4 (G.C.) Hyder Ali-1 Old Star Pagoda-3 | 1953 |
| 11. | Echanahalli | Dharmapuri | ,, | 6 Ramaraya Gold Coins | 1927 |
| 12. | Gangadevi | Krishnagiri | ,, | 22 (C.C.) Later Vijayanagar Chieftains | 1951 |
| 13. | Gokapetta | Hosur | ,, | 19 Indo-British Coins Pagodas | 1941 |
| 14. | Gollapalli | Krishnagiri | ,, | 5 Panams (G.C.) | 1924 |

| S.No. | Village | Taluk | District | No. of coin and the issuer | Year of Discoveiy |
|---|---|---|---|---|---|
| 15. | Goolisandhiram | Denkanikotta Sub-Taluk | ,, | 24 Panams (G.C.) with figure Narasimha and Nagari legend | 1938 |
| 16. | Guntakal | Omalur | Salem | 1 Pagoda (G.C.) | 1938 |
| 17. | Harur | Harur | DharmaPuri | 15 Old Star Pagoda Indo-British Coins (G.) | 1967 |
| 18. | Illipalli | Bhavani | Coimbatore | 1 Panam (G C.) | 1949 |
| 19. | Indamangalam | Dharmapuri | Dharmapuri | 8 (S.C.) Tippu AH - 1216-6-1 1217-7-3; 1218-8-4 | 1958 |
| 20. | Irugur | Palladam | Coimbatore | 44 Viraraja Panam (G) | 1939 |
| 21. | Kalayamuttur | Palani | Madurai | 1 Drusus, 1 Tiberius 1 Gladius | 1856 |
| 22. | Kanakkanpalayam | Gopi | Coimbatore | 4 Kongu chera (G.C.) | 1958 |
| 23. | Kamalappalalayam | Omalur | Salem | 4 S. Indian (G.C ) | 1940 |
| 24. | Karadiyur | Erkad Sub Taluk | Salem | 143 Tippu Sultan (S C.) | |
| 25. | Karur | Trichy | Coimbatore | 1 Augustus, 1 Tiberius, 1 Gladius, 1 constantine | 1878, 1806 1931 |
| 26. | Karyapalli | Avanashi | Coimbatore | 13 Indo-British (S.C.) | 1956 |
| 27. | Kattagaram Santhur | Krishnagiri | ,, | 8 Three Swami Pagoda (G.C.) | 1934 |
| 28. | Kemmarapalayam | Avanashi | ,, | 24 Panams (G.C.) 3 Mughal (S.C.) | 1956 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29. | Kilambadi | Erode | ,, | 12 Indo-British (S.C.)<br>William IV and Victoria | 1958 |
| 30. | Kilapalayam | Tiruchengodu | Dharmapuri | 47 East India Co. (S.C.) | 1931 |
| 31. | Kolattupalayam | Dharapuram | Coimbatore | 1 Venetian (G.C.) | 1934 |
| 32. | Kondampattai | Udumalpet | Coimbatore | 99 Indo-British (S.C.) Alamgir-97<br>Shah Alem-2 | 1939 |
| 33. | Kurichikottai | ,, | ,, | 14 Indo-British Coins 1835 & 1840 | 1933 |
| 34. | Medepalli | Krishnagiri | Dharmapuri | 1 Kongu Chera (G.C.) Caparlsoned<br>elephant with floral design | 1970 |
| 35. | Maramangalam, U. | Omalur | Salem | 234 Panams (G.C.) 18th Century | 1949 |
| 36. | Marulpatti | Udumalpet | Salem | 121 East India Co. (Arcot Rs.) | 1925 |
| 37. | Mookanur | Omalur | Salem | 46 Mysore Wadiar (G.C.)<br>Krishnaraya-Narasaraya-24<br>Pagoda - 1<br>Ramaraya -20<br>Mysore Cash - 1 | 1927 |
| 38. | Nanjai Puliyampatti | Gopi | Coimbatore | 42 Indo-Britjsh (S.C.) | 1937 |
| 39. | Nellikuppam | Avanashi | ,, | 13 Indo-British (S.C.)<br>Vishnu and his consorts | 1955 |
| 40. | North Budinatham | Udumalpet | ,, | 1398 Roman Silver Coins | 1949 |

| S.No. | Village | Taluk | District | No. of coins and the issuer | Year of Discovery |
|---|---|---|---|---|---|
| 41. | Olasalpatti | Harur | Salem | 19 Indo-British Pagoda | 1941 |
| 42. | Paduvampalli | Palladam | Coimbatore | 93 Gold Panams | 1940 |
| 43. | Palani Goundan Palayampattur | Gobi | ,, | 24 Alamgir IV<br>2 Shaw Alem II (S.C.) | 1938 |
| 44. | Palavadi | Udumalpet | ,, | 71 Shaw Alem II (S.C.) | 1938 |
| 45. | Pallapatti | Salem | Salem | 12 Silver Coins Victoria - 10<br>Edward VII - 2 | 1970 |
| 46. | Pattavur | Rasipuram | Salem | 1 G. C. & 6. S. C. | 1966 |
| 47. | Peramiam | Dharapuram | ,, | 14 Indo British (C. C.) | 1949 |
| 48. | Perigai | Hosur | ,, | 7 S. C. Victoria 6 Alangir II. 1 | 1961 |
| 49. | Pollachi | Pollachi | Coimbatore | 1 Augustus G. C. I Tiberius | 1800 |
| 50. | Ponneri | Harur | Dharmapuai | 7 Single Swami Pagodas | 1967 |
| 51. | Puttur | Dharapuram | Coimbatore | 89 Shaw Alem II (S. C.) | 1969 |
| 52. | Prychuhalli | Dharmapuri | Dharmapuri | 14 (G. C.) Mysore Sultan 1-8<br>Three Swami Pagoda 9-14<br>(Uma Maheswar in Obverse) | 1961 |
| 53. | Ramakrishnapatti | Uthangarai | ,, | 34 Indo British Arcot (C. C) | 1931 |
| 54. | Sevanampatti | Krishnagiri | ,, | 26 Indo-British (S. C.) | 1956 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 55. | Simayapudur | Dharapuram | Coimbatore | 22 Panams (G. C.) | 1938 |
| 56. | Sirumugai | Avanashi | ,, | 22 Queen Victoria (S. C.) | 1935 |
| 57. | Sivagiri | Erode | ,, | 41 Panams (G. C) | 1940 |
| 58. | Talakkarai | Palladam | ,, | 47 Panams (G. C) | 1956 |
| 59. | Tayirapalayam | Erode | ,, | 193 Punch marked Silver Coins | 1962 |
| 60. | Tippasandiam | Tenkanikotta | Dharmapuri | 12 Queen Victoria (S. C) | 1972 |
| 61. | Tiruchinnapuram | Chidambaram | S. Arcot | 11 Kongu Chera (G. C) ERUVA 1-6 | 1969 |
| 62. | Vadambacheri | Palladam | Coimbatore | 44 (S. C & 2 (G. C) Indo-British Arcot Rupees | 1934 |
| 63. | Vakkampalayam | Pollachi | ,, | 48 Punch marked Silver Coins | 1961 |
| 64. | Vanavasi | Omalur | Salem | 19 Gold and Silver Coins Gold-Panams-Silver-Mughal | 1956 |
| 65. | Vadagapalayam | Pollachi | Coimbatore | 2 Venetian (G. C) (RAINER) | 1969 |
| 66. | Velampundi | Dharapuram | ,, | 50 Queen Vitoria (S. C) | 1934 |
| 67. | Vellalore | Coimbatore | ,, | 118 Augustus & Ceaser (S.C) | 1931 |
| 68. | Vemandanpalayam | Gopichettipalayam | ,, | 59 (G. C) Single Swami Pagoda-4 Hyder Ali 5-21 with the figure of Uma Maheswara and initial Hai' in Nagari. | |

| S.No. | Village | Taluk | District | No. of coins and the issuer | Year of Discovery |
|---|---|---|---|---|---|
| | | | | Tippu 22 - 42 Pagoda with persian inscription on both sides | 1958 |
| 69. | Veppalampatti | Krishnagiri | Salem | 76 Panams (G. C) | 1933 |
| 70. | Virigalpatti | Udumalpet | Coimbatore | 1 Panam (G. C) | 1949 |

★ I am much grateful to the Director of museums for having kindly permitted me to go throhug catalogue of coins available with them.

# ஓமலூர்க் கோட்டை

மா. சந்திரமூர்த்தி M.A.

**கொங்கு நாட்டுக் கோட்டைகள்:**

கொங்குநாடு மலையரண் மிகுந்த நாடாதலின் எங்கும் கோட்டைகள் மலிந்து காணப்படுகின்றன. அதியமான் கோட்டை (அதமன் கோட்டை), அரவக் கோட்டை, அந்தியூர் கோட்டை, ஆத்தூர் கோட்டை, பழைய கோட்டை, புதுக்கோட்டை, பெரியக் கோட்டை, இளைய கோட்டை, தென்கரைக் கோட்டை, தேன்கனிக் கோட்டை, தனநாயக்கன் கோட்டை, சங்ககிரிக் கோட்டை, நாமக்கல் கோட்டை, ஈரோடு கோட்டை, குறிஞ்சிக் கோட்டை, மல்லிக் கோட்டை, ஓமலூர் கோட்டை, இன்னபிற கோட்டைகளைப்பற்றி இலக்கியமும் கல்வெட்டும் குறிக்கின்றன. கொங்கு மண்டல சதகம் 'திகழ் சக்தி மங்கை அரவக் கோட்டை' என்றும், 'செந்திரு விளங்கவளர் கோட்டை' என்றும், 'நீள் குறிஞ்சிக் கோட்டை' என்றும், 'பேர் பெறு விருப்பாட்சி பெரிய நற்கோட்டை' என்றும், 'பார் புகழு மாம்புறைய ஞேடிடைய கோட்டை' என்றும், 'தாதுலவு பொன்னேரி புதுப்பட்டி புதுக்கோட்டை' என்றும், கோட்டைச் சூழ்ந்த நாடுகளையும் அதைச் சார்ந்த ஊர்களையும் விரித்துக் கூறும்[1]. இவை யாவும் பல்வேறு காலங்களில் பல்வேறு வேந்தர்களால் எழுப்பப்பட்டவையாகும். இக் கோட்டைகளில் மிகப்பல சிதைந்து அவற்றின் அடிச்சுவடுகள் மட்டுமே, இன்று நின்று நிலைப்பெற்று வரலாற்றை நினைவுபடுத்துகின்றன. காலத்தால் அழிந்தது போக எஞ்சியுள்ள சில கோட்டைகள் மட்டுமே வரலாற்று ஆய்வுக்குத் துணைசெய்கின்றன. இதுவரை ஆய்வு செய்யப்படாத கோட்டைகளில் ஓமலூர்க் கோட்டை குறிப்பிடத்தக்கதாகும். சமீபத்தில் தமிழக தொல்லியல் துறையினரால் இக்கோட்டை, அறிஞர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பெற்றது.

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் கிராமத்தில் சரபங்கை நதிக்கரையில் சுமார் 25 ஏக்கர் பரப்பளவில், ஓமலூர் கோட்டை அமைந்துள்ளது. இக்கோட்டை மேட்டூர் முத்து நாயக்கன்பட்டி, தாரமங்கலம் செல்லும் பெரும் பாதையில் அமைந்துள்ளது.

**தோன்மை :**

இவ்வூர் 'அமரூர்' என்றும், 'அமலூர்'[2], என்றும், 'ஆரோமலூர்'[3] என்றும், 'வொம்பி நெல்லூர்' என்றும்,[3] 'வாம்லேர்' என்றும்[4] 'வாமலூர் நாடு' என்றும்,[5] 'ஓமலூர்' என்றும் பல்வேறு பெயர்களில் வழங்கப்பட்டு வந்துள்ளது. சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் 'வல்வேற் கட்டி' என்ற வமிசத்தார் இப்பகுதியில் தான் குறுநில மன்னர்களாக ஆண்டனர்[6]. இவர்கள் கரிகால் சோழனுக்கும், பின்னை அதிகமான் மரபினருக்கும் கீழிருந்து அரசாண்டனர் என அறியலாம். இவ் 'வல்வேற்கட்டி' களே பின்னை 'கட்டி முதலிகள்' என அழைக்கப்பட்டனர் எனக் கருதலாம். தொல் புகழையும், வரலாற்றுச் சிறப்பையும் தாங்கி நிற்கும் ஓமலூர் தொன்மை சிறப்பு வாய்ந்ததென இங்குள்ள தொல்பொருள்கள் எடுத்துக்காட்டு கின்றன. ஓமலூர்க் கோட்டை அகழியின் அடிப்பகுதியில் சங்க காலத்தைச் சேர்ந்த கருப்பு—சிகப்பு பானை ஓடுகள் நிறைய காணக் கிடைப்பதால், பண்டு இப்பகுதி கோட்டை, கொத்தளங்களின்றி வளம் செழித்த மக்கள் வாழ்ந்த ஊராக விளங்கியுள்ளது என்பது தேற்றம்.

அகழியை வெட்டி அம்மண்ணைக் கொண்டு கோட்டை சுவர் களையும், கொத்தளங்களையும் அமைத்ததால் இன்றும் கோட்டை மேடுகளில் அக்கால பானை ஓடுகளும், தொன்மையான சின்னங் களும் காணக் கிடைக்கின்றன. மற்றும் ஓமலூரைச் சேர்ந்த பகுதி களில் பல புதைத்தாழிகளும், முதுமக்கள் தாழிகளும் கிடைக் கின்றன. குறிப்பாக ஒரு தாழியினுள் இரண்டு சிறிய பானைகளும், எலும்புத் துண்டுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. புதைத் தாழி களையும், முதுமக்கள் சாடிகளையும் நோக்கும் பொழுது அக்காலத்தில் இறந்தாரை எவ்வாறு அடக்கம் செய்தனர் என அறிகிறோம். இதனை 'தாழ்வயினடப்போர், தாழியிற் கவிப்போர்' என மணிமேகலை எடுத்துக்கூறும்.[7] கோட்டை அமைந்துள்ள சரபங்கை நதிக்கரைப் பகுதியில் கல்லெழுத்துகள் பொறிக்கப்படாத நடுகல் என்று காணப்படுகிறது. அந்நடுகல்லில் வாளை ஏந்திய வீரனையும், அவ்வீரனின் அருகே நின்ற வீரமகளையும் சிற்பமாக செதுக்கப் பட்டுள்ளன. இந்நடுகல் சரபங்கை நதிக்கரையில் நடந்து முடிந்த போரையும், அப்போரில் வீரமரணம் எய்திய வீரமறவனுக்கு எடுக்கப்பட்ட நினைவுச் சின்னத்தையும் குறிப்பதாக இருக்கலாம்.

இவ்வூர் தொன்று தொட்டு அமர்களமாக இருந்ததற்கு காரண மாக 'அமரூர்' (அமர்-ஊர்) என காரணப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டு வந்துள்ளது எனவும் அறிகிறோம். இப்பகுதி

அதிகமான், சோழர், சத்தியபுத்திரர், போசளர், கொங்குச் சோழர், பாண்டியர், விசய நகர மன்னர், மைசூர் மன்னர், கொங்கு தேச ராஜாக்கள், கட்டி முதலிகள், ஆங்கிலேயர் இன்ன பிறரால் தொடர்ந்து கோலோச்சிய திருநகராகவும், போர்க்களத்தின் மையமாகவும் இப்பகுதி இருந்துவந்திருக்கிறது என்பதை வரலாற்றுச் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன.

**கோட்டை அமைப்பு:**


ஓமலூர்க் கோட்டை சரபங்கை நதிக்கரையில் அமைந்துள்ளது. இக்கோட்டை இரண்டு சுற்றுமதில்களால் சூழப்பட்டுள்ளது. இரண்டு கோட்டை மதிலுக்கு இடையில் ஆழ்ந்து அகன்ற அகழி ஒன்றும் காணப்படுகிறது. வெளிக் கோட்டையைச் சுற்றிலும், சரபங்கை நதி இரண்டு கிளையாக பிரிந்து கிழக்கு மேற்காக ஓடுகின்றன. இந்நதி இயற்கையில் அமைந்த நீர் அரணாக உள்ளது. இவ்விரண்டு நதிகளின் நடுவே உள்ள பகுதியில் கோட்டை அமைந்துள்ளது.

இம்மாபெரும் கோட்டையின் நுழைவாயில் வடக்கு நோக்கி உள்ளது. இக்கோட்டையின் வடதிசையில்தான் 'சேர்வராயன் மலைத் தொடர்'[8] என்று அழைக்கப்படும் 'சேரன் அரையன் மலைத் தொடர்' காணப்படுகின்றன. அப்பகுதியில்தான் தோப்பூர்மலையும், குதிரை மலையும் உள்ளன. இம்மலைத் தொடர்களில்தான் காவரிபுரம் கணவாய், தோப்பூர் கணவாய், மஞ்சவாடிக் கணவாய், முதலியன அமைந்துள்ளன. இவ்வழியே வரும் வேற்றுப் படைகளை தாக்கும் வகையில் இக்கோட்டை அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே கட்டி முதலிகளின் இரண்டாவது தலைநகரான அமரகுந்தி[9] (அமர்ந்த குடி)யை காக்கும் வகையிலும் இக்கோட்டை அமைக்கப் பட்டுள்ளது

இக்கோட்டை நுழைவாயில் மேற்குப் பகுதியில் ஆழமான பரந்த நீர்த் தேக்கமும் உள்ளது. வெளிக்கோட்டை மதிலைச் சுற்றிலும் 8 கொத்தளங்கள் உள்ளன. அதுபோல் உள்கோட்டை மதிலைச் சுற்றிலும் 6 கொத்தளங்கள் உள்ளன. இக்கொத்தளங்கள் குன்றுகள் போல் மண்ணால் எழுப்பப்பட்டுள்ளன. இதன் உச்சியில் கருங்கல் பாறைகள் உள்ளன. அதன் மேல் பீரங்கிகள் வைக்க ஏதுவான குழியும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கொத்தளங்கள் அருகில் வீரர்கள் நின்று கணவாய் வழி வரும் பகைவர்களை அறிவர் என்று சொல்லப்படுகிறது கோட்டை சுவர்கள் மேல்உள்ள கொத்தளங்கள் அழிந்த நிலையில் உள்ளன. கட்டி முதலிகளின் ஆறு கோட்டை இதுவும் ஒன்ருகக் கருதப்படுகிறது. (பின்பக்க வரைப்படம் காண்க)

**கோயில்கள்:**

இக்கோட்டையின் உள்ளே இரண்டு கோயில்கள் உள்ளன. அவையாவன 1. வசந்தேஸ்வரர் கோயில், 2. விஜய ராகவ பெருமாள் கோயில்.




சிவன் கோயில், கோட்டையின் உள்ளே வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ளது. இச்சிவன் கோயில் தாரமங்கலத்தில் உள்ள இளமீஸ்வரர் கோயிலைப் போன்று திராவிடக் கலைப்பாணியை ஒத்து அமைந்துள்ளது. இவையும் கட்டி முதலிகளின் காலத்தவையே ஆகும். இங்கு அம்மன் சிலையும், பைரவர் சிலையும், லிங்கமும் தான் எஞ்சிய சிற்பங்களாக காணப்படுகின்றன. இக்

கோயிலின் உண்ணாழி. முகமண்டபத்தை தவிர மற்ற பகுதிகள் சிதைந்த நிலையில் உள்ளன. இவ்வாறு பெருமாள் கோயிலும் கட்டி முதலி கலைப்பாணியைத் தழுவி அமைந்துள்ளது.

**ஓவியங்கள் :**

இக்கோயிலின் முன்மண்டப விதானங்களில் இரண்டு அடுக்கில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. முதல் அடுக்கில் உள்ள ஓவியங்கள் நடமாடும் மகளிரையும், நாட்டியத்திற்கு ஏற்ப இசைக்கும் இசைக் கருவிகளை ஏந்திய கலைஞர்களையும் சித்தரிக்கின்றன. இவ்வோவியங்கள் கட்டி முதலி காலத்தவை கட்டி முதலி கால ஓவியங்கள் தமிழகத்தில் கிடைப்பது இதுவே முதல் தடவையாகும். இவ்வோவியங்கள் நாயக்கர் கால மரபை தழுவி வரையப் பட்டுள்ளன. இரண்டு அடுக்கு ஓவியங்களும் சிதைந்த நிலையில் உள்ளன.

இம்மாபெரும் கோட்டையையும், மனங்கவரும் கோயிலையும் எழில் வாய்ந்த ஓவியங்களையும் உருவாக்கி தந்தவர்கள்தான் கட்டி முதலிகள். இவர்கள் யார்? எங்கிருந்து வந்தனர். எப்பகுதியில் கோலோச்சினர்? யாருடன் போரிட்டனர். அவர்களின் முதலும் முடிவும் யாது? இக்கட்டி முதலிகளுக்கும் ஓமலூர் கோட்டைக்கும் உள்ள தொடர்பு யாது? என விஞக் குறிகள் தொடர்ந்து எழுகின்றன.

**சங்க இலக்கியம் காட்டும் கட்டி :**

சங்க இலக்கியங்கள் கட்டி என்ற குறுநில மன்னர்களைக் குறிக் கின்றன. பெரும்பூட்சென்னி என்ற சோழ மன்னன் கழுமலப் போர்களத்தில் நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை, கணையன் என்ற எழுவரை முறியடித்தான் என அகம் கூறும்.[10] இச்சோழ வேந்தர்கள் பல முறை சேரர்களை எதிர்த்து கழுமலத்தில் போர்தொடுத்து வெற்றி வாகை சூடியுள்ளனர்.[11] இச்சோழர்களை எதிர்த்த கட்டிகளைப் பற்றி இலக்கியம் கூறும். ,இவர்களைப் பற்றி குறுந்தொகையும்,

> 'குல்லைக் கண்ணி வடுகர் முனையது
> வல்வேற் கட்டி நன்னாட் டும்பர்'

என்று புகழ்ந்து கூறும்[12] இங்கு 'வல்வேற் கட்டி' எனக் குறித்தலின் இவர்களின் சிறப்பு விளங்கும். இக்கட்டியும் பாணன் என்ற குறுநில மன்னனும் சேர்ந்து தெற்கே சோழன் தித்தன் வெளியனின் தலைநகரான உறந்தை மீது போர் தொடுத்தனர் என

அகம் விரித்துக் கூறும்[13]. மறுமுறை இக்கட்டி என்பான் குறுநில மன்னர்களின் துணையுடன் சோழனை எதிர்த்து வந்தான். அது பொழுது சோழர் படைத்தலைவன் பொறையன் என்பான் இவர்களை எதிர்த்து வீரமரணம் அடைந்தான். இச்செய்தி கேட்ட சோழ வேந்தன் தானே போர்க்களத்தில் புகுந்து வீரப்போர் புரிந்து கணையனை சிறைபிடித்து, கழுமலத்தைக் கைப்பற்றினான்.[14] இக் கணையன் என்பான் கழுமலத்தை சேர்ந்தவனாயிருத்தல் வேண்டும். கணையனும் கட்டியும் இணைந்து சோழனை எதிர்த்தலிலிருந்து, இவ்விருவரும் நண்பர்கள் எனத் தெரிகிறது. இக்கட்டி தமிழ்நாட்டின் வடபகுதியில் கோலோச்சிய குறுநில மன்னன் என்பர்.[15] இன்னும் சிலர் கட்டி என்பான் சேரர் படைத்தலைவரில் ஒருவன் என்பர்.[16] கணையனும் கட்டியும் இணைந்து வந்து சோழனை எதிர்த்தனர் என்றலின் இவ்விருவரும் தன்னாட்சி செலுத்திய இருவேறு மன்னர்கள் என அறியலாம். இதன்பின் இக்கட்டிகளைப் பற்றிய இலக்கியக் குறிப்புகள் கிடைத்தில.

**பிற்கால கட்டிகள்:**

கொங்கு நாட்டில் கி.பி. 10-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து, இருந்துவந்த கட்டிமுதலிகள் என்பார் வெள்ளாள—கவுண்டர்களின் வழிவந்தவர்களே என்ற மரபு இன்றும் மக்களிடையே நிலவிவருகிறது. சில வரலாற்று ஆய்வாளர்களும் இம்முதலியார்கள் வெள்ளாளர்களின் வழித்தோன்றல்களே என்று குறித்துள்ளனர்.[17] 'வேற்கட்டி' என்றும் 'குன்ற கட்டி' என்றும் இலக்கியங்களும் கல்வெட்டுகளும் விரித்துரைக்கும் இக்கட்டிகள் இன்றும் கொங்கு நாட்டில் சில பகுதியில் காணப்படுகின்றனர். இவர்கள் தங்களை பவழக்—கட்டி வன்னியர், என்றும், கால் கட்டி வன்னியர்' என்றும் அழைத்துக் கொள்கின்றனர். இவர்கள் மேற் குறித்த வெள்ளாள-கவுண்டரின் பிரிவுதான் என்று உறுதியாதலின் கட்டிகளும் கவுண்டர்களும் ஒரு மரபினரே என கருதலாம்.[18]

கி.பி. 7,8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நடுகல் ஒன்று 'குன்ற கட்டி' என்பாரைக் குறிக்கிறது.[19] கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நடுகல் ஒன்று குமாரமங்கல கவுண்டன் என்பான் ஆனிரை மீட்டு வீரமரணம் அமைந்ததை குறிக்கிறது.[20] இக்கல்வெட்டுகள் முறையே எடக்கல், சாத்தனூரில் கிடைத்துள்ளன. எனவே 7,8—ஆம் நூற்றாண்டுகளில் வீர மறவர்களாக இருந்த கட்டிகளைப் பற்றியும் கவுண்டர்களைப் பற்றியும் செய்திகள் கல்வெட்டுகளால் அறியக்கிடக்கின்றன. கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று பிரம்மாதி ராஜன் மகன் நன்னி காமுண்டன் என்பான் நிலக்கொடை வழங்கியதை கூறுகிறது. நெல்வாய்

கோயிலில் உள்ள இக்கல்வெட்டு மூலம் இக்கவுண்டர்கள் தகடூர் நாட்டின் பகுதியை ஆண்டுவந்துள்ளனர் என அறிகிறோம். இச் சமூகத்தார் பிற்காலத்தில் வாணிபத்திலும், பொது வேலைகளிலும் ஈடுபட்டு சமூகத்தில் முதலிடம் பெற்றதால் 'முதலி' என அழைக்கப் பட்டனர். வெள்ளாள-கவுண்டர்களுக்கும் 'முதலி' என்ற பட்டப் பெயர்கள் உண்டு என தர்ஸ்டன் கருதுவர்.[21] இவர்கள் பின்னை கட்டி-முதலி என அழைக்கப்பட்டிருக்கவேண்டும்.

இக்கட்டி முதலிகளை—பற்றிய கல்வெட்டுகள் கி.பி. 10-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இருந்து கொங்கு மண்டலத்தில் கிடைக்கின்றன. கோவை மாவட்டம் பவானிக்கூடல் கல்வெட்டு குறிப்பாக முதலிகளைப் பற்றியும் சிறப்பாக இம்மடிகட்டி முதலியைப் பற்றியும் குறிக்கிறது [22] கி.பி. 1289-ல் பொறிக்கப்பட்ட ஜடாவர்ம சுந்தர பாண்டியர் கல்வெட்டுகள் 'தாரமங்கலத்து முதலி'களைக் குறிக்கிறது.[23] கி பி. 1289-ஆம் ஆண்டு கல்வெட்டு 'தாரமங்கலத்து ஒன்பது முதலி'களைப் பற்றி குறிக்கிறது. இம்முதலிகள் தாரமங்கலத் தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்துவந்துள்ளனர். பல கோயில்களையும் கோட்டைகளையும் எழுப்பியுள்ளனர். கோயிலுக்கு நிலத்தையும், கிராமத்தையும் வழங்கியுள்ளனர்.[24] புலிக்கொடியை தங்கள் இலச்சினையாக ஏற்றுள்ளனர்.[25] விஜயநகர சாம்ராஜ்ய பேரெழுச்சியின் பொழுது அம்மன்னர்களின் கீழ் இப்பகுதியை ஆண்டுவந்துள்ளனர். கிருஷ்ணதேவராயருக்குப் பின் இவர்கள் குறுநில மன்னர்களாக இருந்துவந்துள்ளனர். சதாசிவராயர் கல்வெட்டுகளிலும் இக்கட்டி முதலிகள் சிறப்பாக குறிக்கப்பட்டுள் ளனர்.[26] இன்னம் எலகம்பட்டி கல்வெட்டுகளும்,[27] தாரமங்கலத்து கல்வெட்டுகளும்[28] இக்கட்டி முதலிகளின் சிறப்பைக் குறிக்கின்றன.

இக்கட்டி முதலிகளின் நாட்டின் எல்லை கிழக்கே தலைவாசல் முதல் மேற்கே தாராபுரம் வரையிலும், தெற்கே கரூர் வரையிலும் பரவியிருந்தது என அறிகிறோம்.[29] இக்கட்டி முதலிகளின் தலைநகராகத் தாரமங்கலமும், இரண்டாவது தலைநகராக அமரகுந்தியும் விளங்கியது. இன்னம் சங்ககிரிதுர்க், திருச்செங்கோடு, இடங்கசாலை, பூலாம்பட்டி, ஆத்தூர், ஓமலூர் போன்ற இடங்களில் இக்கட்டி முதலிகள் விட்டுச் சென்ற தடயங்கள் வரலாற்று நினைவுச் சின்னங்களாக இன்றும் உள்ளன. காவிரிபுரம் அருகே கஜல்கட்டி கணவாய் குறிக்கப்படுகின்றது.[30] இக்கணவாயும் கட்டி முதலிகளின் பெயரில் அழைக்கப்படுவது சிறப்புடையதாகும். இக்கட்டி முதலிகள் எழுப்பிய கோட்டைகள் பெரியசேலம், நாமக்கல், சேந்தமங்கலம், அனந்தகிரி, பரமத்தி, சேமாத்தூர், ஓமலூர் முதலிய இடங்களில் உள்ளன.[31] இவையாவும் இன்று சிதைந்த நிலையில் காணப்படு

கின்றன. இவ்வாறு கல்வெட்டுகளும், தொல்பொருள் நினைவுச் சின்னங்களும் கட்டி முதலிகளின் சிறப்பை எடுத்துக் கூறுகின்றன.

கி.பி. 1565-ல் நடந்து முடிந்த தலைக்கோட்டைப் போருக்கும் பின்னர் விஜய நகரப் பேரரசு வீழ்ச்சியுற்றது கி.பி. 1569-70 ஏற்பட்ட சதாசிவராயரின் மறைவுக்கு பிறகு கி.பி. 1575-வரை திருமலைராயர் சில பகுதிகளில் ஆண்டுவந்தாலும் விசயநகர மன்னர்கள் செல்வாக்கிழந்திருந்தனர். அதுபொழுது இப்பகுதியில் மதுரை நாயக்கர்களின் வரலாற்றுத் தொடர்பை காண்கிறோம். இக்கட்டிகள் இம்மதுரை நாயக்கர்களின் செல்வாக்கை பெற்று அவர்களின் கீழ் ஆண்டுவந்தனர். கி.பி. 1623-ல் அரியணை ஏறிய திருமலை நாயக்கர், தன் காலத்தில் அவன் பகுதிகளை 72 பாளையங்களாக பிரித்தான். அப்பாளையங்களை நிர்வகிக்கும் பாளையக்காரர்களில் கட்டி முதலியாரும், இராமசந்திர நாயக்கரும் குறிப்பிடத் தக்கவர் ஆவர்[32] இராமசந்திர நாயக்கரின் காலம் (1652-2718) எனக் குறிக்கப்படுதலின்[33] இக்கட்டி முதலியாரும் சமகாலத்தவரே எனக் கருதலாம். இக்கட்டி முதலியாரின் முழுப்பெயர் யாது எனத் தெரியவில்லை. ஆனால் இக்கட்டி முதலிக்கு முன் கி.பி. 1641-ஆம் ஆண்டிற்கு முன் சத்தியமங்கலம், சாம்பள்ளி, ஓமலூர் போன்ற பகுதியை ஆண்டுவந்தவர் வணங்காமுடி முதலி என அறிகிறோம். ஆதலின் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற ஓமலூர் கோட்டையும் வணங்காமுடி முதலியாலேயே எழுப்பப்பட்டிருக்க வேண்டும். இவ்வோமலூர்க் கோட்டை கி பி. 15-ஆம் நூற்றுண்டின் இறுதிப் பகுதியிலோ அல்லது 16-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலோ கட்டப்பட்டிருக்க வேண்டும் எனக் கொள்ளலாம்.

வணங்காமுடி முதலி இப்பகுதியை ஆண்டுவந்த பொழுது கி.பி. 1641-ஆம் ஆண்டு கண்டீரவ நரச ராஜா என்ற மைசூர் மன்னன் காவிரிபுரம் கணவாயைக் கடந்து, வணங்காமுடி கட்டி முதலியை வென்று சத்தியமங்கலம், சாம்பள்ளி போன்ற ஊர்களைக் கைப்பற்றினுன். கி.பி. 1667-ஆம் ஆண்டு தொட்ட தேவராஜா என்ற மைசூர் மன்னர் ஈரோடு, தாராபுரம் போன்ற பகுதிகளை நாயக்கர்களிடமிருந்தும் ஓமலூர் கோட்டையை கட்டி முதலிகளிடமிருந்தும் கைப்பற்றினுன் என அறிகிறோம். எனவே 16-ஆம் நூற்றுண்டின் இறுதிப்பகுதியில் கொங்கு நாட்டின் ஒரு பகுதியை சொக்கநாத நாயக்கரும், மற்றெரு பகுதியை வணங்காமுடி முதலியும் ஆண்டுவந்தனர் என அறியலாம். எனவே கட்டி முதலிகளிடம் எஞ்சியிருந்த ஓமலூரை மன்னர் 1667-ல் கைப்பற்றினர். கி பி. 1688—89-ஆம் ஆண்டில் சிக்க வேதராஜா எஞ்சியுள்ள கொங்கு நாட்டின் பெரும்பகுதியைக் கைப்பற்றினுன்[34].

கி.பி. 1768-ல் மேஜர் பிட்ஜெரால்டு தலைமையில் 5000 வீரர்களைக் கொண்ட பெரும்படை காவிரிபுரம் கணவாயைக் கடந்து ஹைதரைத் துரத்தி வந்தன.[85] அதுபொழுது 1768 டிசம்பர் மாதம் 6-ம் நாள் தர்மபுரியையும், 7-ம் நாள் தென்கரைக் கோட்டையையும், 12-ம் நாள் ஓமலூர் கோட்டையையும், 15—ம் நாள் சேலத்தையும்,17—ம் நாள் கரூரையும்,25—ம் நாள் ஈரோட்டையும் 31—ம் நாள் திண்டுகல்லையும் தொடர்ந்து கைப்பற்றினர். கி பி. 1768—ம் ஆண்டு டிசம்பர் கடைசி தேதியில் பாலக்கோடு, தோப்பூர் கணவாய் வழிவந்த ஹைதர்அலி, ஓமலூரை ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றினான். மற்றும் ஹைதர்அலி ஆங்கிலேயர் கைப்பற்றிய பகுதிகளை மீண்டும் கைப்பற்றினான்.[86] இறுதியில் ஹைதர்அலி காவிரிபுரத்தை கைப்பற்றி கர்நாடகம் சென்றான் என அறிகிறோம்.[87] பின் 1790-ம் ஆண்டு இக்கோட்டை திப்புவின் வசம் இருந்து வந்தது.

இவ்வாறு ஓமலூர் கோட்டை பகுதியில் கி.பி. 16—ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்த 17ம் நூற்றாண்டின் இறுதி பகுதி வரையில் (கி.பி. 1641, 1667, 1688-89, 1704, 1767-68, 1790) தொடர்ந்து நடந்து முடிந்த படை எழுச்சியால் கோட்டை பகுதிகள் அழிவுற்றன. கட்டி முதலிகளின் கலைச் சின்னங்கள் சிதைவுற்றன. கட்டி முதலிகளின் பரம்பரை அழிந்தொழிந்தன.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க இக்கோட்டை இன்று அழகிழந்து, அழிவுற்று வினாக்குறி போல் வீழ்ந்து கிடக்கின்றது.

## குறிப்புகள்


1. Kongu-mandala Satagam
2. Kongu- mandala Satagam
3. F.J. Richards 'Salem Distsrict Gazetteer' Vol.I. Part-II- pp. 262.
4. Ibid – pp. 262.
5. A.R.E. Reports.
6. Silappathikaram . XXV. II. 156-157.
7. Manimekalai. Can. VI Line. 66.
8. Welsh 'Military Reminiscences' Vol. II. pp. 190-(1830)
9. F.J. Richards 'Salem District Gazetteer' Vol. I. Part I. pp. 67-69.

10. Agam (44)
11. M. Chandramurti 'History of Kudandai' Thanja. Mani. Oc. 71.
12. Kuruntokai (11: 5-6)
13. Agam (226)
14. Agam (44).
15. Dr. A. Durai Arangasamy 'Sangakala Sirappu peyarkal'
16. 'Tamil Encyclopedia' Part III. pp. 40.
17. Dr. M. Arokiasamy 'The Kongu Country' pp. 271.
18. Brahmarayar 'Koundar' 'Kongu.' August '72 pp. 208-209.
19. T.N.E. 66/1971.
20. T.N.E, 37/1971
21. E. Thurston 'Castes and Tribes of Southern India' Vol. V. pp. 84.
22. XXV. II. 156-157.
23. 23 of 1900.
24. 27 of 1900
25. 23 of 1900
26. 27 of 1900; 5 of 1900.
27. V. Ranachari. Inss. II. p. 139.
28. 29 of 1900.
29. Salem District Gazetteer - Vol I. pp. 69.
30. Buchanan, Francis- 'Journey from Madras through Mysore, Carnataka and Malabar, 1807. Vol. I. 400-422.
31. W. Taylor - 'A Catalogue of Oriental Historical Mss. (Catalogue Raisonne) ii - 163-167.
32. Salem District Gazette Vol. I. Part I. pp. 58,
33. Mackenzie Manuscripitions. Vol. I. pp. 79.
34. G.H. Rao- ' Mysore Ga zetter ' Part IV. pp. 2451.
35. Bhevan- ' Thirty years in India I. pp. 53.
36. B.S. Baligos Madras District Gazetteer-Coimbatore'. pp. 88, 1966.
37. G.H. Rao. 'Mysore District Gazetteer' Part. EI. pp. 2499.

# சமணம்

Dr. அர. சம்பகலட்சுமி

தமிழ் நாட்டில் சமணம் சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்பே பரவியிருந்தது. கி.மு. 2-ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 7-8 நூற்றாண்டுகள் வரை மிக்க செல்வாக்குடனும், பெருமையுடனும், திகழ்ந்தது. பின்னல், சைவ – வைணவப் பெரியார்களும், தத்துவ மேதைகளும் தோன்றி சமண – பௌத்த மதங்களின் பெருமை குறையக் காரணமாயினர், இருப்பினும், சமணமதத்தின் புகழ் முழுவதும் குன்றுமல் பல இடங்களில் கோயில்களும், மடங்களும் தொடர்ந்து 16-17 நூற்றாண்டுகள் வரை செயல்பட்டு வந்தன என்பதற்கு போதிய சான்றுகள் கல்வெட்டுகளின் மூலம் நமக்குக் கிடைக்கின்றன.

தமிழ் நாட்டிற்கு சமணம் மைசூர் மாநிலத்தின் வழியாக வந்திருக்க வேண்டும். கி.மு. 4-ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே, அதாவது மௌரிய அரசன் சந்திரகுப்தன் காலத்திலேயே, சமணத் துறவிகள் வடநாட்டிலிருந்து மைசூர் மாநிலத்திலுள்ள சிரவண பெள்குள எனுமிடத்திற்கு வந்தனர் என்பதற்கும், அங்கிருந்து மேலும் தெற்கு நோக்கி தமிழ்நாட்டை அடைந்தனர் என்பதற்கும் பல சான்றுகள் உள்ளன. ஆனல், மைசூர் மாநிலத்தில் சமணர் பற்றிய கல்வெட்டுச் செய்திகள் கி.பி. -ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தான் கிடைக்கின்றன. தமிழ்நாட்டிலோ சமணர் பற்றிய செய்திகள் கி.மு. 2-ம் நூற்றாண்டிலிருந்து பிராமி வரிவடிவம் கொண்ட தமிழி என அழைக்கப்படும் எழுத்தில் உள்ள கல்வெட்டுகளிலிருந்தே கிடைக்கின்றன.

மைசூர் மாநிலத்திலிருந்து சமணர் கொங்கு நாட்டின் வழியாக தமிழ்நாட்டிற்கு வந்திருக்கவேண்டும். கொங்கு நாடு மைசூருக்கும், தமிழ் நாட்டிற்கும் ஒரு முக்கிய பாதையாக அமைந்தது. சமணத் துறவிகள் கொங்கு நாட்டின் மலைகளில் முதன்முதலில் தங்கள் தவத்திற்கு ஏற்ற குகைகளை அமைத்துக்கொண்டனர். கல்லிலே படுக்கைகளைச்செதுக்கி அமைதியான சூழ்நிலையில் தங்கள் வாசங்களை ஏற்படுத்திக் கொண்டனர் இதற்குச் சான்றாக புகழியூர், அறச்சாலையூர் முதலிய இடங்களில் உள்ள தமிழிக் கல்வெட்டுகளைக் கூறலாம்.

கொங்கு நாட்டிலிருந்து இச்சமணத் துறவிகளில் சிலர் தெற்கு நோக்கி பாண்டிய நாட்டிற்கும், கிழக்கு நோக்கி தொண்டைநாட்டிற்கும் சென்று அங்குள்ள மலைகளிலும் குன்று களிலும் தங்களுக்கு இடம் தேடிக் கொண்டனர். பாண்டிய நாட்டிலே கி.மு. இரண்டாம் நூற்றுண்டிலிருந்தும், தொண்டை நாட்டிலே கி.பி. மூன்றும் நூற்றுண்டிலிருந்தும், கல்வெட்டுகள் சமணர் பற்றிய செய்திகளை அறிவிக்கின்றன.

சமண சமயம் பரவியதற்கு ஒரு பாதையாக மட்டும் கொங்கு நாடு இடம் பெறவில்லை. கொங்கு நாட்டிலேயே சமணம் ஓரளவு சிறப்புற்று விளங்கியது. புகழியூர், அறச்சாலையூர் சுக்காலியூர் போன்ற இடங்களில் சமணத்துறவிகள் தங்கி, தவம் புரிந்துவந்தனர் அவ்விடங்களிலுள்ள சிராவக தர்மத்தை மேற்கொண்ட இல்லறவாசி கள் சமணத்துயவிகளுக்கும், சமணசமய மேம்பாட்டிற்கும் உதவி புரிந்து வந்தனர். புகழுரிலுள்ள ஆர்நாட்டாமலையில் உள்ள 'தமிழி' கல்வெட்டில் யாற்றூரைச் சேர்ந்த செங்காயபன் என்ற சமண முனிவருக்கு சங்க காலச்சேர அரசவழியில் வந்த ஆதன் செல்லிரும்பொறை மகன் பெருக்கடுங்கோன் மகன் இளங்கடுங்கோ என்பவன் ஒரு இடத்தை அமைத்துக் கொடுத்தான் என்ற செய்தி காணப்படுகிறது. இக்கல்வெட்டு சங்க காலத்து சேர மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடுவதாலும், சமண மதத்தில் அவர்கள் கொண்ட ஈடுபாட்டை எடுத்துக் காட்டுவதாலும், மிகச் சிறப்பு வாய்ந்ததாகத் திகழ்கிறது. இங்குள்ள மற்றும் பல தமிழி கல்வெட்டுகள் வணிகன் வேணி ஆதன் என்பவனையும், கொற்றன், கீரன் முதலிய சிராவகர் களையும் குறிப்பிடுகின்றன.[1]

அறச்சாலையூரிலுள்ள 'தமிழி' கல்வெட்டு தேவன் சாத்தன் என்ற மணிவண்ணக்கன், ஏழுதானம் செயவித்தான் என்று கூறு கிறது.[2] கி.பி. 2–3-நூற்றுண்டுகளைச் சேர்ந்த இக்கல்வெட்டு களுக்குப் பிறகு கி.பி. 9-ம் நூற்றுண்டு வரை இப்பகுதியில் சமணர் பற்றிய கல்வெட்டுக்கள் கிடையா

'தமிழி கல்வெட்டுகளுக்குப்பின் சமண சமயத்தைப் பற்றிய செய்திகளில் அடுத்த இடம் வகிப்பவை 9-10 நூற்றுண்டுகளைச் சேர்ந்த தமிழ் மொழியில் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுகள் ஆகும். இவை, கொங்கு நாட்டின் தென் மேற்குப் பகுதியில் உள்ள ஐவர்மலையில் காணப்படுகின்றன. அதே நூற்றுண்டுகளில் தர்மபுரி பகுதியில் சம்ஸ்கிருத, கன்னட மொழிகளில் நொளம்ப அரசர்கள்

கரூரை அடுத்துள்ள சுக்காலியூரிலும் ஐந்து படுக்கை கொண்ட இயற்கைக் குகைத்தளம் உள்ளது. (காண்க. கொங்கு : மே 72)

காலத்தில் பொறிக்கப்பட்ட சில கல்வெட்டுகள் கிடைக்கின்றன. கி.பி. 10—12 நூற்றுண்டுகளில் கொங்கு சோழர் காலத்தைச் சார்ந்த பல கல்வெட்டுகள் திங்களூர் போன்ற இடங்களில் கிடைக்கின்றன. அதே காலத்தில் கங்க அரசர் கல்வெட்டுகள் விஜயமங்கலத்திலும், சோழர், விஜயநகர அரசர் காலத்துக் கல்வெட்டுகள் விஜயமங்கலம் போன்ற இடங்களிலுய் கிடைத்துள்ளன. ஆகவே, சமணத் தலங்கள் சேலம் கோயமுத்தூர் மாவட்டங்களில் பல இடங்களில் அமைந்திருந்தன. அவற்றுக்கெல்லாம் நடுநாயகமாக விஜயமங்கலம் விளங்கியது.

மேற்கூறிய கல்வெட்டுச் செய்திகளிலிருந்து கொங்கு நாட்டில் சமணசமயத்தின் வரலாற்றைத் தொகுத்துக் கொடுப்பது எளிதல்ல. இருப்பினும், எந்தெந்த இடங்களில், எந்தெந்த அரசகுலத்தைச் சேர்ந்தவர்கள் இம்மதத்திற்குப் பெரும் ஊக்கத்தை அளித்தனர் என்பதைத் தெளிவாகக் கூறலாம்

இச்சமணத் தலங்களைப்பற்றி விவரிக்குமுன்னர் கொங்கு நாட்டுடன் சம்பநதப்பட்ட இரு அரசகுலங்களைப் பற்றி நாம் அறிந்ததைக் கூறுவது இன்றியமையாததாகும். ரட்டர்கள் என்ற ராஷ்டிரகூட குலத்தினர் கி. பி. 250 முதல் கி பி. 405 வரை இங்கு ஆட்சி செலுத்தினர் என்று சரித்திரப் பேராசிரியர் டாக்டர் ஆரோக்ய சாமி அவர்கள் கருதுகிருர்[3]. அவர்கள் சமணமதத்தை பின்பற்றினர் என்பது அவருடைய கூற்று. ரட்டர்களில் ஏழாவதும், கடைசி மன்னனுமான திருவிக்கிரமன் என்பவன் சமணமதத்தைக்கைவிட்டு சைவமதத்தைத் தழுவினன் என்றும் அவர் கூறியுள்ளார். இதன் காரணமாக கங்க வம்சத்தினர் தங்கள் ஆட்சியை ஸ்தாபித்து சமண மதத்தின் பெருமையை நிலைநாட்டினர் என்றும் அவர் எடுத்துரைத்தார். கங்க வம்சத்தினரின் ஆட்சியை நிறுவசிம்மநந்தி என்ற ஒரு சமணப்பெரியார் முக்கிய காரணமாக இருந்தார் என்பது பல வரலாற்று மூலங்குளிருந்து நாம் அறியும் ஒரு முக்கிய செய்தியாகும்.

ரட்ட அரசர்களைப்பற்றி டாக்டர் ஆரோக்யசாமி அவர்கள் கூறுவதெல்லாம் 'கொங்குதேச ராஜாக்கள் என்ற வரலாற்று நூலின் அடிப்படையிலேதான் அமைந்துள்ளது. வேறு எவ்வித சான்றுகளும் கிடையாது. ரட்ட அரசர்கள் யார், எங்கிருந்து வந்தனர், அவர்கள் காலம் யாது, கி.பி. 250 முதல் கி பி. 405 வரையா-என்பதற்கு சரித்திர பூர்வமான ஆதாரங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

சிம்மநந்தி ஆசிரியர் என்ற சமணப்பெரியார் பேரூர் (கங்கப் பேரூர்) என்ற இடத்தில் இரு கங்க இளவரசர்களைச் சந்தித்தார்.

என்றும், அவர்களில் ஒருவனுன மாதவ கொங்குணிவர்மன் என்பவனைக் கொண்டு கங்கப்பேரரசை நிறுவிஞர் என்றும் பல செப்பேடுகளும், வரலாற்று நூல்களும் கூறுகின்றன. இவ்வரசர்களுக்கு சமண சமயததின் பெருமையை கண் எடுத்துக் கூறி அவர்களை சமணசமயத்தை நிலைநாட்டுமாறு பணித்தார் என்றும் கூறப்படுகிறது. கங்க அரசு நிறுவப்பட்டதே கங்கர்களுக்கும் சமணசமயத்திற்கு மிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தியது போலாகும்.*

கங்க அரசர்கள் ஆண்ட இடங்கள் பெரும்பாலும் மைசூர் மாநிலத்திலுள்ளவை. அவையெல்லாம் சேர்ந்தது கங்கபாடி என்று அழைக்கப்படும் நிலப்பரப்பு ஆகும். மேலும், கொங்கு நாட்டின் சில பகுதிகளையும் கங்கர்கள் கைப்பற்றி கி.பி. 5-ஆம் நூற்றுண்டிலிருந்து 11 ஆம் நூற்றுண்டு வரை ஆண்டு வந்தனர். இக்காலத்தில் சமணசமயம் கொங்கு நாட்டில் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தது. மற்றும் கொங்குசோழர்கள், சோழப்பேரரசர்கள், பாண்டியர்கள், விஜயநகர அரசர்கள் காலத்தில் சமணம் பல இடங்களில் சிறப்புற்று இருந்ததை அந்தந்த அரசர்கள் காலத்து கல்வெட்டுகளிலிருந்து அறியலாம்.

## கொங்கு நாட்டு சமணத்தலங்கள்.

**1. விஜயமங்கலம் :-** (கோயமுத்தூர் மாவட்டம்)

கொங்குநாட்டு சமணத்தலங்களில் மிகப் பெரியது விஜயமங்கலம். பஸ்திபுரம் என அழைக்கப்படும் விஜயமங்கலத்தின் ஒரு பகுதியில் சந்திரபிரபர் என்ற சமணதீர்த்தங்கரர் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயில் தற்போது அம்மணீஸ்வரர் அல்லது அமணேஸ்வரர் கோயில் எனும் பெயரால் அழைக்கப்படுகிறது. நிர்வாண நிலையை மேறகொண்ட சமணமதத்தின் தெய்வ உருவங்கள் அம்மணமாகவே அமைக்கப்படுவதால், பின்னல் அவை அமேணஸ்வரஸ்வாமி என்று அழைக்கப்படலாயின.

இச்சந்திரபிரபர் கோயிலில் பல மண்டபங்கள் உள்ளன. ஆதிநாதர் அல்லது ரிஷபதேவர், அனந்தநாதர், மகாவீரர் போன்ற தீர்த்தங்கரர் உருவங்களையும் குஷ்மாண்டினி என்ற இயக்கியின் ஒரு சிறு ஆலயமும் இங்கு காணலாம். மேலும், ஆதிநாதரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் சிற்பங்களையும் இம்மண்டபங்களில் ஒன்றில் காணலாம். ஆதிநாதருக்காக தனியே ஒரு சிறுகோயில், முடிவுருத நிலையில் சந்திரபிரபர் கோயிலின் பிராகாரத்தின் வட பகுதியில் உள்ளது.

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் மிகப்பழமையானது கங்க அரசரின் தளபதியும், சமணமதத்தில் பெரும் ஈடுபாடு உடையவனுமான சாமுண்டராயனின் தங்கை புளியப்பை* என்பவளின் நிசிதிகையைக் குறிக்கும்[5] சாமுண்டராயன் 10-வது நூற்றுண்டின் ஒரு தலைசிறந்த தளபதியாவான். சமணத்திற்கு அவன் ஆற்றிய பணிகளில் மிகுந்த பெருமை வாய்ந்தது சிரவண பெள்குள எனுமிடத்தில் அவன் எழுப்பிய 57 அடி உயரமுள்ள கொம்மடீஸ்வரர் சிலையாகும்.

சோழர் காலத்தில் இக்கோயில் வீரசங்காதப் பெரும்பள்ளி எனப்பெயர் பெற்றிருந்தது. இரண்டாம் குலோத்துங்கத்தின் காலத்தைச் சேர்ந்த கி.பி. 1163-ம் ஆண்டு கல்வெட்டொன்று இப்பெயரைக் குறிக்கிறது[6] மேலும் இக்கோயிலுக்கு நிவந்தமாக நிலம் வழங்கப்பட்ட செய்தியையும் அறிவிக்கின்றது. வீரசங்காதப் பெரும்பள்ளி என்பதை வீரசங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட கோயில் என்று கூறலாம். ஆனல் தாராபுரம் தாலுகாவில் பிரமியம் என்ற இடத்திலுள்ள ஒரு கல்வெட்டில் வீரசங்காத சுற்றிய தேவன் என்ற ஒரு அமைச்சரின் பெயர் காணப்படுகிறது. 'வீரசங்காத' என்பது இவ்வமைச்சரின் பிருது என்றும், அவன் பல வீரர்களை வென்றவன் என்ற பொருள் கொண்டது என்றும் திரு K. V. சுப்ரமணிய அய்யர் அவர்கள் கருதுகிருர்கள்.[7]

மற்றும் பல சிதைந்து போன சோழர்கால கல்வெட்டுகள் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிவந்தங்களையும், விழாக்களையும் குறிக்கின்றன.[8]

விஜயநகர மன்னரான ஹரிஹர ராயர் காலத்தில் நிலமானியம் வழக்கப்பட்ட செய்தியை கி.பி. 1412-ம் ஆண்டின் கல்வெட்டொன்றில் காணலாம்.[9]

கி.பி. 10-ம் நூற்றுண்டிலிருந்து 15-ம் நூற்றுண்டுவரை விஜயமங்கலத்து சமணத் திருக்கோயில் சிறப்புற்று விளங்கியது. சமண மதத்தின் மேன்மை குன்றியபிறகு, இக்கோயிலின் உயர்ந்த, குறுகிய கோபுரத்தை நெட்டை கோபுரம் என்றும், கோயில் கொண்ட தீர்த்தங்கரரை அமணேஸ்வரர் என்றும் அழைக்கலாயினர்.

## 2. திங்களூர் :- (கோயமுத்தூர் மாவட்டம்)

திங்களூரில் உள்ளசமணக்கோயில் ஒன்பதாம் தீர்த்தங்கரரான புஷ்பநந்தர் என்பவருக்குஎழுப்பப்பட்டது. இக்கோயிலை சந்திரவசதி (பஸ்தி கோயில்) என்று கல்வெட்டுகள் குறிக்கின்றன. கி.பி. 11-ம்

*'புளியம்பை' என வாசிக்கின்றுர் இராசு.

நூற்ருண்டு கொங்கு சோழர்காலத்து கல்வெட்டொன்று இக்கோயில் முகமண்டபம் கட்டிய செய்தியைக்கூறுகின்றது.[10] இம்மண்டபத்தை கட்டியவர் விக்கிரம சோழர் என்றும், அவன் சிங்களாந்தகன் என்ற பிருதைக் கொண்டிருந்தான் என்றும் இக்கல்வெட்டிலிருந்து அறிகிரேம். கி,பி. 1045-ல் இம்மண்டபம் கட்டப்பட்டதாத குறிக்கப் படுவதால், விக்கிரம சோழன் என்பவன் சோழப் பேரரசர்களான முதலாம் ராஜராஜன், முதலாம் ராஜேந்திரன் காலங்களில், கொங்கு நாட்டில் ஒரு சிற்றரசனுக இருந்திருக்க வேண்டும். மேலும், இவன் கோ நாட்டான் விக்கிரமசோழன் என்று குறிக்கப்படுவதால் புதுக் கோட்டைப் பகுதியிலுள்ள குளத்தூர் தாலுகாவாக தற்போது விளங் கும் முற்காலத்து கோ நாட்டைச் சேர்ந்தவனுக இருக்கவேண்டும் என்பது புலனுகிறது. அங்கு வாழ்ந்த இருக்குவேளிர் குலத்தைச் சேர்ந்தவன் என்றும், முதலாம்ராஜராஜனின் 52-ம் ஆட்சியாண்டில் கி.பி. 1006-7-ல் இவன் கொங்கு நாட்டின் சிற்றரசனுக முடிசூட்டப் பெற்ருன் என்றும் கூற இடமிருக்கிறது.[11]

3. தர்மபுரி :-

பண்டைய காலத்தில் தகடூர் என்று புகழ் பெற்ற தர்மபுரியில் 9-10 நூற்ருண்டுகளில் சமணம் மிகுந்த செல்வாக்குப்பெற்றிருந்தது. நொளம்ப அரசன் மகேந்திரன் காலத்தில் இங்கு ஒரு சமணத் திருக் கோயிலை ஒரு வணிகரின் மக்கள் நிதியண்ணன், சண்டியண்ணன் என்பவர் கட்டினர்.[12] இக்கோயிலுக்கு அவர்கள் நிவந்தங்கள் அளித்ததையும் கி.பி. 892-3-ஆண்டு கல்வெட்டுகள் பதிவு செய் துள்ளன. முக்கியமாக மூலப்பள்ளி எனும் கிராமத்தை இக்கோயி லுக்காக, விஜயசேன சித்தாந்த படாரர் என்பவரின் சீடர் கனக சேன சித்தாந்த படாரர் என்பவரிடம் ஒப்படைத்த செய்தியை அறியலாம். இக்கல்வெட்டுகள் தற்போதுள்ள மல்லிகார்ஜுனர் ஆலயத்துத் தூண்களிலே கண்டெடுக்கப்பட்டவை. இங்கு கட்டப் பட்ட சமணக்கோயிலே பிற்காலத்தில் மல்லிகார்ஜுனர் ஆலயமாக மாறிவிட்டிருக்கலாம். மேலும், மல்லிகார்ஜுனர் என்ற பெயரே, மல்லிநாதர் என்ற தீர்த்தங்கரரின் பெயரிலிருந்து வந்திருக்கலாம்.

தர்மபுரியிலுள்ள மாரியம்மன் கோயிலிலும் மகேந்திரனின் கல் வெட்டொன்று (கி.பி.893), ஒரு சமணக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட தானத்தைப்பற்றியது ஆகும். அதில் பொன்னெற கொரவர் என்ற சமண முனிவர் குறிப்பிடுகிருர்.[13]

தர்மபுரிக்கு அருகே உள்ள ராமக்கா குளத்திற்குப் போகும் வழி யிலும், அதமன் கோட்டையிலும் பல சமணச்சிற்பங்கள் கண்டெடுக்

கட்டுள்ளன. அதமன் கோட்டை மகேந்திரமங்கலம் என்றும் ஒரு காலத்தில் பெயர் பெற்றது. இப்பெயர் நொளம்ப மகேந்திரன் காலத்திலேயே வைக்கப்பட்டதாக இருக்கலாம்.[14]

**4. முடிகொண்டான் :-**

கி பி. 12-ம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்து இங்கு நகரஜிஞலயம் என்றுபெயர் கொண்ட ஒரு சமணக்கோயில் இருந்தது.[15] இக்கோயிலைச் சேர்ந்த சிற்பங்களிலே ஒன்று கொள்ளேகால் தபால் நிலையத்துக்கு அருகே கண்டெடுக்கப்பட்டதாக கல்வெட்டுத்துறை அறிக்கை ஒன்று கூறுகிறது.[16]

மற்றும் மேட்டுப்புதூர், அரசமலை, வெள்ளோடு, பூந்துறை சனகை அல்லது சீனுபுரம் முதலிய இடங்களிலும் சமணச் சின்னங்கள் கிடைத்துள்ளன.

**5. திருமூர்த்தி மலை :-**

ஆனைமலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள இம்மலையில் ஒரு பெரிய பாறை சமணச் சிற்பங்களோடு காணப்படுகிறது. இப்பாறையில் சமண தீர்த்தங்கரர் ஒருவரின் உருவமும், அதன் இருபக்கங்களில் காவல் தேவதைகளின் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இப்பாறை, மலையிலிருந்து உருண்டு விழுந்து விட்டதாகவும், ஆகவே இச்சிற்பம் படுத்த நிலையில் உள்ளது என்றும் கூறப்படுகிறது. இச்சிற்பத்துக்கு அருகே உள்ள ஒரு கல்வெட்டு எத்துலப்ப நாயக்கன் என்ற ஒரு சிற்றரசன் காலத்தில் கி பி. (1793-ல்) ஏற்படுத்தப்பட்ட ஒரு ஒப்பந்தத்தைக் குறிக்கிறது.[17] இவ்வொப்பந்தத்தின்படி அமணசமுத்திரத்தின் தலைவரிடமிருந்து அமணேஸ்வரருக்காக திருமணவரியாக 4 பொன் வசூலித்துக் கொடுப்பதற்கும் திருமண சமயங்களில் நில உரிமை மாற்றம் ஆகாமல் தடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டதாக அறிகிறோம். அமணேஸ்வரர் என்பது இச்சிற்பத்தைக் குறிப்பதாலும், அமணசமுத்திரம் என்ற பெயர் சமணர்கள் வாழ்ந்த இடத்தைக் குறிக்கும் என்பதாலும், இப்பகுதியில் சமண சமயத்தின் ஓங்கிய நிலையை எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், எத்துலப்ப நாயக்கன் காலத்திலேயே மேற்கூறிய சமணச்சிற்பம் மும்மூர்த்திகளாகிய சிவன், விஷ்ணு, பிரமன் ஆகியோராகக் கருதப்பட்டது என்றும், இம்மலையின் பெயரான திருமூர்த்திமலை, திரிமூர்த்திமலையாக மாறிவிட்டது என்றும் சொல்லலாம்.

**6. அய்யம்பாளையம் :** (ஐவர்மலை — தென்மேற்கு கொங்கில் உள்ள வைகாவி நாட்டைச் சேர்ந்தது.)

இங்கு பல இயற்கைக் குகைகளும், சமணச்சிற்பங்களும், 9-10 நூற்றாண்டு வட்டெழுத்துக் கல் வெட்டுகளும் உள்ளன.

கல்வெட்டுகள் இம்மலையை திரு அயிரைமலை என்று குறிக்கின்றன. பாண்டிய மன்னன் வரகுணன் காலத்தைச் சேர்ந்த கி.பி. 870—ம் ஆண்டு கல்வெட்டொன்று, இங்குள்ள பார்சுவநாதர் சிற்பத்தையும், மற்றும் இயக்கிகளின் உருவங்களையும், குணவீரக் குரவடிகளின் சீடர் சாந்திவீரக்குரவர் என்பவர் புதுப்பித்ததாகக் கூறுகிறது.[18] நேமிநாதம் என்ற நூலை இயற்றிய குணவீரபண்டிதர் என்பவரே இக்கல்வெட்டும் குறிப்பதாக புலவர் இராசு அவர்கள் எண்ணுகிறார்கள்.

மற்றும் பல கல்வெட்டுகள் அஜ்ஜணந்தி எனும் பெரும் புகழ் பெற்ற முனிவரையும், இந்திரசேனர், மல்லிசேனப்பெரியார், பார்சுவ படாரர் என்ற குரவர்களையும், பெரும்பட்டியூர் பட்டினிக்குரத்தி அவர் மாணுக்கி புவ்வணந்தி குரத்தி போன்ற குரத்தியர்களையும் குறிக்கின்றன.[19] இவர்கள் 9—10 நூற்றாண்டுகளைச் சேர்ந்த சமண சமயப்பெரியார்கள் ஆவர். முக்கியமாக அஜ்ஜணந்தி என்பவரை தமிழ் நாட்டின் மற்ற பகுதிகளிலும், கல்வெட்டுகள் குறிக்கின்றன. அவர் அக்காலத்தில் தமிழ்நாட்டு சமணமுனிவர்களில் தலைசிறந்த இடம் வகித்ததாக இருந்திருக்க வேண்டும்.

**கொங்கு நாடும் சமண நூல்களும் :**

கொங்கு நாட்டில் பல சமணப் பேரறிஞர்கள் தோன்றி இலக்கியத் தொண்டு புரிந்து. பல அருஞ்செல்வங்களைத் தமிழுக்குத் தந்திருக்கிறார்கள். அவர்களுள் முதலாவதாக கொங்குவேளிர் என்ற பெருங்கதை ஆசிரியரைச் சொல்லலாம். இக்காவியம் கங்க அரசன் துர்விநீதன் என்பவன் வடமொழியில் எழுதிய பிருகத்கதையைத்தழுவி எழுதப்பட்டது. துர்விநீதனின் பிருகத்கதைக்கு மூலமாக இருந்த காவியம், 'பைசாசி' மொழியில் குணாட்டியர் என்பவரால் எழுதப்பட்ட பிருகத்கதா என்ற நூல். பெருங்கதை ஆசிரியர் கொங்கு வேளிர் விஜயமங்கலத்தைச் சேர்ந்தவர்.

அடுத்தது சனகை எனும் சீனபுரத்தைச் சேர்ந்த பவணந்தி என்ற முனிவராவார். அவர் புனைந்த இலக்கண நூலான நன்னூல், தமிழ்மொழிக்கே ஒரு ஆதார நூலாக விளங்குகிறது. இவர் காலம்

---

சங்ககாலத்து அயிரை மலை இதுதான (காண்க கொங்கு : சளவ - 72)

கேள்வி நேரத்தின் போது 'பத்தினிக் குரத்தி அல்ல, பட்டினிக்குரத்திதான், என்று உறுதி செய்தார் எழுத்துரை ஆசிரியர்.

கி.பி 12-13-ம் நூற்றுண்டாக இருக்கலாம் இவர் மூன்றும் குலோத் துங்க சோழனின் கீழ் சிற்றரசனுக விளங்கிய அமராபரணன் சீய கங்கன் என்பவனுல் ஆதரிக்கப்பட்டவர்.[20]

சிலப்பதிகாரத்தின் உரையசிரியரான அடியார்க்குநல்லார் சமணமதத்தை சார்ந்தவரென்று கொங்குமண்டல சதகத்தின் செய்யுள் ஒன்றைக் கொண்டு கூறப்படுகிறது.[21] இவர் நிரம்பை என்ற விஜயமங்கலத்தின் அருகில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந் தவர்.

கொங்குமண்டல சதக ஆசிரியரான கார்மேக கவிஞர் என்ப வரும் சமணமதத்தவர் என்றும், அவர் விஜயமங்கலத்தில் பிறந்தார் என்றும் கூறப்படுகிறது. ஆகவே, கொங்குநாட்டின் சிறப்பை கி.பி. 17-ம் நூற்றுண்டில் (19-ம்நூற்றுண்டு என்றும் சிலர் கருது கின்றனர்) பாடிய ஜினேந்திரன் என்ற கார்மேக கவிஞரும் சமண மதத்தைச் சேர்ந்தவர் என்பது சமண மதத்தினர் கொங்கு நாட் டிற்கு தேடித்தந்த புகழையும், பெருமையையும் நிலை நாட்டு கின்றது.

## குறிப்புகள்

1. I. Mahadevan, "Corpus of Tamil Brahmi Inscriptions" Seminar on Inscriptions, Ed. R. Nagaswamy, Madras, 1966.
2. I bid, இதை 'எழுத்துப் புணருத்தான்' என வாசிக் கின்றுர் இரா. நாகசாமி. 'மணிய வண்ணக்கன்' என் கிறுர் இராசு.
3. M. Arokisawamy, The Kongu Country, pp. 104 ff. (Also chapter on the Rattas.)
4. B.A. Salefore, Medieval Jainism with Special Reference to Vijayanagar, pp. 8-13; Also Epigraphia Carnatica, VII, Sh. 4.
5. Annual Report on South Indian Epigraphy (M.E.R.) 1905, No: 597.
6. M.E.R., 1905, No: 598.
7. Epigraphia Indica, Vol. xxx, Pt. III, pp. 99ff "Seven, Vatteluttu Inscriptions from the Kongu Counytr ."

8. M.E.R., 1905, Nos. 599 & 600.
9. Ibid, No: 596.
10. M.E.R., 1905, No: 614; Epigraphia Indica Vol. XXX, Part VI, pp. 243 ff.
11. K. A. Nilakanta Sastri and T. N. Subramanian, "Tingaeur Inscription of Konattan Vikrama Chola, Ep. Ind., Vol, XXX Pt. VI.
12. M.E.R., 1901, Nos. 304 to 306; South Indian Inscriptions (S.I.I) Vol. VII, No: 530.
13. M.E.R., 1901, No: 348; S.I.I., VII, 581; Ep. Ind., X, pp. 54 ff.
14. M.E.R., 1910-11, Parts I & II, Para 14.
15. M.E.R. 1916 No: 10.
16. M.E R., 1909-10, Pt. II, Para 51.
17. M.E.R., 1926-27, No: 186 of 1227; Pt. II Paras 98 & 99.
18. M.E.R., 1905, No: 705.
19. Ibid, Nos. 691 to 702.
20. சொல்காப் பியத்தின் குணத்தோடந் தேர்ந்து சொலுவதற்குத்
தொல்காப் பியங்கற்க நீண்டததனைச் சுருக்கியிசை
யொல்காப் பெரும் பவணந்தீ யென் ரேுதி யுப கரித்த
வல்கா வலன்சீய கங்கனுந் தான் கொங்கு மண்டலமே.
21. குருவை யுணர்ந்த விளங்கோ வடிகளுட் கொண்டு சொன்ன
தருவை நிகருஞ் சிலப்பதிகாரத் தனித் தமிழ்க்
கருமை யுரைசெ யடியார்க்கு நல்லா ரவதரித்து
வருமைப் பொழினிரம் பைப்பதியும் கொங்கு மண்டலமே.

★

# 2000 ஆண்டுகட்கு முந்தைய கொங்குநாடு

சா. குருமூர்த்தி. M.A., M.Litt., Dip.(Anth)

கொங்கு நாடு பழங்காலத்தில் தற்போதைய கோயம்புத்தூர் சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களையும், மதுரையில் பழனி வட்டத்தையும், திருச்சி மாவட்டத்தில் சில பகுதிகளையும் கொண்ட நாடாகத் திகழ்ந்தது. அதிக நிலப்பரப்பையும், மலைகளையும் அரவணைத்துக் கொண்டிருந்த கொங்கு நாட்டினைச் செல்வவளமும், நீர்வளமும் ஆரத்தழுவிக் கொண்டிருந்தன என்றால் பொருத்தமாக இருக்கும். தமிழக வரலாற்றில், தமிழர் பண்பாட்டு வரலாற்றில் கொங்கு நாடு தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. அதுபோலவே தமிழகத் தொல்பொருளியல் வரலாற்றிலும் நிலையான ஓர் இடத்தைத் தேடிக்கொண்டுள்ளது. பழந் தமிழர்களின் பண்பாட்டுச் சின்னங்கள் ஆயிரக்கணக்கில் இப்பகுதிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கொங்கு நாட்டின் வரலாறு மிகப் பழங் கற்காலத்திலேயே தொடங்குகிறது. சேலத்தில் பார்கூர் என்னும் ஊரில் பழங் கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்பதே இதற்குச்சான்றாகும் அடுத்தபடியாக மோகனூரில் புதிய கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன[1]. அதுபோலவே பழனி வட்டத்திலும் புதிய கற்காலக் கருவிகள் தட்டுப்படுகின்றன. பழனிமலை, ஆனைமலை போன்ற பகுதிகளில் ஆராய்ச்சி நடத்துதல் இன்றியமையாததாகும். தமிழக வரலாற்று ஏடுகளைத் திருப்புகையில் புதிய கற்காலத்திற்குப் பிறகு 'மெகலிதிய' காலம், அதாவது இரும்புக் காலம் வருகிறது. அதனைச் சங்ககாலம் என்றும் எடுத்துக்கொள்ளலாம். 'மெகலிதிய' மக்களின் இடுகாடுகள், சவக்குழிகள், ஈமத்தாழிகள் நூற்றுக் கணக்கில் இப்பகுதிகளில் காணப்படுகின்றன. அவற்றுள் சில அகழ்ந்தாயப்பட்டன. தொல்பொருள்கள் ஆயிரக் கணக்கில் அகப்பட்டன. அவை காட்டும் பண்பாட்டினை நாம் பின்னர்க் காணுவோம்.

கொங்கு நாட்டின் வரலாற்றுப் பெருமையைத் தொல்பொருளாய்வு மூலம் வெளிப்படுத்தியவர்கள் மேலை நாட்டினரேயாவர்,

அவர்களுள் ராபர்ட்புரூஸ்புட், வெல்ஹவுஸ், வில்லியம் பிரேசர், லாங்கிரஸ்ட், சீவல் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவராவர். இந்தியா விடுதலையடைந்த பிறகு தமிழகத்தில் மட்டும் ஏறக்குறைய 16 ஊர்களில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கொங்கு நாட்டுப் பகுதிகளிலும் ஆராய்ச்சி சுற்றுப்பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு, புதிய செய்திகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் இப்பகுதிகளில் அறிவியல் முறைப்படி இன்னும் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படவில்லை என்பது வருந்தத்தக்கதாகும். கொங்குநாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்துத் தொல்பொருள்கள் கீழ்க்கண்ட ஊர்களில் அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன:—

**கோயம்புத்தூர் மாவட்டம் :**

தெல்லஞ்சி, கல்சடம்பூர், கணியம் பூண்டி, நட்டுக்கல்பாளையம் பெரியநாயக்கன்பாளையம், களப்பட்டி, பிளிச்சி, கூடலூர், வீரபாண்டி, செட்டிபாளையம், ஆனைமலை—இன்னும் பல ஊர்கள்.

**சேலம்:** அதமன் கோட்டை, பார்கூர், மோகனூர்

**மதுரை மாவட்டம்:** பழனிவட்டம் முழுவதிலும்.

பெருந்துறை,[2] கணியம்பூண்டி,[3] நட்டுக்கல் பாளையம்[4] ஆனைமலை[5], ஆகிய ஊர்களில் சவக்குழிகள் திறக்கப்பட்டு ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. குறிப்பிடத் தக்கதாகும். இங்கு காணப்படும் சவக்குழிகளின் வகைகள், கல்வட்டம், (Cain circle) கல்லறை (dolmenoid cist) தாழி, (Urn) குடைவரைக்குகை, (rock-cutcave) நடுகல் (herostone) போன்றவையாகும். சில பகுதிகளில் 10 முதல் 12 ஏக்கர் நிலப்பரப்பில் சவக்குழிகள் நிறைந்துகாணப்படுகின்றன. இச்சவக்குழிகளின் எண்ணிக்கையைப் பார்க்கையில் அக்காலத்தில் கொங்கு நாட்டில் மக்கள் தொகை அதிக எண்ணிக்கையில் இருந்திருக்க வேண்டும் என்று கூறலாம்.

சவக்குழிகள், ஈமத் தாழிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்ட தொல் பொருள்களுள், இரும்புக் கருவிகள், குதிரைலாடம், செப்புப் பாத்திரங்கள் தங்க அணிகலன்கள், வெண்கலப் பொருள்கள், சுடுமண் ஆண், பெண் உருவங்கள், தெய்வத் திருமேனிகள், மட்பாண்டங்கள், காதணிகள், சங்கு வளையல்கள், சங்குமாலைகள், அல்லது ஆரங்கள், பெரில் கார்னிலியன் ஜாஸ்பர், அகேட், குவார்ட்ஸ் போன்ற வண்ணக் கற்களாலாகிய மணிகள், மணிமாலைகள், கண்ணாடி மணிகள், சுடுமண் விளையாட்டுப் பொருள்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் பெரும் பாலாவை தற்பொழுது சென்னையில் உள்ள தமிழக அரசு பொருட்

களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை வெறும் காட்சிப் பொருள்களாகக் கருதி, போற்றிப் புரந்தால் மட்டும் போதாது; இவற்றை ஆய்ந்து அவை காட்டும் தமிழர் பண்பாட்டுப் பெருமையை உலகுக்கு உணர்த்துதல் நமது கடமையாகும்; செய்யப் படவேண்டிய முக்கியப் பணியுமாகும்.

மேலைநாட்டு ஆராய்ச்சி வல்லுனர்கள் இங்கு நடத்திய விரிவான சுற்றுப்பயணத்தின் விளைவாகப் பல்லாயிரக் கணக்கான தொல்பொருள்கள் மண்ணுக்கடியிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டன. அவற்றுள் பெரும்பாலானவை சாதாரண மக்களால் பயன்படுத்தப்பட்டவையாகும். கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள் களுள் ஒரு பகுதிதான் தற்பொழுது நாட்டின் பல்வேறு பகுதி களிலுள்ள பொருட்களஞ்சியங்களில் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டுள்ளன. மற்றவை பற்றிய தகவல்கள் இல்லை. அத் தோடு மட்டுமின்றி வெவ்வேறு பொருட்களஞ்சியங்களில் வைக்கப் பட்டுள்ள தொல்பொருளைப்பற்றிய குறிப்புகள் ஒன்றாகத் திரட்டப் படவில்லை—நூல் வடிவில் வெளியிடப்படவுமில்லை என்பதையும் இங்குக் குறிப்பிடவேண்டியுள்ளது.

'மெகலிதிய' சவக்குழிகளடங்கிய இடுகாடுகள் அதிக எண்ணிக் கையில் இங்குக் காணப்படுகின்றன என்பதை முன்னமேயே கூறினோம். 'மெகலிதிய' மக்கள் என்பவர் யாவர் என்ற வினா நம் மனத்தில் எழுகின்றது. இவர்கள் திராவிடர்களேயாவர். இக் கூற்றுக்குப் பல சான்றுகள் உள்ளன. அவையாவன (1) ஆதிச்ச நல்லூரில், ஈமத் தாழிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்ட மண்டை ஓடுகள் ஆயப்பட்டு அதை திராவிடர்களுக்குரியன என்று அறிவிக் கப்பட்டிருக்கிறது.[6] (2) சங்க இலக்கியங்களில் 'மெகலிதிய' இடுகாடுகள், ஈமத்தாழிகள் பற்றிய குறிப்புகள் ஏராளமாகக் காணப் படுகின்றன[7] குலோத்துங்கன் சோழன் உலா,[8] விக்கிரம சோழன் உலா,[9] தக்கயாகப்பரணி,[10] போன்ற பிற்கால இலக்கியங்களிலும் அவற்றைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கல்வெட்டுக்கள் அவற்றை 'கற்கிடை' எனச் சுட்டுகின்றன.[11] எனவே 'மெகலிதிய' இடுகாடுகள், சங்ககாலத் தமிழர் விட்டுச்சென்ற நினைவுச் சின்னங்க ளாகும். 'மெகலிதிய' மக்கள் வெளிநாடுகளிலிருந்து தமிழகத்திற்கு வந்தவராவர் என்ற கருத்து நிலவுவதால் இந்த, இலக்கியச் சான்று களை நாம் கொடுக்கவேண்டியுள்ளது. தமிழகத்தில் வாழ்ந்த 'மெகலிதிய' மக்கள் தமிழர்களேயாவர் என்பதில் ஐயமில்லை. தமிழகத்தில் முதன்முதலில் இரும்பின்பயனை அறிந்து பயன்படுத்திய இம்மக்கள், ஏரி, குளம், கிணறு ஆகியவற்றைக் கொண்டு நெல் பயிரிடும் முறையையும் வளர்த்தவர்களாவர்.

இவர்களுடைய பண்பாட்டுக் கூறுகளில் சில சிந்துவெளி நாகரிகத்துடன் வைத்து ஒப்பிட்டுப் பார்க்கும் அளவில் அமைந்துள்ளன என்பதும் இங்கு நோக்குதல் இன்றியமையாததாகும். 'மெகலிதிய' நினைவுச் சின்னங்களின் காலவரம்பைக் கணிப்பதில் ஆய்வாளர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர். எனினும் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் வாயிலாகக் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்களை ஆய்கையில் 'மெகலிதிய' பண்பாட்டின் காலம் கி.மு. 1000 முதல் கி.பி. 500 வரை எனக் கொள்ளலாம்.

கொங்கு நாட்டில் உரோமர்களது தங்க நாணங்கள் அதிக எண்ணிக்கையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஒரு காலத்தில் 'ஆந்திரர்களின் மட்பாண்ட வகை' எனக் கருதப்பட்ட "இரசட்" என்ற காவிப் பூச்சுடன் வண்ணந் தாங்கிய பானை வகைகள் (Russet Coated and painted ware) இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இங்கு கண்டெடுக்கப்பட்ட உரோம நாணயங்கள், கொங்கு நாட்டு மக்கள் உரோமர்களுடன் கொண்டிருந்த வாணிகத் தொடர்பினைக் காட்டுகின்றன. இந்தியாவிலேயே இப்பகுதிகளில்தான் உரோமர் நாணயங்கள் அதிக எண்ணிக்கையில் அகப்பட்டுள்ளன. அத்தோடு மட்டுமின்றி உரோமர்கள் பெரிதும் விரும்பிப் போற்றி வந்த 'பெரில்' (beryl) என்னும் ஒரு வகை உயர்ந்த ரகக் கல்லும் இங்கும் கிடைத்தது; அவர்கள் இக்கல்லைக் கொண்டு மணிகள் செய்து மாலைகளாக அணிந்து மகிழ்ந்தனர். அவர்களால் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களில் இக்கற்களும் இடம் பெற்றன. 'இரசட்' வண்ணம் பூசப்பட்ட மட்பாண்ட வகைகள் தென்னகத்தில் பல மாநிலங்களிலும், வட நாட்டில் சில பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இம்மட்பாண்டங்கள் செங்காவியைக் கொண்டு தீட்டப்பட்ட வண்ண ஓவியங்களைத் தாங்கி, பளபளப்பாகக் கண்ணாடிப் பாத்திரங்களோ என ஐயுறும் வகையில் மிளிர்கின்றன. ஆதித் தமிழரின் மட்பாண்டத் தொழில் வளர்ச்சியின் மேன்மையை இவை நமக்கு உணர்த்துகின்றன. இவ்வகை மட்பாண்டங்கள் தென்னகத்து மட்பாண்டவகைகளில் மிகச் சிறந்ததும், உயர்ந்த பிரிவைச் சேர்ந்ததுமாகும் என ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். தற்காலத்தில் இத்தகைய மட்பாண்டங்கள் செய்வதை நாம் பார்க்க இயலாது.

சவக்குழிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்ட ஏராளமான இரும்புக் கருவிகள் நமக்குப் பல சுவையான செய்திகளைத் தருகின்றன. இரும்பை உருக்குதல், பிறகு அதனைக் கொண்டு கருவிகளை வார்த்-

தல் ஆகிய இரண்டு கலைகளிலும் மக்கள் தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்பதையே அவை உணர்த்துகின்றன. இரும்புக் கருவிகள் செய்தல் குடிசைத் தொழிலாகப் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது என்றும் கூறலாம். உருக்கிய இரும்பு, மண்ணுடன் கலந்து கட்டிகளாக ஆங்காங்கே கண்டெடுக்கப்பட்டுள்ளன என்பதே இதற்குச் சான்றாகும். வேளாண்மைத் தொழிலுக்குப் பயன்படும் கருவிகள் தான் அதிக எண்ணிக்கையில் செய்யப்பட்டன.

அடுத்தபடியாக ஈமத் தாழிகளில் குதிரை 'லாடம்' காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். குதிரை விரும்பி வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது. தங்களது அன்றாட வாழ்க்கையில் குதிரையை பல வேலைகளுக்கு அவர்கள் பயன்படுத்தியுள்ளார்கள். ஆகையால்தான் குதிரை லாடமும் இறந்தவர்களுடன் சேர்த்துப் புதைக்கப்பட்டுள்ளது. அவர்கள் வணிகப் பெருமக்களாகவோ, போர்வீரர்களாகவோ திகழ்ந்திருக்கலாம் என நாம் ஊகிக்க முடிகின்றது.

**ஆடை அணிகள் :**

ஆண், பெண் உருவங்கள், தெய்வத் திருமேனிகள் ஆகியவை அம்மக்களது சமூக, சமய வாழ்க்கையைப் பற்றிய சில குறிப்புகளை நல்குகின்றன. ஆண், பெண் இருவரும் அணிகலன்களை அணிந்துள்ளார்கள். முடியைப் பல பாணிகளில் ஒப்பனை செய்துகொண்டுள்ளார்கள். விசிறி மடிப்புகளைக் கொண்ட சிறந்த தலைப்பாகையை அணிந்துள்ளார்கள்.

**மொழி :**

அவர்களது எழுத்தறிவைப் பற்றியும் சிறு குறிப்புகள் கிடைத்துள்ளன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரச்சலூர்,[13] திருச்சி மாவட்டத்தில் புகளூரிலும்[14] 'பிராமி' (தமிழி) எழுத்துக்களைக் கொண்ட கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றின் மொழி தமிழாகும்.

**நாணயங்கள் :**

இப்பகுதிகளில் ஏராளமான குத்துப்புள்ளி (Punch marked Coins) வெள்ளி நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை உரோம நாணயங்களுடனும் அகப்பட்டுள்ளன.

கொங்கு நாட்டில் அகழ்வாராய்ச்சியை பெரிய அளவில் மேலும் கொள்ளுவோமேயானால் அதன் தொன்மையையும், அங்கு வாழ்ந்த மக்களது வரலாற்றுப் பெருமையையும் சீரிய முறையில்நாம் தெரிந்துகொள்ள இயலும்.

1. சென்னைப் பல்கலைக் கழகத் தொல்பொருளாய்வுத் துறையினர் இங்கு ஆராய்ச்சி நடத்தியுள்ளார்கள்.
2. Walhouse, M.J., Journal of Royal Asiatic Society, Vol. 7 (N.s) 1875, PP. 17-34
3. Alexander, Rev, Annual Report of the Archeolgical Society of India, Madras circle 1910-11, pp 12-15
4. Walhouse, M.J. Journal of Royal Asiatic Society 1875, pp-17-34
5. தமிழ்நாடு அரசு தொல்பொருளாய்வுத்துறையினர் இங்கு அகழ்வாராய்ச்சி மேற்கொண்டார்கள்.
6. Zuckerman, S. the Adichchanallur Skulls; Madras Museum, 1930, PP. 19-20
7. புறநானூறு: இடுகவென்றோ—சுடுகவென்றோ, படுகுழிப் படுக...239:20—21. மணிமேகலை: 6,11, 66—67
8. குலோத்துங்கன் சோழன் உலா: 22—24.
9. விக்கிரமசோழன் உலா : 14—16
10. தக்கயாகப்பரணி : 376
11. S.I.I. Vol II part I no. 5 P. 54
12. ARE for 1961-62, P. 10
13. 341—48 of 1927—28



# ஆர்நாட்டாமலை

Er. கொடுமுடி. ச. சண்முகன்

கொங்கு நாட்டு மலைத்தலங்களுள் ஒன்று ஆர்நாட்டாமலை ஆகும். அதன் பெயர் பற்றி ஆராய்வது இக்கட்டுரை.

1. **அமைவு :** திருச்சி மாவட்டத்தில், கரூர் வட்டத்தில் அமைந்துள்ளது. புகளூர் புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இதன் வடக்கே சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் காவிரி ஆறு மேற்கிலிருந்து கிழக்காக ஓடுகின்றது. அதன் எதிர்க்கரை வேலூர் (சேலம்) ஆகும். மலையின் அடிவாரத்தில் உள்ள ஊர் வேலாயுதம் பாளையம் எனப்படும்.

2. **மலைச்சிறப்பு :** தமிழக வரலாற்றை, இலக்கியத்தோடு ஒப்பிட வாய்ப்பாக அமைந்த, பதிற்றுப் பத்துச் சேரர் பற்றிய கல்வெட்டு[1] இம்மலையில்தான் அமைந்துள்ளது. ஆத்தூர் செங்காயபன் முதலான சமண முனிவர்களின் பெயரும், சங்க இலக்கியத்தில் வரும் பெயர்கள் பலவும் காணப்படுகின்றது. இயற்கையாக அமைந்த இரண்டு குகைத் தளங்களும், சுனைகளும் அமைந்துள்ளன.

மலைமேல் ஒரு முருகன் கோயில் வழிபாட்டில் உள்ளது.

21. **பெயர் :** அங்கு வாழும் மக்களால், அது ஆர்நாட்டாமலை என்று வழங்கப்படுகிறது. ''யாரும் நட்டு வைக்காமல் தானே வளர்ந்த மலை'' என்ற கருத்தில் பொருள் சொல்லி வருகின்றனர். கரூர் வட்டத்தில் திருமாநிலையூரை அடுத்துள்ள இன்னொரு மலை தாந்தோனிமலை ஆகும். 'தானே தோன்றிய மலை' எனப் பொருள் கொள்ள இதன் பெயர் தூண்டுகிறது. இதன் பெயரை ஒட்டியே ஆர்நாட்டாமலை என்பதற்கும் யாரும் நடாத மலை என மக்கள் எண்ணி வருகின்றனர்.

22. **ஆறுநாட்டார்மலை :** சில ஆராய்ச்சியாளர்கள் இதன் பெயர் ஆறுநாட்டார் மலை என இருக்க வேண்டுமென்று கருதுகின்றனர். புலவர் செ. இராசு அவர்களும், அவரின் ஆசிரியரான பெரும்புலவர் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களும்,

அதில் முதன்மையானவர்கள். அதற்கான காரணியம் யாதெனில், அம்மலைமேல் உள்ள வேலவன் கோயிலின் பூசை உரிமை, கொங்கு இருபத்தி நாலு நாடுகளில் ஆறு நாட்டவருக்கு உண்டு என்பதாகும்.

கொங்கு 24 நாடுகளுள் ஆறைநாடு என்றே ஒரு நாடு உள்ளது. அது கோவையைச் சுற்றியுள்ள பகுதி ஆகும். அதற்கும் ஆர்நாட்டார் மலைக்கும் தொடர்பில்லை.

'ஆறு நாட்டார் மலை' என்பதைச் சரியெனக் கொண்டு கல்வெட்டியல் ஆசிரியர் திரு. இரா. நாகசாமி அவர்களும் தமிழக கல்வெட்டுக்கள் என்ற கட்டுரையில் கீழ்த்தலைக் காற்புள்ளியினுள் எடுத்தாண்டுள்ளார்கள்.

**31. புவியியல் அமைவு :** ஆர்நாட்டாமலை, கிழங்கு நாடு, மேல்கரை அரையநாடு, ஆகியவற்றின் நடுவில் அமைந்துள்ளது. குறிப்பாக மேல்கரை அரையநாட்டைச் சேர்ந்த திருக்காடுதுறை கிராமத்தின் எல்லையில் அமைந்துள்ளது.

**32. நாடெட்டுத் தானமெட்டு:** மேல்கரை அரைய நாட்டிற்குச் சேர்ந்தவை 16 ஊர்கள். அவற்றில் எட்டுக் கிராமத்தைத் திருப்பாண்டிக் கொடுமுடி இறைவனுருக்கு இறையிலி நிலமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. தானமாகக் கொடுக்கப்பட்ட ஊர்கள் வருமாறு : கொடுமுடி, வெதிரிமந்தை, எழுநூற்று மங்கலம், இளவரச நல்லூர், வள்ளிபுரம், வடிவுள்ள மங்கலம், ஊஞ்சலூர், திருக்காடுதுறை. இவற்றுள், வெதிரிமந்தையும், திருக்காடு துறையும் நொய்யலாற்றின் கிழக்கே அமைந்துள்ளவை.

**33. பழம் பாடல் :** இந்தக் குறிப்பைத் தரும் பழம் பாடல்[*] வருமாறு :

உலகுபுகழ் தலையநல்லூர் வெங்கம் பூருடன்
உயர்ச்சி பெறும் அஞ்சூரதும்
உசிதமிகு புகழ்குலவு மொஞ்சனூர் கொலங்கோயில்
உண்மையுள நயகொந்தளம்
நலமிகும் துக்காச்சி கார்வழிக் கிராமம் இரு
நான்குமேல் கரையரையநன்
நாடதற் குரியவாம் தானக் கிராமமிரு
நான்குமகு டேசலிங்கர்
தலமெனுங் கறைசையம் பதிவிதரி மிகுநலம்
சாந்தவெழு நூற்றுமங்கை
தங்குமிள வரசநல்லூர் வள்ளிபுர மெழில்
தான்கொள்வடி வுள்ளமங்கை

நிலைமைபெறும் ஊஞ்சலூர் திருக்காடு துறையென
நிகழ்த்துபதி பொன்னிகாஞ்சி
நீண்டஅனு மாநதி துலங்கு நன்னீதிகள்
நிறைந்துவளர் அரையநாடே

34. கல்வெட்டு : இதே செய்தியைக் கூறும் கல்வெட்டு திருப்பாண்டிக் கொடுமுடி, வீரநாராயணப் பெருமாள் கருவறைச் சுவரின் முதற் சுற்றில் செதுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கொங்கு பாண்டியனான கோவன்—சுந்தரபாண்டிய கேசரிவர்மன் என்பானின் இரண்டாவது ஆட்சி யாண்டு மாசி மாதம் 14-தேதி வெட்டப்பட்டது (கி.பி. பதிமூன்ரும் நூற்ருண்டு) திருப்பாண்டிக் கொடுமுடியாளுடைய நன்னுயர்க்கும் பெரிய திருவடி நாயனுற்கும் இறையிலி தேவதானமாக உதகம் பண்ணிக் கொடுத்த ஊர்ப்பட்டியலில் மேற்சொன்ன எட்டு ஊர்களும் உள்ளன. கல்லிலும் வெட்டிக்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.*

நல்ல வேளையாக, கோயிலிலிருந்த ஐந்து கல்வெட்டுகளில், திருப்பணி செய்தபோது ஏற்பட்ட அழிவில் மிஞ்சி இன்றும் உள்ளது இக்கல்வெட்டு ஒன்றேயாகும்.

35. குயவர் உரிமை : கோயில் 'மிராசு' உள்ள குயவர் பெருங்குடியில் இந்த எட்டு ஊர்களுக்கும் உள்ள உரிமையை அரைய நாட்டுக்குரிய குயவருக்கில்லாமல், தட்டய நாட்டுக் குயவர் அமர்த்தப் பட்டுள்ளதை இன்றும் அறியலாம்.

36. திருக்காடுதுறை கிராமம் மேல்கரை அரையநாட்டைச் சேர்ந்தது எனக் காட்டவே மேலே கண்ட சான்றுகள் காட்டப் பட்டன.

4. எனது கருதுகை : அரைய நாட்டின் எல்லைக் கிராமமான, திருக்காடுதுறை கிராமத்தின் எல்லையில் அமைந்துள்ளது இம்மலை. எனவே இது அரைய நாட்டுமலை அல்லது அரையநாட்டார்மலை ஆகலாம். அதுவே வழக்கில் ஆர்நாட்டாமலை என ஆகியிருத்தல் தெளிவாகும்.


5. முடிப்பு : எனவே ஐயமின்றி, உறுதியிட்டுக் கூற இயலும்வரை, தற்போது மக்கள் பேச்சு வழக்கில் உயிருடனிருக்கும் ஆர்நாட்டாமலை என்ற பெயரிலேயே வழங்குவதே நலம் பயக்கும். புதிய ஆய்வுகளுக்கும் வழிவகுக்கும்.

**குறிப்புகள்**

1. கல்வெட்டில் பக்கம் 67. தமிழகத் தொல்லியல் துறை வெளியீடு.

2. திருப்பாண்டிக் கொடுமுடி கோயில்கள் வரலாறு — புலவர் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்.

3. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் (பாகம் 1) பக். 331 சாசனம் எண். 251 மெக்கன்சி சுவடு எண் D33028 IV 85



# நாட்டுப் பிரிவுகள்

Y. சுப்பராயலு, M. -.,M.Litt.

ஆத்தூர், ஊத்தங்கரை வட்டங்கள் ஒழிந்த இன்றைய சேல மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், மதுரை மாவட்டத்தில் பழனி வட்டம், வேடசந்தூர் வட்டத்தில் பெரும்பகுதி, திருச்சி மாவட்டத்தில் கரூர் வட்டம் ஆகியவைகளை உட்கொண்ட நிலப்பகுதியே 'கொங்கு' நாடு அல்லது மண்டலம் ஆகும் என்பது கல்வெட்டுச் சான்றுலும், இலக்கியச் சான்றுலும் உறுதி பெறுகிறது. ஏறக்குறைய நான்கு பக்கங்களிலும் மலைகளால் சூழப்பட்ட ஒரு பீட பூமியாக இதுவுள்ளது .இயற்கையிலேயே ஒரு தனி நிலப்பகுதியின் தன்மையைப் பெற்ற இது, தமிழ் நாட்டு அரசியலிலும் ஒரு தனித் தன்மையைக் கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் பெயரே ஒரு புதிர்.

**பெயர்**

மலர்களின் மணத்துகள் இப்பெயரைக் கொடுத்தது என்பது பலர் கொள்கை. தமிழ் நாட்டில் வேறு எங்கும் இல்லாத சிறப்பு கொங்கு மலர்களுக்கு இருந்தது என்பது நம்பத் தக்கதாக இல்லை. 'குணக்கு' நாடுதான் திரிந்து கொங்கு நாடு ஆயிற்று என்பார் ஒருவர்.[1] பயனற்ற நிலம் என்ற வகையில் 'கொன்' என்ற அடிப்படையில் கொங்கு வந்தது என்பார் ஒருவர்.[2] மைசூர் மாவட்டத்திலுள்ள தழைக்காட்டைத் தலைநகராகக் கொண்டு கி பி. நான்காம் நூற்றுண்டிலிருந்து ஆட்சி செய்த கங்க அரசர்களின் குல முதல்வனை கொங்குணிவர்மன் என்பவனுல் இப்பெயர் வந்தது என்பது ஆராயத்தக்கது. முதல் மன்னன் மட்டுமல்ல; கங்க அரசர்கள் யாவருமே கொங்குணிவர்மன் என்ற சிறப்புப் பெயரைப் பூண்டிருந்தார்கள். சோழநாடு, மழபாடி, கங்கபாடி, வானகோப்பாடி, பங்கள நாடு, இருங்கோளப்பாடி, முத்தரையர் நாடு, என்ற பல அரச நிலப் பெயர்கள் ஏதோ ஒரு மன்னர் அல்லது குறுநில மன்னர் குலப்பெயரால் அமைந்துள்ளது தெரிந்ததே. அதுபோல கொங்கனி வர்மனின் குலத்தால் கொங்குநாடு பெயர் பெற்றதாகலாம். கங்க அரசர்கள்தான் கொங்கர் என்று சொல்ல வேண்டும். சங்க இலக்கியத்தில் பல இடங்களில் அவர்கள் பெயர் அடிபடுகிறது. கொங்கர்' கொங்கு மக்களை மொத்தமாகக் குறிப்பிட்டது என்பதற்குச் சான்று இல்லை. இன்றைக்குக் கொங்கர் என்றுல் பெரும்

யாலும் கொங்க வேளாளரைத்தான் குறிப்பது வழக்கம். கன்னட நாட்டு வேளாண் மக்கள் 'காமுண்டர்கள்' என அழைக்கப்பட்டார்கள் என்பது கல்வெட்டுக்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது இன்றைக்குக் கவுண்டர்கள் எனப்படும் கொங்குநாட்டு வேளாண் மக்கள் கன்னடப் பகுதியிலிருந்து குடிபோந்தவர்கள்தாம்[9] இந்த வகையில் கன்னட நாட்டுக்கும், கொங்கு நாட்டுக்கும் நிறையத் தொடர்புண்டு இந்தத் தொடர்பை ஏற்படுத்தியவர்கள் கங்க அரசர்களைத் தவிர வேறு எந்த அரசர்களையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது.

**நாட்டுப் பிரிவுகள் :**

வழக்கமாக கொங்கு 24 பிரிவுகளைக் கொண்டிருந்தது எனப்படுகிறது. இருபத்து நான்கும் 'நாடுகள்' எனப்பட்டன. 'கூற்றம்' ஒன்றுகூட இல்லை. கொங்கு மண்டல சதகத்தில் இணை நாடுகள், உப (அதாவது உள்) நாடுகள் வேறு இருந்தன எனக் குறிக்கப்படுகிறது. சதகத்தை 1923-ல் பதிப்பித்த திரு. தி.இ. முத்துசாமிக் கோனூர் கொங்கு முழுவதும் சுற்றித் திரட்டிய பல பாடல்களையும், தானே இயற்றிய சில பாடல்களையும் சேர்த்து கொங்கு மண்டல ஊர்த்தொகை என்ற ஒன்றை பிற்சேர்க்கையாகக் கொடுத்துள்ளார். இத்தொகையில் குறிப்பிடப்படும் நாடுகள் முப்பது. இவ்வெண்ணிக்கையில் இணைநாடுகளும், உபநாடுகளும் அடங்கும். இதில் சேர்க்கப்பட்டுள்ள விமலைநாடு கொங்குவைச் சேர்ந்ததா என்பது ஐயமே. இந்த நாடு திருச்சி மாவட்டம் முசிறி வட்டத்தில் காவிரியின் வடகரையில் இருந்தது. இந்த நாட்டுக்கு மேற்கே காவிரியோடு கலக்கும் ஒரு சிற்றுறு கரைபோட்டாறு என்பது. இந்த ஆறும், இதன் தொடர்ச்சியாகக் காவிரிக்குத் தென்கரையில் தென் வடலாக ஓடும் மதிள்கரை அல்லது கோட்டைக்கரை கொங்கு, சோழ மண்டலங்களைப் பிரிக்கும் எல்லைக் கோடாக இருந்தன. அந்த வகையில் விமலைநாடு (திருத்தமாக பீமலைநாடு) சோழ மண்டலத்தையே சேரும். இதன்றி ஊர்த்தொகையில் மட்டும் இடம் பெறும் நாடுகள் ஆறைநாடு, தலையநாடு, வாழவந்திநாடு, மனநாடு, தூசூர்நாடு, இடைப்பிச்சநாடு, ஆனைமலைநாடு, ராசிபுர நாடு ஆகியன. ஆறைநாடு கல்வெட்டுக்களில் சுட்டப்படும் வட பரிசாரநாடே என்பது இரு நாடுகளில் ஊர்களை ஒத்திட்டுப் பார்த்தால் விளங்கும். மற்ற நாடுகள் இனிமேல் கிடைக்கும் கல்வெட்டுக்களில் கிடைக்கலாம்.

கல்வெட்டுக்களில் பதின்மூன்றும் நூற்றுண்டு முடிய சுட்டப்படும் நாடுகள் இருபத்தாறு. ஐயப்பாட்டிற்கு இடமளிக்கும் சில நாடுகளையும் பதின்மூன்றும் நூற்றுண்டுக்குப் பிந்திய கல்வெட்டுக்

களில் கிடைக்கும் நாடுகளையும் சேர்த்தால் மொத்தம் முப்பத்தைந்து இருக்கும். இவைகளில் கரைவழிநாடு, கீட்பா நாடு, நரையனூர்நாடு, நாடாழ்வார்நாடு, வடபரிசாரநாடு, காஞ்சித்துண்டம், மூலைநாடு, நாற்காலிநாடு, ஒன்பதுகரைநாடு, பல்லவரையன்நாடு, திணைக்களூம்பைநாடு, தென்வழிநாடு, வலுப்புக்கா நாடு ஆகியன ஊர்த்தொகையில் இடம் பெறவில்லை. தொகையில் கரை வழிநாட்டு ஊர்கள் வையாபுரி நாட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. வடபரிசார நாடும்,ஆறைநாடும் ஒன்று என மேலே குறிப்பிட்டேன். மற்ற நாடுகள் ஊர்த்தொகைப் பாடல்கள் எழுந்த காலத்தில் வழக்கற்றிருக்கலாம். இந்தச் செய்திகளிலிருந்து கல் வெட்டு நாடுகளுக்கும், ஊர்த்தொகை நாடுகளுக்கும் ஓரளவு வேறுபாடு இருப்பதைக் காணலாம். ஊர்த்தொகையைப் பொறுத்து ஒரு முக்கிய குறை இருக்கிறது. ஊர்த்தொகை எந்தக் காலத்தைச் சேர்ந்தது என்பதை அறுதியிட முடியாது. பாளையம், பட்டி என்று முடியும் ஊர்கள் இதில் இருப்பதால் பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பிந்தியதாக இதைக் கொள்ளலாம். இன்னொன்று ஒரே ஊர் இரண்டு நாடுகளில் இருப்பதாகப் பல இடங்களில் குறிக்கப்பட்டிருக்கிறது. சில நாடுகளின் பெயர்கள் மாறியும், திரிந்தும் காணப்படுகின்றன. இந்தக் குறைகள் இருந்தாலும் கல்வெட்டுச் செய்திகளை உறுதிப்படுத்த அல்லது விளக்கிக்கூற இந்தத் தொகை நன்றாகப் பயன்படுகிறது.

**நாடுகளின் தன்மைகள் :**

நாடுகளின் பெயர்கள் பெரும்பாலும் முக்கிய ஊர்களையொட்டி அமைந்திருக்கின்றன. காவடிக்கால்நாடு, வாயறைக்கால்நாடு ஆகியன நீர்க்கால்களை அடிப்படையாக வைத்துப் பெயர் பெற்றிருக்கின்றன. பொங்கலூர்க்கா நாட்டையும் இதில் சேர்க்கலாம். கரைவழி நாடென்பது அமராவதி ஆற்றில் துவக்க நிலையில் கரையோரமாக அமைந்த நாடாகும். *குறும்பு நாடு, நாடாழ்வார்நாடு ஆகியன ஆட்களை மையமாக வைத்துப் பிறந்தன போல் தெரிகின்றன. சில நாடுகள் இரட்டை நாடுகளாக உள்ளன. காவிரிக்கு மேற்கிலிருந்தது மேல்கரை அரைய நாடெனவும் கிழக்கிலிருந்தது கீழ்கரை அரைய நாடெனவும் ஆயின. அதே போல பூந்துறை நாடு காவிரிக்கு மேற்கில் மேல்கரைப் பூந்துறை நாடெனவும், கிழக்கில் கீழ்கரைப் பூந்துறை நாடெனவும் பெயர் பெற்றது. பூவாணிய நாடு ஓமலூர், திருச்செங்கோடு வட்டங்கள் வழியாக ஓடி

---

* சென்னிமலைக் கருகில் குறும்பொறை மலை இருந்தது. அதிலிருந்து தொடங்கும் நாடு குறும்பு நாடாகும் காண்க: குறும்பொறைக் கோமான் : கொங்கு, மார்ச்சு 72.

காவிரியோடு கலக்கும் சித்தாறு அல்லது சிரபங்கா என்ற ஆற்றை மையமாக வைத்து, வடபூவாணிய நாடு எனவும் தென்பூவாணிய நாடு எனவும் இரண்டாயின. அமராவதிக்குத் தென்கரையில் இருந்த இரு நாடுகள் தென் பொங்கலூர்க்கா நாடும் தென்கரை நாடும் ஆகும். அதேபோல் பவானி ஆற்றின் வடகரையில் இருந்தது வடகரைநாடு என அழைக்கப்பட்டது.

இந்த நாடுகள் எக்காலத்திலிருந்து வழக்கிற்கு வந்தன என்பதை இப்போதுள்ள சான்றுகளை வைத்துச் சொல்ல முடியாது. ஆனால் அடிப்படையில் இவை அரசியல் பிரிவுகள் அல்ல என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியும்.* சமுதாயப் பிரிவுகளே இவை. அதாவது, வேளாண் குடியிருப்புகளின் தொகுதிகளே நாடுகளாக மலர்ந்தன. பின்னால் இவை அரசியலுக்கு ஓரளவுக்குப் பயன் படுத்தப்பட்டாலும் பெரும்பாலும் இவை சமுதாயக் கூறுகளாகவே அண்மைக்காலம் வரை நீடித்தன. ஒவ்வொரு நாட்டிலுள்ள வேளாண்மக்களும் ஒரு உறவுக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள் முதலில். விளங்கச் சொன்னால் ஒரு நாட்டி லுள்ளோர் யாவரும் ஒரு தாயாதிகள். இன்றைக்கும் கொங்குப் பகுதியிலுள்ள சில வகுப்பாரின் தயாதிப் பிரிவினைகள் 24 நாடுக ளாக உள்ளன. ஊர்த் தொகையில் காணப்படும் இணைநாடுகள் மிக நெருங்கிய தாயாதிக் கூட்டங்களைக் குறிப்பனவாகக் கொள்ள லாம். நாடுகளை அடிப்படையில் அரசியல் பிரிவுகளாக எடுத்துக் கொண்டால் மேற்சுட்டிய சமுதாயக் கூறுகளை விளக்க முடியாது. மண்டல முழுவதும் பரந்திருந்த பெரும் சமுதாயத்தின் மறுபதிப் பான, ஆனால் அளவில் சுருங்கிய பதிப்பான ஒரு சமுதாயக் கூற்றைக் கொண்டதாக ஒவ்வொரு நாடும் இருந்தது. அவ்வந் நாட்டில் நடக்கும் அத்தனை சமுதாயச் செயல்களையும், அவ்வந் நாட்டாரே, அதாவது அவ்வந்நாட்டுப் பெரிய குடிகளே, கூடிக் கவனித்து வந்தார்கள். இவர்கள் பொதுவாக நாட்டார் எனப் பட்டனர். சில சமயங்களில் பல நாடுகள் ஒருங்கிணைந்தும் செயல் பட்டன. அவை சித்திரமேழிப் பெரிய நாடுகள் எனப்பட்டன. இவை கூடும் கூட்டங்கள் மகாநாட்டு (பெரிய நாட்டு)க்கூட்டங்கள் என்று அழைக்கப்பட்டன. (இன்று பெருவாரியாக வழங்கப்படும் 'மாநாடு' என்னும் சொல் இப்படித் தோன்றியதுதான்.)

**பெரும் பிரிவுகள் :**

கொங்கு மூன்று அல்லது இரண்டு பிரிவுகளாகப் பிரிந்திருந்தது என்று நம்பப்படுகிறது. 1207-லிருந்து 1252 வரை ஆண்ட

* புலவர் இராசு அவர்களின் கட்டுரையில் இதற்கு எதிர்க்கருத்து சொல்லப்படுகிறது. அத்துடன் ஒப்பிட்டுப் பார்த்திடுக.

கொங்குச் சோழன் வீர ராஜேந்திரன் இரண்டு கொங்குகளையும் ஒன்றாக ஆண்டதாக அவன் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இந்த இரண்டு கொங்குகள் வடகொங்கு, தென்கொங்கு ஆகியன எனக் கொள்ளல் வேண்டும். இதில் தென்கொங்கைப் பற்றி இது வரை கிடைத்த சான்றுகளில் எந்த இடத்திலும் குறிப்பு இல்லை. வடகொங்கு சில கல்வெட்டுக்களில் சுட்டப்படுகிறது. அக் கல்வெட்டுக்களை வைத்து முடிவு கட்டினால் ஏறக்குறைய கொங்கின் முக்கால் பகுதிக்கு மேல் வடகொங்கைச் சேரும். ராஜராஜபுரம் எனப் பெயர் பெற்ற இன்றைய தாராபுரமே வட கொங்கில் இருந்ததாகக் குறிப்புள்ளது.[4] இதிலிருந்து ஒரு ஊகத்தை மேற்கொள்ளலாம். அதாவது உடுமலை வட்டத்திலுள்ள கொழுமத்தை மையமாக வைத்து இருந்த ஒரு சிறு பகுதி மட்டும் தென் கொங்காக இருந்தது என்பது. மழகொங்கம் என்று வேள்விக்குடி செப்பேடுகளில் குறிப்பிடப்படும் பகுதி எது என்று நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. இதை மழநாடு அல்லது மழபாடியோடு ஒன்றுக்க முடியாது. ஒருவேளை மழவர் கீழ் இருந்த கொங்கின் ஒரு பகுதி (அது நாமக்கல் வட்டத்தில் இருந்திருக்க வேண்டும்) மழகொங்கம் எனப்பட்டது எனலாம்.

முடிக்குமுன் ஒரு குறிப்பு: நிலப்பிரிவுகளைப் படிக்கும் பொழுது நிலப்படங்கள் இல்லாமல் ஆராய்வது வெறும் ஊகமாகத்தான் பெரும்பாலும் அமையும். ஊர்த்தொகை நாடுகளையும், கல்வெட்டு நாடுகளையும் தனித்தனியாக நிலப்படங்களில் குறித்து இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தெளிவான முடிவுகள் கிடைக்கும்.[4] அதுவரைக்கும் மேலே சொன்ன பல கருத்துக்கள் தற்காலிகக் கருத்துக்களாகவே கொள்ள வேண்டும்.

## இணைப்பு—1

| | கல்வெட்டு நாடுகள் | இன்றைய நிலப்பரப்பு | ஊர்த்தொகை நாடுகள் |
|---|---|---|---|
| 1. | அண்டநாடு | பழனி வட்டம் | அண்டநாடு |
| 2. | — | — | ஆறை நாடு |
| 3. | (அ) அரையநாடு மேல்கரை | ஈரோடு வ. | அரையநாடு, மேல்கரை |
| | (ஆ) அரையநாடு கீழ்கரை | — | அரையநாடு, கீழ்கரை |

| | கல்வெட்டு நாடுகள் | இன்றைய நிலப்பரப்பு | ஊர்த்தொகை நாடுகள் |
|---|---|---|---|
| 4. | — | — | ஆனைமலை நாடு |
| 5. | — | — | இடைப்பிச்ச நாடு (வெங்காலநாட்டின் இ. நா.) |
| 6. | — | — | இராசிபுர நாடு |
| 7. | ஏழூர் நாடு | — | ஏழூர் நாடு (பூந்துறையின் இ. நா.) |
| 8. | — | — | ஒருவங்க நாடு |
| 9. | கரைநாடு, தென் | தாராபுரம் வ. | கரைநாடு, தென் |
| 10. | கரைநாடு, வட | பவானி வ. | கரைநாடு, வட |
| 11. | கரைவழிநாடு | உடுமலை வ. | (வையாபுரி நாடு) |
| 12. | காங்கய நாடு | தாராபுரம் வ. | காங்கேய நாடு |
| 13. | காஞ்சிக் கூவல் நாடு | கோபி வ. | காஞ்சிக் கோயில் நாடு |
| 14. | காவடிக்கால் நாடு | பொள்ளாச்சி வ. | காவடிக்க நாடு |
| 15. | கிழங்க நாடு | கரூர் வ. | கிழங்கு நாடு |
| 16. | கீட்பா நாடு | — | — |
| 17. | குறுப்பு நாடு | ஈரோடு வ. | குறும்பு நாடு |
| 18. | செவ்ஹூர் நாடு | அவிநாசி | — |
| 19. | சேல நாடு | திருச்செங்கோடு சேலம் வ. | சேலம் நாடு (ராசிபுர நாட்டின் உ. நா. |
| 20. | தட்டைகள நாடு (தட்டையூர் நாடு) | கரூர் வ. | தட்டய நாடு |
| | — | — | தலைய நாடு |
| 21. | நரையனூர் நாடு | தாராபுரம் வ. | — |
| 22. | நல்லுருக்கு நாடு | உடுமலை வ. | நல்லுருக்கு நாடு |
| 23. | நாடாழ்வார் நாடு | திருச்செங்கோடு வ. | பருத்திப்பள்ளி நாடு (பூந்துறை இ. நா.) |
| 24. | பரிசார நாடு, வட | அவிநாசி, கோபி வ. | — |

| | கல்வெட்டு நாடுகள் | இன்றைய நிலப்பரப்பு | ஊர்த்தொகை நாடுகள் |
|---|---|---|---|
| 25. | (அ) பூந்துறை நாடு | ஈரோடு வ. | — |
| | (ஆ) பூந்துறை நாடு, மேல்கரை | ஈரோடு வ. | பூந்துறை நாடு, மேல்கரை |
| | (இ) பூந்துறை நாடு, கீழ்கரை | திருச்செங்கோடு வ. | பூந்துறை நாடு, கீழ்கரை |
| 26. | (அ) பூவாணிய நாடு | ஓமலூர், திருச்செங் கோடு வ. | பூவாணிய நாடு |
| | (ஆ) பூவாணிய நாடு, தென் | திருச்செங்கோடு வ. | — |
| | (இ) பூவாணிய நாடு. வட | ஓமலூர் வ. | — |
| 27. | பேரூர் நாடு | கோயம்புத்தூர் வ. | — |
| 28. | (அ) பொங்க லூர்கா நாடு | தாராபுரம், பல்லடம், பழனி வ. | பொங்கலூர் நாடு |
| | (ஆ) பொங்க ளூர்கா நாடு, தென் | உடுமலை, தாரா புரம் வ. | பொங்கலூர் நாடு, தென் |
| 29. | — | — | மண நாடு |
| 30. | — | — | வாழவந்தி நாடு |
| 31. | வாயரைக்கால் நாடு | பல்லடம் | வாரக்க நாடு |
| 32. | வெங்கால நாடு | கரூர் | வெங்கால நாடு |
| 33. | வைகாவூர் நாடு | பழனி | வையாபுரி நாடு |
| 34. | — | — | தூசூர் நாடு } வாழவந்தி நாட்டின் உப நாடுகள் |
| 35. | மீமலை (சோழ மண்டலம்) | — | விமலை நாடு } வாழவந்தி நாட்டின் உப நாடுகள் |
| 36. | — | — | இடைப்பிச்சநாடு (வெங்கால நாட் டின் இ.நா. |

# இணைப்பு-2

**கல்வெட்டுக்களில் உள்ள பிறநாடுகள்**

1. ஒடுவங்க நாடு
2. ஒன்பது கரை நாடு
3. காஞ்சித் துண்டம் (காஞ்சிக் கூவத் துண்டம்)
4. திணைக்களும்பை நாடு
5. தென் வழி நாடு
6. நற்காவிரி நாடு
7. பருத்திப் பள்ளி நாடு
8. பல்லவரையன் நாடு
9. மூலை நாடு
10. வலுப்புக்கா நாடு
11. வாஞ்சி நாடு

**அடிக் குறிப்புக்கள்:**

1. கி. நாச்சிமுத்து, சோழன்பூர்வபட்டயம் கூறும் கொங்கு நாட்டு ஊர்கள் (திருவனந்தபுரம், 1969) ப. 13
2. —,,—
3. இந்த மக்கட் பெயர்ச்சி கொங்கிலிருந்து வடக்கு நோக்கி ஏற்பட்டிருக்காதா என்ற கேள்வி எழுவதற்கு இடமில்லை. வரலாறு தெளிவான சான்றுகளை நம்பி அமைய வேண்டி இருக்கிறது. கிடைக்கும் சான்றுகளில் இலக்கியச் சான்றுகள் இந்தச் சிக்கலுக்கு எந்த வகையிலும் உதவ வில்லை. கல்வெட்டுச் சான்றுகளை நாடும் பொழுது மகாராட்டிர மாநிலத்திலிருந்து மைசூர்த் தென் கோடி வரை இருந்த 'காமுண்டர்' கொங்குக் காமுண்டருக்குக் காலத்தால் முற்பட்டவராகத் தெரிகிறார்கள். வாதாபிச் சாளுக்கியரின் தலைநகரைச் சூழஅமைந்துள்ள கருனடகப் பகுதியில் (தார்வார், பெல்காம் மாவட்டப் பகுதிகள்) ஏறக்குறைய ஏழாம் நூற்றாண்டிலிருந்தே (அதாவது) கன்னட மொழியில் கல்வெட்டுககள் எழுதத் தொடங்கிய காலத்திலிருந்து) காமுண்டர் செல்வாக்குப் பெற்ற

நிலையில் காணப்படுகிறார்கள். வேளாண் மக்களாகிய இவர்கள் ஊர்த் தலைவர்களாகவும் நாட்டுத் தலைவர்களாக வும் குறிக்கப்படுகிறார்கள். நாட்டுத் தலைவர்கள் நாள் காமுண்டர் (Nal-gamundar) என்றழைக்கப்பட்டார்கள். (ARE. 1960-61 Introduction pp.24-25)மாறாகக் கொங்குப் பகுதியில் கிடைக்கும் காமுண்டரைப் பற்றிய குறிப்புக்கள் காலத்தால் சில நூற்றாண்டுகள் பிற்பட்டவை. கி.பி. 13-ம் நூற்றாண்டிலிருந்துதான் இக்குறிப்புக்கள் கிடைக்கின்றன. இதைக் கொண்டு இந்தக் காலத்தில்தான் இவர்கள் கொங்குப் பகுதியில் குடியேறினர் என்று முடிவுகட்ட வேண்டியதில்லை. துவக்க நிலையில் சிறு அளவில் ஏற்பட்ட குடியேற்றம் இக்காலத்தில் பெருகியது எனலாம். [கொங்கு-இரண்டாம்தொகுதி 1972 பக்கம் 208-209&281 பக்கங்களில் வெளிவந்த கவுண்டர் கட்டுரையும், ஐயம் தெளிமின் பகுதியும் காண்க. பிரும்மராயர் கருத்துப்படி மக்கள் தொன்று தொட்டு வாழ்ந்தவர்களே சொல் மட்டும் கன்னட நாட்டிலிருந்து பின்னர்வந்து சேர்ந்துகொண்டது. [கொங்கு, மார்ச்சு 73 இதழில் வந்த 'வேளாளர்' என்ற கட்டுரையையும் காண்க எடுத்துரை ஆசிரியருக்கு மாற் றுக் கருத்துக்கள் பலவுண்டு ப-ர்]

4. ARE 1905 : 582

5. கோவை கிழார் கோ.ம. இராமச்சந்திரஞ் செட்டியார் தம் 'கொங்கு நாட்டு வரலாறு' நூலில் முதன் முறையாக இம் முயற்சியை மேற்கொண்டார். ஆனால் அவருடைய படங்கள் தெளிவாக இல்லை. சான்றுகளைக் கால நோக்கில் அவர் ஆயவில்லை. பல இடங்களில் நாட்டுப் பெயர்கள் பிழைபடக் குறிக்கப்பட்டுள்ளன.



# பொன்மலி கொங்கின் புலமை நங்கை

ஔவை நடராசன், M.A., M.Litt.

வடக்கும், தெற்கும், குணக்கும், குடக்கும் வேங்கடம் குமரி தீம்புனற் பௌவம் என்று இந்நான்கு எல்லை அகவயிற் கிடந்த அருந்தமிழகத்தை,'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' எனத் தொல்காப்பியர் வழங்குவர். சேர, சோழ, பாண்டிய நாடுகளான இவை குடபுலம் குணபுலம், தென்புலம் எனவும் குறிக்கப்பட்டன. சேரரின் குடபுலம் மலைநாடு கொங்குநாடு எனவும் வளவருக்கான குணபுலம், சோழநாடு, தொண்டைநாடு எனவும் பிரிவுற்றுத் தமிழ்நாடு சேர மண்டலம், பாண்டியமண்டலம், சோழ மண்டலம், தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம் என ஐந்து மாநிலங்களாக அமைந்து தனித்தனி ஆட்சியில் தகவுறச் சிறந்தன.

'தமிழ் மண்டலம் ஐந்தும் தாவிய
ஞானம் உமிழ்வது போல உலகந் திரிவர்'

என வரும் திருமூலர் பெருமொழி இவ்வரையறையை வலியுறுத்தும் இவ்வாறு பழங்காலந்தொட்டே கொங்குநாடு தனி நாடாக இருந்த பெருமை சான்றது.

பெருந்தலைக் 'கொங்கு புறம் பெற்ற கொற்ற வேந்தே' என்ற புறப்பாட்டு அடியினுல் கொங்கு தனிநாடாக இருந்த சிறப்பினையும் அறியலாம். கொங்கர் எனப்படுவார் தாம் வாழ்ந்த இடத்தையே பின்னர் கொங்குநாடென அழைத்தனரோ என்பது ஆராய்தற்குரியது.

'பூமகட்கும், அற்புத நெடுந் திறலணிப் புனிதக்
கோமகட்கும், நெட்டிதழ் விரி பங்கயக் கோவின்
மாமகட்கும் இன்னமுதுறழ் கவிவலர் வழுத்து
நாமகட்கும் ஓர் உறையுளாங் கொங்கு நன்னாடு'

எனத் துடிசைப் புராணமுடையார் கூறுதற்கேற்ப, இணையில்லாப் பொன்னால் கொங்கு சிறந்தது போல, ஈடில்லாப் பெண்ணாலும் சிறந்தது.

சங்க இலக்கிய நல்லிசைப் புலமை மெல்லியலாருள் அஞ்சி அத்தைமகள் நாகையார், காக்கைபாடினியார் நச்செள்ளையார், குறமகள் இளவெயினியார், பொன்முடியார் என்ற நால்வரும் கொங்கு நாட்டில் புலமைச் செல்வியராகத் திகழ்ந்தனர். ஔவையாரையும் கொங்கு நாட்டார் எனக் கூறுவர். ஆய்வுக்கான அறி

கருவிகள் தக்க வகையில் அகப்படாமற் போவதால், ஊர் பேர் தெரியாத புலமை ஒண்டொடியர் பலர் இருப்பவும், அவர்களை ஆராய்ந்து தெளிய இயலவில்லை.

## அஞ்சி அத்தை மகள் நாகையார்

அதியமான் நெடுமான் அஞ்சியின் அத்தை மகளாகிய நாகையார், அஞ்சி அத்தையின் மகளாராகிய நாகையார், அஞ்சில் ஆந்தை மகள் நாகையார், அஞ்சில் ஆந்தை மகளுர் நாகையார், அஞ்சி அகுதை மகளாகிய நாகையார் எனவும் இப்பெயர் பலவாருகக் குறிக்கப்படுகின்றன. 'நாகை' என்பது பெண்பாற் பெயராதலின் அஞ்சில் ஆந்தை மகளுர் என்பது பிழையாதல் தெளிவாம். துடிசை கிழார் சிதம்பரனுர் இவரை அஞ்சில் ஆந்தை மகளார் நாகையார் எனக் குறிக்கின்ருர். இவ்வாறு இவர் கோடற்கு ஆதாரமில்லை. அன்றியும் பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் என்பது போல மகள் என்பதன்றி, மகளார் எனும் வழக்கு, தொகை நூல்களுள் இல்லையாதலால் அவர் கொண்ட பாடம் ஏற்கத்தக்கதாக இல்லை. அத்தை என்பதை அகுதை எனக் கொண்டது ஏடெழுதியோரால் இயைந்த பிழையாகும். காணப்பெற்ற இரண்டு ஏடுகளுள் அஞ்சி அத்தை என்றே காணப்பட்டது என்பர். நெடும் பல்லியத்தை என்ருற்போல் அஞ்சி அத்தை என்பதையும் ஒரு பெயராகக் கொள்ள இடமுண்டு எனிலும் 'கடும் பரிப் புரவி நெடுந் தேர் அஞ்சி' என்பது அதியமான் நெடுமான் அஞ்சியைக் குறிக்கும் தொடராகக் கொள்வதற்கு ஔவையாருடைய புறப்பாட்டு அடிகளாகிய 'கடுமான் தோன்றல் நெடுமானஞ்சி' (புற 206) என்பதும் 'கடும் பகட்டு யானை நெடுந்தேர் அஞ்சி (கு.91) என்பதும் உதவுகின்றன. அத்தை என்பது சங்க இலக்கியத்துள் முன்னிலை அசைச் சொல்லாகவே ஆளப்படுகிறது. 'அத்தன்' என்பது தந்தையைக் குறிக்கும் உறவுப் பெயராகும். இந்த அத்தன் என்பதே 'அச்சன்' என மலையாளத்தில் இன்றும் வழங்குகிறது. அத்தன் மனைவி ஆத்தாள் என்றும், அத்தன் தங்கை அத்தை என்றும், அத்தையின் மகன் அத்தான் என்றும், அத்தையின் மகள் அத்தாச்சி என்றும், அத்தையன்பர் அத்திம்பேர் என்றும் இன்றும் வழங்கிடக்காணலாம். எனவே அஞ்சிக்கு அத்தை மகள் ஆவார் இவ்வம்மையார் என்பது பெயரால் புலப்படுதலாலும், இவர் தாம் பாடிய அகப்பாடலில் அதியமான் நெடுமான் அஞ்சியின் அரசவையுள் உரைசால் பாண்மகன் ஒழுங்குறப் பாடும்பண்ணின் உயர்வினைப் பலபடப்பாராட்டுதலாலும் உரைவேந்தர் ஔவை துரைசாமி அவர்கள் அதியமான் நெடுமான் அஞ்சிக்கு இவளை மணமகளாக்கி 'அவன்தான் அஞ்சியை மணந்து இன்புற்ற நாளில் ஒருநாள் மலைச்சாரல் காட்சியையும், அஞ்சியின்

அவையில் இசைப்பாணர் புதுவகையான திறங்களைப் புணர்த்துப் பாடும் நலத்தையும் ஓதிப் பாராட்டியுள்ளார்' என்று தன் புறநானூற்று உரையில் எழுதுவாராயினர். உரைவேந்தரின் இக்கருத்திற்குப் புலவர் குழந்தை, புலவர் பாண்டியனார் முதலானோர் உடன்படுவாராயினர். அத்தை மகளாவாரெல்லாம் மணமகளிராதல் இல்லை என்பதாலும், அதியனோடு அணுகிப் பழகிய ஔவையார் பாடலில் இவரைப் பற்றிய குறிப்பில்லாததாலும் உரைவேந்தரின் ஊகம்தான் பெரிதாகிறதே தவிர உண்மை உணர வழியில்லை. இனி நாகையார் என்ற தமிழ்ப் பெயர் நாகர் இனப் பெயராகும் என்று கொண்டு தமிழரும் இந்நாட்டில் வந்தேறிகளே என்று வம்புரைப்பாருமுளர். நாகு என்பது இளமையைக் குறிப்பதோர் சொல். அது உயர்திணைக் காகாது என்றும் இலக்கணம் கூறும். சீவக சிந்தாமணி உரையாசிரியர் நாகு என்பதற்குப் பெண்மை எனப் பொதுவாகப் பொருள் கூறுவர். எனினும் இளமை பொருளாகப் பெயரிடுவது இன்றும் வழக்க மாதலாலும் குமரி, இளையவன், பாலன், வாலாம்பாள், மங்கை என்ற பெயரீடுகள் வழங்குவதாலும் இவ்வம்மையாருக்கு நாகை என்ற பெயரிட்டனர் போலும். கிமு.200ல் தொடங்கப்பெற்று கி.பி. 150 அல்லது 200ல் கட்டிமுடிக்கப்பட்ட அமராவதி பௌத்த தூபியில் கிடைத்த கற்றூண் ஒன்றில் தமிழன் கண்ணனும் அவன் தம்பி இளங்கண்ணனும் அவன் தங்கை நாகை என்பவரும் சேர்ந்து அத்தூண் திருப்பணியைச் செய்ததாக எழுதப்பட்டுள்ளது. எனவே நெடுங்காலத்துக்கு முன்னரே தமிழ் மகளிர் நாகை என்ற பெயர் பூண்டிருந்தனர் என்றும், அதன் வழித் தொடர்பாகவே இன்றும் கொங்கு மாவட்டத்தினர் நாகம்மையார் என்ற பெயரை மக்களுக்கு இட்டு வருகின்றனர் எனவும் கூறலாம்.

இதுகாறும் கூறியவாற்றால் அதியன் நெடுமான் அஞ்சியின் அத்தை மகளாகிய நாகையார் என்பது இவ்வம்மையாரின் பெயர் விளக்கமாகும்.

'முடவு முதிர் பலவின் குடம் மருள் பெரும் பழம்
பல கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்,
பாடு இமிழ் அருவிப் பாறை மருங்கின்
ஆடு மயில் முன்னது ஆக, கோடியர்
விழவு கொள் மூதூர் விறலி பின்றை
முழவன் போல அகப்படத் தழீஇ,
இன் துணைப் பயிரும் குன்ற நாடன்
குடி நன்கு உடையன், கூடுநர்ப் பிரியலன்,
கெடு நா மொழியலன், அன்பினன்' என நீ
வல்ல கூறி, வாய்வதின் புணர்த்தோய்
நல்லை, காண், இனி—காதல் அம்தோழீஇ!

கடும் பரிப் புரவி நெடுந்தேர் அஞ்சி,
நல் இசை நிறுத்த நயம் வரு பனுவல்,
தொல் இசை நிறீஇய உரைசால் பாண்மகன்
எண்ணு முறை நிறுத்த பண்ணினுள்ளும்;
புதுவது புனைந்த திறத்தினும்,
வதுவை நாளினும், இனியனுல் எமக்கே. (அகம்.352)குறிஞ்சி.

நாகையார் வாழ்ந்த தகடூர் நாடு இருண்ட காடு போர்த்த மலைகளையும் குன்றுகளையும் உடையது. அவற்றைக் கண்டும் அவற்றிடை உலவி இவர் பயின்றவ ரென்றதற்கு ஐயமில்லை. அக்காட்சிகள் உள்ளத்தே உறைந்து கிடப்பதால், மலைநாட்டை எண்ணியவுடன், பாறைமேல் நின்று மயிலாடுவதும், பலாப்பழத்தைப் பற்றிக்கொண்டு குரங்கு இருமருங்கும் கைகொட்டித் தன் இனமான ஏனைக் குரங்குகளைத் தன்னிடம் வருவிப்பதுமாகிய காட்சி நினைவில் எழுகிறது. அதனைப் பாட்டில் தொடுக்க முற்பட்டதும், விழாக் காலத்தில் ஊர் நடுவில் அமைந்த ஆடற்களத்தில் ஆடல்மகளான விறலியாடுவதும் அவள் பின்னே இருந்து முடிவு வாசிப்பதும் ஆகிய கூத்தை மனக் கண்ணில் நிறுத்தி மலைக் காட்சிக்கு இனிமை யூட்டுகிறுர்.

முடவு முதிர் பலவின் குடமருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
பாடிமிழ் அருவிப் பாறை மருங்கில்
ஆடு மயில் முன்ன தாகக் கோடியர்
விழவுகொள் மூதூர் விறலி பின்றை
முழவன் போலக் கைப்படத் தழீஇ
இன்றுணைப் பயிரும் குன்ற நாடன் (அகம்.352, 1-7)

என்று பாடுகிறுர். ஆடல் மகளின் ஆட்டத்தை ஊரவர் கூடியிருந்து கண்டு மகிழ்வர். மயிலாடக் கண்ட குரங்கு (கடுவன்) தன் இனத்தை வருவித்து, உவமையால் உருவாகிய உள்ளக்காட்சியை உருப்படுத்தி நிறைவு செய்கிறது.

இதனைப் பாடும் நாகையார்க்கு இசையும் ஆடலும் விரவிய கூத்து நினைவில் எழுதற்கு மற்ருெரு குறிப்பும் உண்டு. அவர்க்கு இசைத்துறையில் நல்ல புலமையும் உண்டெென அவர் கூறும் சில சொற்கள் புலப்படுத்துகின்றன. அதியமான் நெடுமான் அஞ்சி புலவர்க்குப் பொருள் அளித்து இயற்றமிழையும், பாணர்க்குப் பொன் தந்து இசையையும், கூத்தர்க்குப் பரிசளித்துக் கூத்தையும் ஆதரித்துப் பேணும் வள்ளல். அதனுல் அவன் அவைக்களத்தில் புலவர் முதலியோர் போந்து தமது புலமை நலத்தைக் காட்டிச் சிறப்புப் பெறும் ஆசையால் நாளும் வந்தவண்ணம் இருப்பர். அவருள் இசைப்புலவரின் வித்தகங்களை நாகையார் கண்டும் கேட்டும் இன்புற்றவர். அக்குறிப்புத் தோன்ற,

..................நெடுந்தேர் அஞ்சி
நல்லிசை நிறுத்த நயவரு பனுவல்
தொல்லிசை நிறீஇய உரைசால் பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்திலும்'

என இப்பாட்டின் இறுதியில் காட்டுகின்றார்.

இம்மலைக்காட்சி அமைந்த பேரூர் ஒன்றின் பெருமனையில் தலைமகளும் தோழியும் உரையாடும் முறையில் இப்பாட்டின் உரிப்பொருளை உரைக்கின்றார். மணம் செய்து கொண்டு தலைவனோடு இருந்து மனைவாழ்க்கை நடத்தும் தலைமகளை அவளுடைய தோழி போந்து கண்டு மகிழ்கின்றாள். அம் மகிழ்ச்சியில், கணவனது காதலன்பைக் கூறவேண்டிய நிலை தலைவிக்கு உளதாகிறது. காலவோட்டத்தில் புதுமை பழமையாவதும் ஒளியுடையன ஒளி குறைவதும், மணம் கமழ்வன மணம் குன்றலும் இயல்பு. இம்முறையில் அன்பரது அன்பும் பழகப் பழகக் குறைவதும் உண்டு. ஆனால் தலைவனது காதல் நலம் வதுவை நாளில் இருந்ததைவிட மிகுந்த வண்ணம் இருக்கிறது எனத் தலைவி கூறுவாளாய், புதுவது புனைந்த திறத்திலும், வதுவை நாளினும் இனியனால் எமக்கே' என மொழிகின்றாள். இது உலகியற்கு மாறுதலால் தோழி வியந்து நோக்குகிறாள். அக்குறிப்பை முன் கூட்டியே கருதிய தலைவி, தொடக்கத்தில் தலைமகனை எனக்கு அறிவித்தபோது,

குடி நன்குடையன் கூடுநர்ப் பிரியலன்
கெடுநா மொழியலன் அன்பினன் என நீ
வல்ல கூறி வாய்வதிற் புணர்த்தோய்,

என்று சொல்லி நீ அன்று மெய்யே மொழிந்தாய். அதனை நினைந்து நின்பால் அன்பு மிகுகின்றேன் என்ற கருத்துப்பட,

'நல்லை காண் நிற்காதலம் தோழி'

என உரைக்கின்றாள்.

நிற்காதலம் எனப் பன்மையால் கூறுவதனால் நின் உரை மெய்யாதலை எண்ணித் தலைமகனும் என்னோடு உணர்வொத்து மகிழ்கின்றான் எனத் தோழி உணர்ந்து கொள்ள உரைக்கின்றாளாம்.

17 வரிகளால் நடைபெறும் இவ்வகப்பாட்டு முடவு முதிர் பலவு குடம் மருள் பெரும்பழம், பல்கிளைத் தலைவன், கல்லாக் கடுவன், பாடிமிழ் அருவி, ஆடு மயில், விழவுகொள் மூதூர், காதலம் தோழி, கடும்பரிப்புரவி, நெடுந்தேர், நல்லிசை, நயம்வரு பனுவல், தொல்லிசை உரைசால் பாண்மகன், புதுவது புனைந்த திறம் என 15சொற்கள் பெயரடை பூண்டே மிடுக்கோடு மிளிர்வதைக் காணலாம். ஆன்ற உணர்வுகளின் அழுத்தத்தின் பயனாகவே அடைமொழிகள்

பிறக்கின்றன என்பர் அறிஞர். எண்ணும்தோறும் இன்பம் பயக்கும் எழிற்சொற்கள் இடையிடைந்து வரும் அழகிய பாடலில் சொற்கள் இனிய யாழினின்றும் மீட்டப்பெறும் ஏழிசையைப் போல நடந்து, பலப்பல நய ஒலிகளை அலை அலையாக எழுப்பி நம்மை நனி மகிழச் செய்கின்றன. In poetry each word reveberates like the rope of a well turned (Joubert)lyre, and always leaves on it a multitude of variations.

நலஞ்சான்ற நம்பி ஒருவனை நயந்து விழையும் நங்கை ஒருத்திக்கு, அத்தலைமகனின் தலைமைக் குணங்களாகத் தோன்றுவன எவை என்பதனை நாகையார் குடிநன்கு உடையவன், கூடுநர்ப்பிரியன், கொடுநா மொழியலன், அன்பினன் எனக் கூறுகின்றார். இனந்தூயல் ஆதலால் குடிநன்கு உடைமையும், மனந்தூயன் ஆதலால் கூடுநர்ப் பிரியாமையும், சொல்தூயன் ஆதலால் கெடுநா மொழியாமையும் கொண்டு நிறைந்த அன்பின் பெருந்தகையாகத் தலைமகன் நின்று நிலை பெறுகிறான்.

ஆன்றோர் வாயில் தேனும் புளிக்கும் என்பது முதுமொழி. ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள் என மக்கள் கொச்சை மொழியில் அதனைக் கூறுவதுண்டு. அறிந்தோறும் அறியாமை காண்பது போலவும், அப்போதைக்குக்கப்போது கிளர்ச்சியும், வளர்ச்சியும் நிறைந்த தலைவனின் அன்பின் திறம் ஆழமுடையதாகச் சிறக்கிறதாம். மணம் புரிந்தாருள் எத்தனை பேர் மணமான சில யாண்டுகள் கழிந்தும் இத்தகைய வித்தக மொழியை இன்றும் விளம்பக்கூடும்? மகளிர் வாழ்வில் இல்லறம் தொடங்கும் மணநாள் மகிழ்ச்சியும், ஈன்ற ஞான்று எய்தும் இன்ப நெகிழ்ச்சியும், போர்க்களத்தில் தன் வீரமகன் விழுப்புண் பெறும் விழுமிய நிகழ்ச்சியும் ஆகிய மூன்றும் தலையானவையாகக் குறிக்கப்பெறுகின்றன. இம்மூன்று மகிழ்வினையும் அஞ்சி அத்தை மகள் நாகையார், பொன்முடியார், காக்கை பாடினியார் நச்செள்ளையார் ஆகிய மூன்று மடந்தையருமே கொங்கு மகளிராகவே அமைந்து பாடுவது குறிக்கத்தக்கது.

இவ்வாறு நாகையார் பாடல் நலஞ்சிறந்து விளங்குகிறது. அம்மையார் பாடியது இவ்வகப்பாடல் ஒன்றேயாகும்.

ஒரு பாடல், இது ஒப்பற்ற பாடலாக ஒளிர்கிறது. கொங்கு நாட்டில் நங்கை நல்லாரின் புலமைச் செறிவிற்கு இஃது ஒன்றே சாலும்.

The proof of the purest poetry is that its meaning is inexhaustible என்றார் போல தொட்டனைத் தூறும் மணற்கேணியாகக் கற்றனைத்தூறும் கருத்து நலம் பயக்கும் இக்கவி மடந்தையின் புலமை நலம் போற்றுதற் குரியதாகும்.



குதிரைப்போர்—கோட்டேறி

# புறப்பொருட் சிற்பங்கள்

புலவர் புது. போ. வேங்கடராமன்

வீரவுணர்வு மிகுந்த தமிழர், அவ்வீரத்தை அறநெறி வழுவாது ஓம்பிப் போற்றிய வகையும், அவர்கள் வீரத்தின் மேம்பாடும், புறத்தே வகைப்படுத்திக் கூறப்பட்டன. இதை

'அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்.
புறத்திணை இலக்கணந் திறப்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியதுப்புறனே
உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே'

என்று தொல்காப்பியப் புறத்திணையில் சூத்திரம் புகல்கிறது.

புறத்திணை புகலும் மாந்தர் தம் வாழ்வுக் காட்சிகள் பலப்பல. அவற்றைத் தொல்காப்பியம், பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை முதலிய இலக்கண நூல்களும், அதன் இலக்கியங்களாக விளங்கும் புறநானூறு பதிற்றுப்பத்து முதலிய இலக்கியங்களும் நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றன. தொல்காப்பியத்திற்கு அடுத்தபடி புறப்பொருள் செய்திக் கருவூலமாய் விளங்குவது 'புறப் பொருள் வெண்பாமாலை'. இது புறத்தின் இலக்கணமாகிய சூத்திரங்களையும், அவற்றின் இலக்கியங்களாகிய வெண்பாக் களையும், அவ்வெண்பாக்களின் கருத்தைத் தனித்தனியே புலப் படுத்தி நிற்கும் கொளுக்களையும் கொண்டுள்ளது. இந்நூல் புறத்தை மூக்கூடாக்கிக் கூறுகிறது. அது புறம், புறப்புறம், அகப்புறம் என்பனவாகும்.

'வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
உட்குடை யுழிஞை நொச்சி தும்பை யென்
றித்திற மேழும் புறமென மொழிப
வாகை பாடாண் பொதுவியற்றிணையெனப்
போகிய மூன்றும் புறப்புற மாகும்.'

கைக்கிளை, பெருந்திணை என்ற அகப்புறம் இரண்டும் இதனோடு இயைபுபடுத்தப்பட்டு 'புறப்பொருள்' பன்னிரு படலங்களைக் கொண்டு விளங்குகிறது. இப்புறப்பொருள் நிகழ்ச்சிகளை விளக்கும் சிற்பங்கள், கொங்கு நாடெங்கணும் பலவிடங்களிலும் உள்ளதைக் காணலாம்.

'சித்திரத்தில் மிகச் சிறந்த சிற்ப நூலின் அற்புதங்களை'த் தமிழகத்தின் சின்னச் சின்ன ஊர்களிலும் நாம் காணலாம். கல்லாலும், உலோகத்தாலும், மரத்தாலும், கண்ட சருக்கரையாலும், சுதையாலும் சிற்பங்கள் செய்யவல்ல வல்லுனர் தமிழகத் திருந் தனர் என்பதைப் பட்டினப்பாலை, சிலப்பதிகாரம் முதலிய தமிழ் நூல்களால் அறியலாம். தெய்வப் படிமங்களை மட்டுமன்றி, போரில் இறந்தோர் நடுகற்களையும் தெய்வமாகப் போற்றிப் பரவிய செய்தி களைப் 'புறநானூறு' முதலியன புகல்கின்றன. 'கல்லெடுப்பு கருமாந்திரம்' என்று மக்களிடையே வழங்கும் சொற்றொடரும் இதனை உறுதிப்படுத்துகிறது. புறப்பொருள் செய்திகளைப் படைப் புச் சிற்பங்களாகக் கொங்கில் பல இடங்களில் வடித்துள்ளனர். அவை 'நடுகற்களென்று' கற்றோராலும், 'சிலைகற்கள்' என்று பாமர மக்களாலும் அழைக்கப்படுகின்றன. அத்தகைய கற்கள் சிலவற்றில் உள்ள செய்திகளையும், அவற்றின் சிற்ப அமைதியையும் உங்கள் முன் படைக்கிறேன்.

சங்ககாலத்தில் கொங்கில் 'புறப்பொருட் சிற்பங்கள்' சிறந் திருந்தன என்பதை நற்றிணை,

'செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லித்
தெய்வங் காக்குந் தீதுதீர் நெடுங்கோட்
டவ்வெள் ளருவிக் குடவரை யகத்துக்
கால்பொரு திடிப்பினும் கதழுறை கடுகினு
முருமுடன் றெரியினு மூறுபல தோன்றினும்
பெருநலங் கிளரினுந் திருநல வுருவின்
மணிமாயா வியற்கைப் பாவை......

............கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதியியல் பாவை

என்று இயம்புகிறது. இதனையே கொங்கு மண்டல சதகமும்,

'தானு முலகிற் கடன் சார்ப்பத் தரந்தரமாய்ப்
பூனு முலை மடவார் சேனை கொண்டு பொருதுமலர்ப்
பாணன் முதலெவ ராலும் கொல்லியம்பாவை முல்லை
வாணகையாலுள் ளுருக்குவதுங் கொங்கு மண்டலமே'

என்று கொல்லிப் பாவையின் சிறப்பினைச் செப்புகிறது.

இவண் அக்காட்சிகளில் சிலவற்றைமட்டும் இலக்கியத்தோடு இயைபுடைய சிற்ப அமைப்பின் சிறப்புடை அமைதியைச் செப்புகிறேன்.

அச்சலவாடி

புறப்பொருள் வெண்பாமாலை,

'வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்
சென்றிகன் முனையாதந் தன்று

என்று வெட்சித் திணையில் கூறுகிறது. இச் செய்தியை கொங்கு நாட்டில் அரூர் வட்டத்தில் அச்சலவாடி என்ற ஊரருகில் உள்ள நடுகல் நன்முறையில் விளக்குகிறது. அக்கல்லில் வீரனொருவன் இடக்கையில் வில்லும், வலக்கையில் குறுவாளும் ஏந்தியவனாய் வடிக்கப்பட்டுள்ளான். அவனுக்கு முன் ஆநிரை நிற்பன போன்று வடிக்கப்பட்டுள்ளது. அக்கல்லில்,

'ஸ்வஸ்திஸ்ரீ வாணபருமருக்கு யாண்டு எட்டாவது, புல்லரிக் கல்லில் தொறு ஒட்ட எதிர்த்துப் பட்டான் மந்தரன் மதியுளி' என்ற சொற்கள் காணப்படுகின்றன.

சாலவலசு

அடுத்தபடியாக அந்நூலே உழிஞையில் 'யானை கைக்கோள்' என்ற தலைப்பில்

மாறு கொண்டார் மதிலழிய
ஏறுந் தோட்டியு மெறிந்து கொண்டன்று

என்று கூறுகிறது. இக்காட்சி சாலவலசை நடுகல்லில் செதுக்கப் பட்டுள்ளது. இதில் கன்னட மொழியில் கல் வெட்டுள்ளது. இதையே கலிங்கத்துப் பரணியும்

தண்ட நாயகர் காக்கும் நவிலையில்
கொண்டதாயிரம் கொல்களிரல்லவோ'

எனக் கூறுகிறது. இப்போர் நடந்த இடம் தற்பொழுது அரூர் வட்டத்தில் 'நதலை' என்று கூறப்படும்' பழைய 'நவிலை'யாகும்.

நவிலை

உழிஞையிலேயே 'வேற்றுப் படை வரவு' என்ற தலைப்பில்,

'மொய்திகழ் வேலோன் முற்றுவிட் டகலப்
பெய்தார் மார்பிற் பிறன்வர வுரைத்தன்று'

என்று கூறப்பட்டுள்ளது. இதை விளக்குவது போன்று அரூர் வட்டம் நவிலை எட்டிக் குப்பையிலுள்ள நடுகல் அமைந்துள்ளது. இதில் வீரனொருவன் இடதுகையில் வில்லும், வலதுகையில் குறுவாளும் ஏந்தியவனாய் வடிக்கப்பட்டுள்ளான். அக்கல்லில்,

“ஸ்ரீ சிவமாரவர்மர்க்கு யாண்டு மூன்றுவது கந்தவாண்ணதி யரையர் புறமலைநாடான்வானபெருமான் கோடல் லெறிந்த ஞான்று தேவப்பனையினுர் படைத்தலைக் கொட்டி உண்ணிபட்டான்’ என்று செதுக்கப்பட்டுள்ளது.

**வேப்பாடி**

புறப் பொருள் வெண்பா கூறும் நொச்சிக் காட்சி அரூர் வட்டம் வேப்பாடி ஆற்றின் கரையிலுள்ள கோட்டைமேட்டு ‘கோட் பேறி’ சிற்பம் படம்பிடித்துக் காட்டுகிறது. அச்சிற்பம் நொச்சித் திணையில் கூறும் ‘மறனுடைப்பாகி,’ ‘செருவிடை வீழ்தல்’. ‘குதிரைமதம்’, ‘எயிற்போர்’ என்பவற்றிற்கும் ஒழிபுத் துறையில் கூறப்படும் ‘குதிரை வென்றி’ என்ற தலைப்புக்கும் விளக்கம் பெறுவதாய் விளக்கம் கூறுவதாய் விளங்குகிறது. (ஒளிப்படம் காண்க) கோட்டை+ஏறி என்பது கோட்டையின் மதில் மீது ஏறி வெற்றி கொண்டவன் என்ற பொருளைத் தருகிறது. மறனுடைப் பாசி,

‘மறப்படை மறவேந்தர்
ஆறக்கத்துச் செலவுரைத் தன்று’

என்கிறது. இச்சிற்பத்தில் மாற்ருரால் கொல்லப்பட்டு தான் ஊர்ந்த மாவின் மீது இறந்துகிடக்கும் மறவேந்தன் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது.

செருவிடை வீழ்தல்,

‘ஆழ்ந்து படுகிடங்கோட ருமிளைகாத்து
வீழ்ந்த வேலோர் விறன்மிகுத் தன்று’

என்கிறது. இக்காட்சியும் மதிற்புறத்தே கைகளும், கால்களும், தலையும் வேறு வேருக வெட்டப்பட்டு வீழ்ந்துகிடக்கும் வீரனது உருவத்தால் விளக்கப்படுகிறது, குதிரைமறம் என்ற நொச்சியின் உட்பிரிவு,

‘ஏமாண்ட நெடும்புரிசை
வளமானது வகை யுரைத்தன்று’

என்று கூறுகிறது. இதை ‘நவிலை’ விக்கலேரியில் உள்ள ‘நடுகல்’ விளக்குகிறது. இக்கல்வெட்டு தமிழகத் தொல்பொருள் துறை யினரால் வெளியிடப்பட்டுள்ளது.

**பாவைக்கல்**

எயிற்போர் என்ற தலைப்பில்

‘அயிற்படையி னரண் காக்கும்
எயிற் படைஞ ரிகன் மிகுத் தன்று’

என்கிறது புறப்பொருள். இதை விளக்கும் சிற்பம் தருமபுரி மாவட்டத்தில் தென் பெண்ணை யாற்ருேடு வந்து கலக்கும் பாம்பாற்றின் கரையில் பாவைக்கல்லுக் கருகிலுள்ளது. அதில் 'ஸ்ரீ புயவீர விற்பன எயில் நாடன் மலைத்தோழன் எயிலெறிந்து பட்டஞான்று எயிர்நாடர் இட்ட கல்' என்று செதுக்கப்பட்டுள்ளது. இதில் வீரனொருவன் மதிலொன்றின் அருகில் கையில் வில்லோடும் வாளோடும் நிற்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது. அவ்வீரனின் உடலில் பல அம்புகள் பாய்ந்துள்ளன.

### செல்லம்பட்டி

நொச்சியின் மற்ருெரு உட்பிளவான அழிபடைத் தாங்கலில்

'இழிபுடன் றிகல் பெருக
அழிபடை யரண் காத்தன்று'

என்று கூறுகிறது.

இதை அரூர்வட்டம் செல்லம்பட்டி வேடியப்பன் கோயிலுள்ள சிற்பக்கல் செம்மையான முறையில் விளக்குகிறது. அக்கல்லில் வீரரிருவர் கைகளில் வில்லும், வாளும் ஏந்திய நிலையில் செதுக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கருகில் பூரண கும்பங்கள் இரண்டும் விளக்குகள் இரண்டும் செதுக்கப்பட்டுள்ளன. அதில்,

'ஸ்வஸ்திஸ்ரீ சகரயாண் டெண்ணூற்றிருபத்திரண்டாவது ஆதித்தன் மகரத்தினிற்க ஐயப்பதேவன் ராச்சிய மாளக் கங்கருள் மகன் பிருதிபதியும் நளம்பன் மகன் சிவமாயையய்யனும் உள்ளாற்றில் ஊரெறிந்த ஞான்று தகடூரனுய மாவலிவாண நாயடியான் கங்கலமாணிக்கன் சிவமான்யனுக்காக ஊர் எறிந்து பட்டவரோடே பெரியமகன் பார்த்த வன்னிக் கல்லு கடுவித்தான்' என்ற வாசகம் உள்ளது.

### கடத்தூர்

இறுதியாக ஒழிபுப் பகுதி கூறும் 'ஏறுகொள் வென்றி' என்ற தலைப்பினை விளக்கும் படைப்புச் சிற்பம் அரூர் வட்டத்தின் கடத்தூரில் பாட்டப்பன் கோயில் என்ற பெயருடன் விளங்குகிறது' என்பதையும், 'குதிரைவென்றி' கூறும்

'ஐந்துகதியும் பதினெட்டுச் சாரியையும்
கந்து மறமுங் கறங்குளைமா—முந்துற
மேல்கொண்டவை செங்கி வென்வேலோன்
மேம்பட்டான்
மேல்கொண்ட கண்ணுளை மீட்டு.

என்பதைக் கொங்குநாட்டு மேல் கரைப பூந்துறையில் அழகிய மேடை ஒன்றின் இருபுறச் சுவர்களில் செதுக்கப்பட்டுள்ள பூந்துறை வீரன் 'குப்பிச்சி'யின் சிற்பங்கள் விளக்குகின்றன. 'குப்பிச்சி, விஜய நகர அரசர்கள் காலத்துப் பூந்துறையில் விளங்கிய வீரன், அவன் கிருஷ்ணதேவராயன் குதிரைப்படையிலிருந்த அடக்க முடியாத குதிரையை வென்றி கொண்ட வீரனுவான், அவன் வீரச் செயல்களை அச்சிற்பங்கள் விளக்குகின்றன. குதிரையை குப்பிச்சி வீடித்துக் கொண்டிருக்கும் காட்சியும் அதன் மேல் இவர்ந்து செல்லும் காட்சியும் அரசன் முன் அவன் அதை அடக்கி திறுத்திய காட்சியும் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. இச் செய்தியை கொங்கு மண்டல சதகம்,

'தேசுற் றிலகு விசயநகரத் திறலரசன்
வாசற்பணிக்களை மண்கொளக் கத்தியம் மன்னனைக்கண்
டேசற்படுமச மாவினை யாட்டியெவரு மெச்ச
மாசற்ற நாடுகொள் குப்பிச்சியுங் கொங்கு மண்டலமே'

என்று அழகாகக் கூறுகிறது. இச் செய்தியை பூந்துறை 'அவினுசிக் கவுண்டன் வண்டுவிடுதூது' என்ற சிறு பிரபந்தச் செய்யுளும்,

'விஜயநகரத்து மேவியிருக்கும்
அசையா நரபதித னன்பா-விசைவு பெறக்
கொங்குக்கு மேன்மைக் குறிப்பு மணியிழைந்த
தங்கப்பொற் றண்டிகையுந்தான் படைத்தோம்'

என்று கூறிப்புகழ்ந்துரைக்கிறது.

இதுவரையிலும் கூறியவற்றுன் யான் கூறிய கொங்கு நாட்டுப் புறப்பொருள் சிற்பங்களின் புகலரிய கட்டாசிகளுள் சிலவேயாகும். ஆய்ந்து அறியத்தக்கன மேலும் பல உள்ளன.

# கற்கடகமாராயன் கூடல்

வித்துவான். வே. மகாதேவன்

சோழவேந்தர் கல்வெட்டுக்களும் பிற்காலப் பல்லவர் கல்வெட்டுக்களும் கூடல் என்ற நகரைக் குறிப்பிடுகின்றன. கோப்பெருஞ்சிங்கன் குலமுதல்வர்-சிற்றரசு நிலையிற் கூடலாளப் பிறந்தான்' எனத் தம்மைக் குறித்துக் கொள்கின்றனர். இக் கூடல் எது?

**தமிழ்க் கூடல்கள்**

பாண்டியர் கூடலைப் பல்லவர் கைப்பற்றவில்லை. இதனையன்றியும் கூடல் என்ற பெயரால் தமிழகத்தே பல கூடல்கள் இருந்தன; சில இன்றும் உள்ளன.

1. திருமுனைப் பாடிக் கீழாமூர் நாட்டில் கூடல் (A.R.E No. 73, 83 of 1918) ஒன்று இருந்தது.

2. திருவெண்ணெய் நல்லூர்க் கல்வெட்டுகள் (A.R.E 312 of 1920) வீரசேகரனை அதிகமானுக்குரியதாகவே சாலிப்பாடி நாட்டுக் கூடல் குறிக்கப் பெறுகிறது.

3. பரகேசரி குலோத்துங்கனின் மூன்றுமாண்டிற்குரிய சித்தலிங்கமடம் கல்வெட்டு குறிக்கும் கூடல். இது தேவர் தேவதானமான ஆதம்பாடி மேயூரான நல்ல ஊரைத் தன்னகத்து அடக்கியது. (A.R.E No 402 of 1909)

4. திருமையம் தாலூகா பூவாலைக்குடி குலோத்துங்கன் கல்வெட்டில் கூடலூர் நாடு (PJ. INS No 22) குறிக்கப் பெறுகிது.

5. பதிற்றுப்பத்தில் கரணமைந்த காசறு செய்யுட் பரணர் செங்குட்டுவனைப் பாடும் போது குறிப்பிடும் கூடல். செங்குணக் கொழுகும் கலுழிமயிர் நிறை காவிரியன்றியும் பூவிரி புனலொரு மூன்றுடன் கூடிய கூடலனையை என்பது பதிற்றுப்பத்து.

6. வீரபாண்டியன் தலைகொண்ட பரகேசரியின் 4. ஆண்டுக் கல்வெட்டு (S.I.I. VIII No 57. 454 of 1932. திருவண்ணாமலை) 'இடைப்பாடி கூடல்' என ஒரு கூடலைக் கூறுகிறது.

7. விருத்தாசலம் கள்ளக் குறிச்சிக் கடலூர்

8. பெண்ணுகடம் மேற்கே வெள்ளாற்றங் கரையில் உள்ள கூடலூர்.

9. கெடிலம், பெண்ணை நதிகள் கடலொடு கலக்குமிடத் தமைந்த கூடலூர். இப்படிக் கூடலமைந்த பெயரால் அமைந்த ஊர்கள் மிகப்பல.

சோழர் கல்வெட்டுக்களில்

மூன்ரும் குலோத்துங்கனின் மூன்ருவதாண்டுக்குரிய திரு வெண்ணை நல்லூர்க் கல்வெட்டுக் கூடல் ஆளப் பிறந்தான் மோகன் அரசநாராயணனுன காடவராயன் (A.R.E No 477 of 1921) என்ப வனைக் குறிக்கின்றது.

மூன்ரும் குலோத்துங்கன் மமாண்டுச் சித்தலிங்கம் மடம் கல் வெட்டு கூடலாளப் பிறந்தான் அரச நாராயணன் என்பவனைக் குறிக்கின்றது. (A.R.E 413 of 1909)

மூன்ரும் குலோத்துங்கனின் 33 வதாண்டு முன்னூர்க் கல் வெட்டில் (A.R.E 63 of 1919) கூடலாளப் பிறந்தான் அழகிய பல்லவனுக காடவராயன் என்பவனைக் குறிக்கின்றது.

மூன்ரும் ராசராசனின் பதினுரும் ஆண்டுத் திரு வெண்ணை நல்லூர்க் கல் வெட்டில் (480 of 1913) கூடலாளப் பிறந்தான் மோகனுன காடவராயன் குறிக்கப்படுகிருன்.

சிதம்பரத்தில் உள்ளதொரு கல்வெட்டுப்பா திருவதிகையில் இருந்து கூடல் அரச நாராயணன் என்பவன் (185/1921) தில்லைக் கோயிலுக்கு விலை மதிப்பில்லாக் கற்களும் ஆபரணங்களும் தந்த தனை அறிவிக்கிறது.

திரு முனைப்பாடிக் கீழாமூர்க்கூடல்

விருத்தாசலத்தில் உள்ள கோப்பெருஞ் சிங்கனின் 6 ஆம் ஆண்டுக் குரிய கல்வெட்டுத் (S.I.I. Vol XII No 121 A.R E No 83 of 1918) திரு முனைப்பாடி நாட்டுக் கீழா மூர்நாட்டுக் கூடலாளப் பிறந்தான் அழகியசீயன் எனக் குறிக்கிறது. விருத்தாசலத்துள்ள கோப்பெருஞ்சிங்கனின் பன்னிரண்டாமாண்டுக் கல்வெட்டு ஒன் ருலும் (S.I.I. Vol XII No 124 A.R.E No 73 of 1918) 'திருமுனைப் பாடிக் கீழாமூர் நாட்டுக் கூடல் ஏழிசை மோகன் மணவாளப் பெருமாளான வாணிலை கண்ட பெருமாளான இராஜராஜ காடவராயன்' (S.I.I. Vol INS No. 146; A.R.E No/33 of 1918) என்ற தொடராலும் கோப்பெருஞ்சிங்கன் காலத்தே திருமுனைப்பாடி நாட்டில் கூடல் என்றதோரூர் இருந்தமை புலனுகும்.

**திருமுனைப்பாடி நாடு:**

பெண்ணை நதியின் தென் கரையில் உள்ள நாடு. (A.R.E No 376 of 1908; 308 of 1921) திருமுனைப்பாடிநாடு எனபெறும் இது ராஜேந்திர சோழவளநாடு (A.R.E. No 533 of 192) ராஜேந்திர சிம்மவளநாடு (A.R.E No 517 of 1921) எனவும் அறியப் பெறும் அரசூர் நாடு (414/1921) அவியனூர் நாடு (419/1921) தாமர் நாடு 371,382 of 19‿9 ஏமப்பேரூர் நாடு (513/1921) இடையாற்று நாடு (S.I I. vol XII No. 142) குறுக்கைக்கூற்றம் (372/1908)மேலூர்நாடு (350/1902) முதியூர் நாடு (18‿/19‿6) பனையூர்நாடு (271of 2936-37) பேரிங்கூர்நாடு (378 of 1909) பேறுகனூர்நாடு (46/1903) திருவெண்ணை நல்லூர்நாடு (423of1921) முதலியன இந்நாட்டுப் பிரிவுகளாக நிலவின. (S. I. I. vol XII pages 177-78)

**கூடல்நாடும் கூடலும்:**

திருமுனைப்பாடிக் கூடல் தென்னார்க்காட்டுக் கூடலூர் எனத் திருவெங்கட சுப்பஜயரும் (S. I. I. Vol. XII page VII FN) திரு. நீலகண்ட சாத்திரியாரும் கூறுவர். இக் கூடல் கூடலூர் அன்று என S. R. பாலசுப்பிரமணியம் அவர்கள் கூறுவர்.

கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டு கீழ் ஆமூர் நாட்டுக் கூடல் எனக் குறிக்கிறது. ஆமூர்நாடு (A.R.E.380 of 1921) கீழ்ஆமூர் நாடு (S. I. I. vol XIII NS. No 121) எனவும் மேல் ஆமூர்நாடு (A.R.E. 397of 190) என்றும் பிரிக்கப்பெற்று பின்னர் வழங்கியது எனலாம்.

விருத்தாசலத்தில் உள்ள கோப்பெருஞ்சிங்கனுடைய ஆரு மாண்டுக்குரிய கல்வெட்டு ஒன்று (S.I.I.Vol.XII Ins No 121) கூடல் நாடு என்றதொரு நாடு திருமுனைப்பாடியுள் அமைந்திருந்ததாகக் கூறும். "திருமுனைப்பாடிக் கீழாமூர் நாட்டுக் கூடல் ஆளப்பிறந் தான் அழகியசீயன் கோப்பெருசிங்கன் இன்நாட்டுக் கூடல்நாட்டு ஊற்றுக்குறுச்சியான ஆதனூரில் இன் னுயனூர்க்கு விட்ட தேவ தான இறையிலி" என்பது கல்வெட்டுப் பகுதி.

ஆதனூர் விருத்தாலம் தாலூகாவில் உள்ள தொருசிற்றூர் என்றும் ஆதனூர் என்ற பெயருடன் இரு ஊர்கள் காணப் பெறுகின்றன எனவும் கல்வெட்டாய்வாளர் கருதுவர். (XII INS No 12‿ Intro) திருக்கோயிலூர்த்தாலூகா நெய்வாணையில் உள்ள தொரு கல்வெட்டு ஆதனூர்ப் பற்றுகத் திருமுனைப்பாடி நாட்டுக் குறுக்கைக் கூற்றத்துள் திருநெல்வாணை உள்ளது எனச் சகம் 1884க் குரியகல்வெட்டுக் கூறுகிறது. இச்சான்றுகளை

ஒட்டி நோக்கும் போது இக்கூடல் திருக்கோயிலூர், விருத்தாசலம் பகுதிகளை ஒட்டி அமைந்ததாதல் வேண்டும்.

Cambridge History of India என்ற நூலும் (Vol III page 482) K. V. சுப்பிரமணிய ஐயரும் (S. I.I. Vol VII intro) கோப்பெருஞ்சிங்கன் தென்னூர்க்காட்டுக் கூடலினன் என்பர். S.R. பால சுப்பிரமணியம் அவர்கள் கோப்பெருஞ்சிங்கன் புதிய தொரு கூடலை உருவாக்கி இருக்கலாம் என்பர்.

**கூடாத வன்புகழ்க் கூடல்மன்**

ஆட்கொள்ளிக் காடவர்கோன் என்பவன் இரண்டாம் இராசராசன் காலத்தவன். (1146—1162. கோப்பெருஞ்சிங்கன் பக்கம். 11—12. S.I.I.vol XII. INS.262 Intro) இவன் திருவெண்ணை நல்லூர் வைகுந்தப் பெருமாளுக்கு நிலம் முதலான் கொடைகள் தந்துள்ளான், (S.I.I.Vol XII Ins No 179 A.R.E 115 of 1921)

தீர்த்தநகரிச் சிவாங்குரேசுவரர் கோவிலில் உள்ளதொரு கல்வெட்டுக் கவித்துறை (S.I.I.vol XII Ins.No. 262.A.R.E 115 of 1904) ''மிகுந்த புகழ்பெற்ற ஆட்கொள்ளிக் காடவர்கோன் என்ற கூடல் மன்னவன் சிவாங்குரேசுவரர் நிலத்துக் குரிய பாடிகாவல் வெட்டிமுதலானவற்றைத் தான் தவிர்ந்து அழுதுபடி நுந்தாவிளக்குக் கட்காகத் தந்தான்'' எனக் கூறுகிறது.

இராஜராசன் IIன் ஆறும் ஆண்டு கி.பி. 1152க்குரிய எலவானூர்க் கல்வெட்டு (1660of1906) கூடலாளப்பிறந்தான் மோகனை நாலுதிக்கும் வென்றகாடவராயன் என்பவனைக் குறிப்பிடுகிறது.

**கூடல் கோப்பெருஞ்சிங்கன் முதல்வர் உரிமை:**

கூடலை முதன்முதல் வென்றவனாகக் கூறப்படுபவன் அரச நாராயணன் ஆளம்பிறந்தான் வீரசேகரக் காடவராயன். இவன் கூடலைச் சகம் 1108கி.பி. 1186ல் வென்றான். (S.I.I. XII Ins No263, 264.) இவனுடையனவாகக் கி பி. 1185 (391/1921 467/1921) கி.பி. 1189க்குரிய (255/1919) கல்வெட்டுகக்ள் கிடைத்துள. மூன்றும் குலோத்துங்கன் காலத்தவன்.

இவ்வேந்தனுக்கு முற்மட்டவனான ஆட்கொள்ளிக் காடவராயனும் (1158 115/1931) நாலுதிக்கும் வென்றரான ஏழிடை மோகன் காடவராயர் என்பானும் கூடல் மன்னவராகக் குறிக்கப் பெறுகின்றனர். எனவே கி.பி. 1185ல் கூடல் படையெடுப்புக்கு முன்னரும் கோப்பெருஞ்சிங்கன் மரபினர் கூடல் என்ற தோருருடன தொடர்பு உடையவதாக விளங்கியமை புலனாகும்.

**கூடலாளப் பிறந்தான்:**

அரசநாராயணன் ஆளப்பிறந்தான் வீரசேகரக் காடவராயன் என்பவன் குலோத்துங்கன் III ன் காலத்தவன். (A.R.E. 391/1921 467/1921. 74/1918. 255/1919) இவன் கடற்கடகமாராயன் கூடலை அழித்தவன். இவனைக் கூடலாளப் பிறந்தான் காடவராயன் என்று அத்திக் கல்வெட்டுக் குறிக்கிறது (S.I.I. Vol XII Ins. No 125) இவன் கி.பி. 1185க்குரிய கல்வெட்டுக்களில் அரசநாராயணனை கூடலாளப் பிறந்தான் (A.R.E. No. 391 of 1921. 467 of 1921) எனக் குறிக்கப் பெறுகிறான். மாரிஜோனைக் கல்வெட்டுக் கூடலாளப் பிறந்தார் (S.I.I. XII No. 127. A.R.E. No. 178 of 1921) எனக் கூறுகிறது.

**மரபுப் பெயராகிறது**

'கூடலாளப் பிறந்தான்' வீரசேகரக் காடவராயரின் மகன் தொண்டை மண்டலம் கொண்ட வீரர் வீரன் காடவராயன் கூடலாளப் பிறந்தான் என முன்னூர்க் கல்வெட்டுள் (A.R.E. No. 63 of 1919) கூறப்பெறுகின்றான். இவனே திருமுனைப் பாடிக் கூடலினன் ஆகவும் காட்டப்பெறுவான் (S.I.I. Vol VII Ins. No 146. A.R.E. 133 of 1900)

கோப்பெருஞ்சிங்கன்,

"கார்வளர் மேனிக் கமலக் கண்ணன்
பார்வளர் உந்திப் பல்லவர் பெருமான்
சகல புவனச் சக்கர வர்த்தி
கூடல்அவனி யாளப் பிறந்தான்
கோப்பெருஞ்சிங்கன் கழற்கா டவர்கோன்"

எனத்திருவண்ணா மலை சாசனத்தில் (S.I.I. Vol XII Ins.247) கூறப் பெறுகிறான்.

கோப்பெருஞ்சிங்கனின் பத்தாவதாண்டுக்குரிய முன்னூர்க்கல் வெட்டு(S.I.I. Vol. XII No, 161 A.R.E. 161 of 1989) கூடலாளப் பிறந்தான் தேவாரமழகியானான வாணராயன் என்பவனைக் குறிக்கிறது. இதுபோன்ற பல்லவமரபினர் அனைவரும் கூடலாளப் பிறந்தான் எனக் குறித்துக் கொள்கின்றனர்.

**அத்திப்பாடலும் கூடல் மன்னவன்.**

கூடலாளப் பிறந்தார் மகனார் தொண்டைமண்டலம் கொண்ட பல்லவாண்டாரான வீரர்வீரன் காடவராயன் என்பானை ஒரு பாடல் 'கூடல் மன்னவன்' என்று குறிக்கிறது.

அத்திப் பாடல்களுள் இப்பாடல் ஒன்றாக உள்ளது (S.I.I. XII Ins. No. 125, 296 of 1912)+வடவார்க்காடு மாவட்டம் மாரீ ஜோனு கல்வெட்டில் (S.I.I. Vol. XII No 127 178 of 1921) இப் பாடல் காணப்பெறுகிறது.

இந்தப் பாடலில் குறிக்கப்பட்ட வேந்தன் தொண்டைமண்டலம் கொண்டருளிய பல்லவாண்டான் என்பவனுவான்; திரு. எஸ். ஆர் பாலசுப்பிரமணியம் அவர்களுடைய கருத்துப்படி கி.பி. 1191 முதல் 1213 வரை இவன் ஆண்டவனுவான்.

அரச நாராயணன் ஆளப் பிறந்தான் வீரசேகரக் காடவ்ராயன் கி.பி. 1185க்குரிய கல்வெட்டில் அரச நாராயணனுன கூடலாளப் பிறந்தான். (A.R.E No 391 of 1921. 4670 of 1921) எனவும் அத்திக் கல்வெட்டில் கூடலாளப் பிறந்தான் என்வும் குறிப்பிடப் பெறுவான் என்றோம். அவனுடைய மகன் இவன்.

**இந்தக் கூடல் எது?**

இரண்டு கல்வெட்டுக்கள் கற்கடமாராயனின் கூடலை ஆளப் பிறந்தான் வீரசேகரனுன காடவராயன் வென்றதாகக் கூறுகின்றன "...இது இவர் தம்பியார் அரசநாராயணன் கச்சியாரான காடவ ராயர் கவி. இவர் மகன். சகரயாண்டு ஆயிரத்தொரு நூற்றெட்டி னுல் ஆடிமாஸத்தும் பிற்பத்தில் கண்டராதித்தன் வாசலுக்கு மேற்கே புறப்பட்டுக் கற்கடக மாராயன் கூடலும் அதிகமானுடும் அழித்து வெற்றிக் கொடியுயர்த்த அனுமனும் பொறித்தான் ஆளப் பிறந்தான் வீரசேகரனுன காடவ்ராயன்."என்று இரு கல்வெட்டுக் கள் கூறுகின்றன.

விருத்தாசலம் கோவிலில் காணப்பெறும் இக்கல்வெட்டின் (S.I.I. Vol XII No 263. A.R. No 740 of 1918) படி திருவெண் ணெய் நல்லூரிலிலுல் காணப்பெறுகிறது. (S.I.I. vol XII No.264. A.R. No 464 of 1921)

**கல்வெட்டுக் காட்டும் கூடல்வெற்றி:**

கி.பி.1186 ல் ஆளப்பிறந்தான் வீரசேகானுன காடவராயன் கண்டராதித்தன் வாசலுக்கே மேற்கே புறப்பட்டான்; படைநடத் தினுன். காடவன் கற்கடகமாராயன் கூடலை அழித்தான்; அதிக மான் நாட்டினை அழித்தான். அனுமனுடன் கூடிய வெற்றிக்கொடி உயர்த்தினுன் இது கல்வெட்டில் காட்டப்பெறும் கூடற் போர் நிகழ்ச்சி.

கற்கடகமாராயன் கூடல்வெற்றியையே பிற்காலத்தார் கூடலாளப்பிறந்தான் எனக்குலப் பெயராகச் சூட்டிக்காட்டினர்.

விருத்தாசலம் விருத்தகிரீசுவர் கோயில் கல்வெட்டை மூலப் படியாக நடுவணரசு தொல்லியல் துறையினர் கருதுவர். அன்னூர் குறிப்பின்படி விருத்தாசலம் கோயிலின் இரண்டாம் கோபுரமே கண்டராதித்தன் திருவாசலாகக் கொள்ளப்பெறும் (S.I.I. Vol XII Ins No 263. INTRO) கற்கடகமாராயன் கூடல் வெற்றிக்குப்பின்பு அதிகமானாடு அழிக்கப்பெற்றது நினைவுறுதற்பாலது.

**கற்கடக மாராயன்**

இக்காலச் சேலம் சில்லாவின் பகுதி முற்காலத்தே புறமலைநாடு எனப்பெற்றது. தீர்த்த மலையை ஒட்டிய பகுதி புறமலைநாடு எனப் பட்டது. இது பெண்ணைத் தென்கரையின் நிகரிலி சோழ மண்டலத்து அமைந்திருந்தது.

திருபுவனச் சக்கரவர்த்தி ராஜராஜ தேவனுடைய எட்டாவ தாண்டுக் குரிய தீர்த்தமலைக் கல்வெட்டு (A.R.E No. 660 of 1905) முடிகொண்ட சோழ கற்கடக மாராயன் என்பவன் — கூடல் என்ற ஊரின் அரசன் தீர்த்த மலையுடைய மகா தேவர்க்கு அணிகலன்கள் தந்துள்ளான் எனக் குறிப்பிடுகிறது.

சோழவரசன் பரகேசரிவர் மன் உடையார் இராசேந்திரனின் 29 ஆவது ஆண்டுக்குரிய தீர்த்த மலைகல்வெட்டொன்று (A.R.E. No 669 of 1905) கற்கடை மாராயன் என்பவனைக் குறிப்பிடுகிறது.

**கூடலாழ்வார் கோயில்**

பரகேசரிவர்மனுடைய நான்காம் ஆண்டுக்குரிய கல்வெட்டுக் கள் இரண்டு (A.R.E. No 673, 672, of 1905) தீர்த்தமலை மகா தேவர் கோயிலை 'கூடலாழ்வார் கோயில்' எனக் குறிப்பிடுகின்றன. ......"கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு நான்காவது மும்முடி சோழப்பெருமாள் தேவர் தேவியார்.. ட்டனை...சவகந்யா தென்னி இக்கூடல் ஆழ்வார்கு சந்திராதித்தவல் எரிய வைத்த நொந்தா விளக்கு ஒன்றினுக்கு வய்த்த பொன்கழஞ்சு"

(—ராஜேந்திரன் I ? S.I.I. Vol XIX No 85 A.R.E. No.692 of 1905)

"கொப்பர கேசரி பன்மற்கு யாண்டு நான்காவது மும்முடி சோழப் பெருமாள் தேவியார் பூகுன்றமுடைய ஐய்யன் வீரமாதேவி யார் இவ்வாட்டை கூடல் ஆழ்வார்க்கு வய்த்த நொந்தா விளக்கு"
—S.I.I. Vol. XIX ins. No. 86 A.R E. of 1905,

**கற்கடக மாராயனின் நாடு புறமலை நாடே**

விசையராசேந்திர சோழனின் நாலாவது ஆண்டுக்குரியதாகத் திருவண்ணாமலையில் உள்ளதொரு கல்வெட்டு "ஆரப்பூருடைய கரங்கைய தெவந்கண்ணுடைப் பெருமாளான கற்கடகமாராயன்" என்பவனைக் குறிப்பிடுகிறது. கற்கடகமாராயன் உடையார் திருவண்ணாமலையுடையார்க்குப் புறமலை நாட்டில் நிலக்கொடைவரிகள் நீக்கி அளித்துள்ளான். கற்கடகமாராயன் புறமலை நாட்டினைத்தான் ஆண்டான். கற்கடகமாராயன் நாடு புறமலைநாடே என்பதை இக் கல்வெட்டால் அறியலாம். "திருபுவனச் சக்கரவர்த்திகள் விசைய ராசேந்திர சோழதேவதற்கு யாண்டு நாலாவது காங்கையதேவன் கண்ணுடைப் பெருமாளான கற்கடக மாராயறென் உடையார் திரு வண்ணாமலை உடைய நாயனார்க்குந் திருமடைப் பள்ளிப் புறமாக விட்ட எனாட்டில் புறமலைநாட்டில் வடக்கில் கத்தாரி நாற்......" என்பது கல்வெட்டுப் பகுதி (S.I.I. Vol VII No 110. A.R.E. No 520 of 1902, என்நாட்டில், புறமலை நாட்டில் எனக் கற்கடக மாராயன் கூறுவதால் புறமலைநாடு கற்கடக மாராயன் ஆட்சிக் குட்பட்டிருந்தது. 'கற்கடக மாராயன்' கூடலும் புறமலை நாட்டில் தான் இருந்ததெனஉறுதியாகக் கூறலாம்.

இச்சான்றுகளால் தீர்த்தமலை முற்காலத்துக் கற்கடகமாராயனுக்குரியதாக இருந்ததெனலாம். இக்கோயிற் கல்வெட்டே கற்கடக மாராயனைக் குறிப்பிடும். இவ்வூர் கூடல் எனப்பட்டதனையும் 'கூடல் ஆழ்வார்' என்ற கோயிற் பெயரால் உணரலாம்.

கற்கடக மாராயன் நாடு புறமலைநாடே.

**கற்கடக மாராயன் கூடல்:**

நிகரிலி சோழமண்டலத்துப் புறமலை நாட்டில் வண்ணைத்தென் கரையில் தீர்த்தமலை இருக்கிறது. (A.R.E. 6580 of 1905) எனத் தீர்த்த மலைவிசயநகர வேந்தன் கல்வெட்டுக் கூறுகிறது.

இராசேந்திர சோழனின் ஒரு கல்வெட்டு, 'நிகரிலிசோழ மண்டலத்துத் தகடூர் நாட்டுப்புறமலை நாட்டில் இருந்ததாகக் (A.R.E. No 620 of 1905) கூறும்.

குலோத்துங்கனுடைய பத்தாமாண்டுக் கல்வெட்டொன்று நிகரிலிசோழ மண்டலத்துத் தகடூர் நாட்டுத் தீர்த்தமலை எனக் A.R.E, No 676 of 1905)குறிப்பிடுகிறது.

சேலம் மாவட்டம் தருமபுரியாகப் பிரிக்கப் பெற்றபின்பு தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டத்தில் அமைந்துள்ள ஊரே தீர்த்த மலை ஆகும்.

கி.பி. 1915 ஆம் ஆண்டுவரை படி எடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களில் தீர்த்தமலைக் கல்வெட்டுக்களில் மட்டுமே கற்கடகமாராயன் பற்றிய குறிப்புக்கள் உள. (A, TOPOGRAPHICAL LIST OF THE INSCRIPTIONS OF THE MADRAS PRESIDENCY Vol II Page 1837) பிறகல்வெட்டுக்களில் இதுவரை குறிப்பில்லை.

தீர்த்தமலையில் இதுவரை சுமார். 68 கல்வெட்டுக்கள் 1905ஆம் ஆண்டில் படி எடுக்கப்பட்டுள்ளன. (Ins, No 658—676 of 1905) இக்கல்வெட்டுக்கள் சிலவற்றுள் தீர்த்தமலை என்ற பெயர் (659,61, 76, 80 of 1905) காணப்படுகிறது.

தீர்த்தமலைக்கோவில் கூடலாழ்வார் கோவில் எனப்பெற்ற தென்றேன். கற்கடகமாராயன் பற்றியும் கல்வெட்டுக்கள் பேசுகின்றன. விருத்தாசலம் கல்வெட்டு கற்கடக மாராயனுக்குரியது கூடல் எனப்பெறுகிறது. எனவே தீர்த்தமலை என்பது மலைக்குரிய பெயர்; ஊர் கூடல்; கூடலாழ்வார் என்பது இறைவனுக்குரிய பெயர் எனவும் அறியலாம். இக்கூடலையே — ஆளப்பிறந்தான் வீரசேகரனை காடவராயன் அழித்தான்: கூடலாளப்பிறந்தான் எனப்பெற்றான். இப்பெயரையே பின்னரிவன் மரபினர் சூடிக் கொண்டனர்.

புறமலைவேலி

அத்திப் பாடலில் ஒன்று தொண்டை மண்டலம் கொண்ட பல்லவாண்டாரான காடவராயனைக் கைம்மலை- வெள்ளக் கடற் படைப் பல்லவன் காடவர்தஞ் செம்மலை வந்து பணியா வடமன்னர் சேனைவிட்டுத் தம்மலை விட்டுப், புறமலை வேலித் தலத் துளஞ்சா தெம்மலை யெச்சுரத் துட்புகு வார்புக் கிருப்பதற்கே— எனப்புகழ்கிறது.

காடவர்செம்மலைப் பணியாபடமன்னவர் சேனையும் தம்மலையும் இழந்தனர். யானை, கடற்படையுடையவன் காடவ அரசன் எனக் கல்வெட்டுப்பா கூறுகிறது. வடமன்னர் எனக்குறிப்பிடப்பட்டவர் வடநாட்டு அரசரல்லர் வடகொங்கவரசராதல் கூடும்.

'தம்மலைவிட்ட மன்னர் புறமலைவேலித் தலத்துள் அஞ்சாது இருப்பதற்கு எம்மலை எத்தலத்துட்புகுவர்' எனக்கல்வெட்டுக்கூறும். கல்வெட்டுப் பாவிற்கு இலக்கிய உரைகண்டோர் சக்கரவாளகிரியை எல்லையாக உடைய உலகில் எங்குபுகக்கூடும் என உரைகண்டனர். (கோப் பெருஞ்சியகன். பக். 31) புறமலைக்குச்சக்கராவளமலை எனக்

கூறியமையின் மூலம் எல்லாமலையும் ஊரும் காடவர்க்குரியதாயின பங்கவீர் எங்குத் தங்குவரென வினவுவதாகப்பாடலை அமைப்பர். ஆயினும் புறமலைநாட்டுப் புறமலைவரை பரவியுள்ள பல்லவ நாட்டுள்ள எந்தமலை அல்லது எவ்வூரில் அஞ்சாது இருக்கத் தமது புறமலையைவிட்ட கொங்கவரசர் புகுவர் என்று பொருள் கொள்ளுதலே சரித்திர அடிப்படையில் அமைவதாகும். கற்கடகமாராயன் கூடலழித்த வீரசேகரக்காடவன்

ஆரார் திகிரிக்கை ஆளப்பிறந்தார்க்கு அசஞ்சலற்கு
பாரான் வடமன்னர் பொன்முடி நாறும் பதாம்புயமே.

என் விருத்தாசலம் கல்வெட்டில் புகழும் போதும் வடமன்னர் என்பதற்கு வடகொங்கரெனவே பொருள் கொள்ளவேண்டும். இச்சான்றுகள் புறமலையும் அதனையொட்டிய பகுதியும் பல்லவரால் ஆளப்பெற்றதைக் காட்டுமன்றோ?

**அதிகமானாடு அழிக்கப்பெற்றமை.**

''கற்கடகமாராயன் கூடலும் அதிகமானாடும் அழித்து வெற்றிக் கொடியுயர்த்தி அநுமனும் பொறித்தான் வீரசேகரக் காடவராயன் என விருத்தாசலம் கல்வெட்டுக்கூறும்.

இக்காலத்திய தருமபுரி முற்காலத்திய தகடூர் ஆகும். தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டோர் அதிகமான்கள். தகடூரை ஓட்டி அமைதலின் தகடூர் நாடெனவும், அதிகமான்களால் ஆளப் பெற்றமையின் அதிகமானாடு எனவும் இப்பகுதி கூறப்பெறும். கற்கடகமாராயனின் கூடலை வென்று அதிகம் வென்றதாகக் கூறுவதனுல் தகடூர்ப்பகுதிக்கு மிக அருகே கற்கடக மாராயன்கூடல் அமைந்ததாதல் உறுதி,

எனவே கற்கடகமாராயன் கூடல் தீர்த்தமலையும் அதை ஒட்டிய ஊரும் என்பது திண்ணம்.

# ஆத்தூர்க் கோட்டை

அ. இராசேந்திரன், M.A.,

ஆத்தூர், சேலம்—கடலூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஒரு நகரம். இவ்வூர் சேலத்திற்கு 32 கல் கிழக்கிலும், தம்மம் பட்டிக்கு 20 கல் வடக்கிலும், அமைந்துள்ளது இவ்வூரின் இடையே தவழும் வசிட்டா நதியின் காரணமாக இவ்வூருக்கு ஆற்றூர் எனப் பெயர் வழங்கப்படுகிறது.

இவ்வூர் கங்கர் ஆட்சிக் காலத்தில் ஆறையூர், அனந்தகிரி தபோவனம் என வழங்கப்பட்டது. இவ்வூர் பரகேசரிவர்மன் ஆட்சிக் காலத்தில் ஆற்றூர் என்றே வழங்கப்பட்டதைக் கல் வெட்டுவழி அறியலாம்[1] இவ்வூர் மலாடு உடைய ஜன நாத வள நாட்டில் உள்ள மகதை மண்டலத்தில், ஆற்றூர்க் கூற்றத்தில் உள்ள ஓர் ஊர் என அறிகிறோம். அனந்தகிரி என்ற பெயரும் இவ்வூருக்கு 18ஆம் நூற்றாண்டு வரை நிலவி இருக்கலாம் என F. J. ரிச்சர்டு கூறுகிறார்.[2]

இவ்வூரில் 1 மைல் சுற்றளவுள்ள ஒரு பாழடைந்த கோட்டை காணப்படுகிறது, இருண்டுகிடக்கும் இக்கோட்டையின் வரலாறு தெரியவில்லை என்று கூறப்படுகிறது.[3] இக்கோட்டை கி.பி 2ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது என ஒரு ஆசிரியர் குறிக்கிறார்[4] இக்கோட்டை இரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருப்பின் இக் கோட்டையில் உள்ள கோயில்களில் உள்ள கல்வெட்டுக்களில் இக்கோட்டையைப் பற்றிய குறிப்புக்கள் கிடைத்திருக்கும் இக் கோட்டையைக் கெட்டி முதலியார் கட்டினார் என்பது வரலாறு. கெட்டிமுதலியார், நாயக்கர் ஆட்சிக் காலத்தில் சேலம் கோவைப் பகுதிகளை ஆண்டு வந்த ஒரு பாளையக்காரர் என்பது வில்சன் கருத்து.[5] இம்முதலியார் காலத்தில் தான் நாமக்கல், சேந்தமங் கலம், சங்ககிரி, சேலம், சேமத்தூர், அனந்தகிரி (ஆத்தூர்), பரமத்தி, கோட்டைகள் கட்டப்பட்டன என்று டெய்லர் கூறுகிறார்.[6] எனவே இக்கோட்டை கெட்டி முதலியாரின் ஆட்சிகாலமாகிய (கி.பி. 1559-.535)க்குள் கட்டப்பட்டிருத்தல் வேண்டும் என்பது தெளிவு. இக்கோட்டையில் உள்ள பெருமாள் கோயில் இக்கெட்டி முதலியாரின் சிலை இடம் பெறுதலாலும், இக்கோட்டையைப்

மற்றிய மரபு வழிக் கதையானும், இக்கோட்டைப் பெருமாள்கோயில் இவரால் கட்டப்பட்டிருத்தல் வேண்டும் என அறியலாம்.

இவ்வூரில் கெட்டி முதலியாரால் கண்டெடுக்கப்பட்ட ஏழு கொப்பரைப் பொன் புதையலைக் கொண்டு கட்டப்பட்டது எனத் தெரிகிறது. தற்போழ்து அக்கொப்பரையில் ஒன்று சென்னை பொருட்காட்சிசாலையிலும், மற்றொன்று இவ்வூர் விஷ்ணு கோயிலி லும் காணப்படுகிறது. இப்புதையல் கண்டெடுக்கப் பட்டிருந்திருப் பின் அதன் மூலம் அவருக்கு 35 லட்சம் பவுன்கள் கிடைத்திருக்க வேண்டும் எனக் கணக்கிடப்படுகிறது.*

இக்கோட்டையில் பெரிய முதலைகள் திரிதற்கு இடமான அகன்ற அகழியும், உயர்ந்த நெடுமதிலும், பீரங்கி உள்ளதும், இல்லதுமான மதிற் குமிழ்களும், ஒய்வு மண்டபக் குமிழ்களும் பகைவர் எளிதில் நுழைய முடியாக் குகைவாயில்களும், இக்கோட் டையை அழகு செய்கின்றன. இக்கோட்டையில் 4 நெல் களஞ்சி யங்களும், பாழடைந்த மண்டபங்களும், அரசியின் அந்தப்புரமும், இரண்டு நிச்சல் குளமும், கோட்டையை அணி செய்கின்றன.

சிவன்கோயில் :

இக்கோட்டையில் உள்ள சிவன் கோயில் வரலாற்றுப் புகழ் பெற்றது. இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் காய நிர்மலேஸ்வரன் என அழைக்கப்படுகிறான். இவனைக் கல்வெட்டுக்கள் திருமேல் தலையுடைய நாயனார் என்று குறிக்கின்றன. இக்கோயிலின் அமைப்பையும் சிற்பங்களையும் ஆயும் போது, இஃது முதல் ஆதித்தன் காலத்தில் கட்டப்பட்டிருத்தல் வேண்டும் எனத் தெரிகிறது.

இக்கோயில் இரண்டு தளங்களை உடைய விமானம் கொண்டது. இரண்டுமுதல் நான்குவரை தளங்கள் அமைக்கும் முறை ஆதித்தன் காலத்தவையே. தளத்தின் மேல் உறுப்பாக கிரீவம், சிகரம், ஸ்தூபி, கொண்டு விளங்குகின்றன. இக்கோயிலின் விமான ஸ்தூபியின் அமைப்பு கீழையூர் ஸ்ரீகோயிலை குறித்துக் காணப்படுகிறது. இக்கோயிலின் கூரை வண்டிக் கூடு போல் காட்சிதருகிறது. கரு வறை சதுரவடிவமானது, கருவறையின் முன் அர்த்தமண்டபமும் காணப்படுகிறது. இக்கோயிலில் உள்ள மகா மண்டபம் 40ஆண்டு களுக்கு முன்னர் கட்டப்பட்டுள்ளது. சப்தமாதர்களுக்கு தளிகள் இல்லை. ஐந்து தேவகோஷ்டங்களைக் கொண்டும், தேவகோஷ் டத்தின் மேல் மகாத்தோரணம் கொண்டும் விளங்குகின்றன. அண்ணாமலையார் அமரவேண்டிய கோஷ்டத்தில் கணபதி வீற்றிருக்

கிறார். ஏனைக் கோஷ்டங்களில், தட்சணாமூர்த்தி, பிரமன், கணபதி காளி இடம் பெற்றுள்ளனர். இக்கோயில் துர்க்கை கருந்தலைமேல் நின்றாடிய கானகத்தாளை கண்டியூர் (ஆதித்தன் கலைப்பாணி) துர்க்கைசிலையும் ஒத்த அமைப்பு உடையனவாகக் காணப் படுகின்றன.

ஆதித்தன் கலைப்பாணியின் உறுப்புக்களான கூடுகள் மனிதத் தலை உடையனவாகவும், கொடிக்கருக்கு நுனியில் வட்டங்கள் இவற்றால் அலங்கரிக்கப்பட்ட கொடுங்கைகளும் யாழிவரியும் கீழே பூதகணவரியும் நோக்கும்போது இக்கோயில் ஆதித்தன் காலக் கோயில் என்பது உறுதியாகிறது. இக்கோயிலின் மேலத்தானத் தைச் சுற்றி மதிலையொட்டி 8 பரிவாரத்தேவதைகளின் கோயில்கள் கட்டப்பட்டிருந்தன, தற்போது 6 பரிவார தேவதைகளின் கோயில்கள் மட்டுமே காணப்படுகின்றன. பைரவர் கோயில் இடிந்துபட்டமையால் அதன் சிலைதற்போது உள்ளே வைக்கப் பட்டுள்ளது. மிகப் பிற்காலத்தில் எழுப்பப்பட்ட ஒரு அம்மன் கோயில் ஒன்று காட்சி தருகின்றது. இதன் அமைப்பை நோக்கின் கெட்டி முதலியாரின் கலைப்பாணிகொண்டு விளங்குவதைக் காண லாம். இவ்வம்மன் கோயில் 16ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது என்பது தெளிவாகிறது. மேலும் இக்கோயிலில் உள்ள துவாரபாலகர் சிலைகள் மிக்க வனப்புடன் அதை மண்ணால் செய்யப்பட்டுச் சுவரில் பதிக்கப்பட்டுள்ளன. கேற்கண்ட பல காணங்களைக்கொண்டு நோக்கும் போது இக்கோயில் ஆதித்தன் கலைப்பாணியே என்பது உறுதியாகும்.

கல் வெட்டுக்கள்:—

இக்கோயிலின் சுற்றுச்சுவரில் அழிந்துபட்ட கல்வெட்டுக்கள் நீங்க ஏனைய ஐந்தைத் தொல் பொருள் கழகம் 1917ல் படியெடுத்து வெளியிட்டது. இக்கல்வெட்டிற்கு இதுவரை யாரும் விளக்கம் கூறினார் இல்லை.

பராந்தகன் கல்வெட்டு:-

இக்கோயிலின் கீழ்த்தளத்தில் சோழர் காலக் கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. ஆற்றூர் கூற்றத்தில் மலையமான் நாட்டில் உள்ள திருமுராளிஆழ்வார், கோயிலின் மூன்று பணியாட்களுக்கு சோழன் கோப்பரகேசரிவர்மன், தம் 14-ஆம் ஆட்சியாண்டில், கொடுத்தான் எனக்குறிக்கிறது.[8] எழுத்தின் அமைதியைக் கொண்டு நோக்கின், இக்கல்வெட்டன் காலம் 10 நூற்றாண்டைச் சாந்ததாகத் தெரிகிறது. இக்கல்வெட்டுக்குறிப்பிடும் கோபரகேசரிவர்மன், முதல்

'பராந்தகன்' ஆதித்தசோழனின், மகன், இக்கொடை பராந்த கனின் 14ஆம் ஆட்சியாண்டில் கொடுக்கப்பட்டதாகக் கொண்டால் கி பி 921 கொடுக்கப் பட்டது என்று கொள்ளவேண்டும்.

வன்நெஞ்சப் பெருமாள்:-

கோயில் கருவறையின் மேற்குப் பிரகாரத்தில் மற்றொரு சோழர் காலக் கல்வெட்டுக் காணப்படுகிறது, இக்கோயிலுக்கு வன்னெஞ்சப் பெருமாள் தன 32-ஆம் ஆட்சியாண்டில் 200 குழி நன்செய் நிலத்தைத் தானமாகக் கொடுத்தான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கல்வெட்டுக்குறிப்பிடும் அரசன் பெருமாள் என்பவன், மகதைப் பெருமாளைக் குறிக்கும், இவன் வாணர்மரபில் தோன்றிய ஒரு குறு நிலமன்னன்; இவ் ஆற்றூர்பதியை ஆறகளூரைத் தலை நகராகக் கொண்டு ஆண்டவன். இவனே வாணகோவரையன் என்றும் அழைக்கப்பட்டான் இவன் திருவண்ணாமலைக்கோயிலைப் பொன் வேய்நத காரணத்தால பொன் வேய்ந்த பெருமாள் என அழைக்கப்படுகிறன்[10] இவன் மூன்றும் குலோத்துங்கன் ஆட்சியின் கீழ் 'இருந்த குறுநிலமன்னனுதலின் இக்கொடை, கி.பி. (178-1218க்குள் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

கிருஷ்ணதேவராயன் காலம்:-

கி.பி. 1509-1529

இக்கோயிலின் வடக்குப் பிரகாரத்தில் கிருஷ்ணதேவராயன் காலக் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. சக. 1481 ஐப்பசி 22 (கி பி 1559) ஆற்றூர் நாட்டில் உள்ள கல்லிநத்தம்[11] என்ற ஊரைத் துளுக்கண்ணநாய்கன், இறைவன், ஆறையூர் அருணகிரி நாதரின் மகன் பத்மநாப பட்டன் என்பவனுக்குக் கொடுத்தான் எனக் குறிக்கிறது[12] இக்கல்வெட்டுக் குறிக்கும் துளுக்கண்ண நாயக்கன், கிருஷ்ணதேவராயன் ஆட்சியில் மகதை மண்டலத்தின் தலைவனுக இருந்தான். இவன் இரண்டாம் நரசிம்மன் ஆட்சிக் காலம் தொட்டுக் கிருஷ்ணதேவராயன் காலம் வரை சுமார் 23 ஆண்டுகள் ஆண்டான் என்ற தெரிகிறது[13] இக்கல்வெட்டுக் குறிப்பிடும் பத்ம நாப பட்டனின் தந்தை திருப்புகழ்பாடிய அருணகிரிநாதன் எனக் கொள்ளமுடியாது. இப்பெயர் அருணகிரி நாதரின் பால்பக்தி கொண்ட ஒருவரின் பெயராக இருக்கவேண்டும். திருப்புகழ் அருணகிரிநாதரின் காலம் (1426-1450) எனவே மேற் குறித்த கருத்து பொருந்தாமை காண்க.

இக்கோயிலின் தெற்குப் பிரகாரத்தில் மற்றொரு கிருஷ்ணதேவ ராயன் காலக்கல்வெட்டு சக 1435, சித்திரை 13, மகதை மண்ட

லத்தின் தலைவனுன அக்கி திம்மைய நாயகன் வில்லவராயனை நத்தம்[14] என்ற ஊரை இறைவன் நறையூர் அருணகிரிநாதரின் மகன் சீரங்க பட்டன் என்பவனுக்குக் கொடையாக வழங்கினுன் எனக் குறிப்பிடுகிறது அக்கிதிம்மைய நாய்க்கன் கி. பி. 1510இல் துளுக்கண்ண நாய்கனுக்குப்பின் ஆட்சிக்கு வந்தவன். இவ்வூர் நன் கொடை, சக 1438ம் ஆண்டு (கி. பி. 1513- ஏப்ரல் 8ம்தேதி வெள்ளிக்கிழமை சுவாமிக் கண்ணுப்பிள்ளையின் கணிப்புப்படி) எனப்படுதலான், இவன் ஆட்சிக்கு வந்த மூன்றும் ஆண்டில் இவ்வூர் நன்கொடை வழங்கப்பட்டு இருக்கிறது, அருணகிரிநாதர் மகன் சீரங்கபட்டன் என்பவன் முன் கல்வெட்டில் குறிக்கப்பட்ட பத்மநாபபட்டனின் சகோதரனுக இருத்தல் வேண்டும்.

இக்கோயிலின் மேற்குப் பிரகாரத்தில் முற்றுப் பெறுத (In-Comptere) கிருஷ்ணதேவராயன் காலக் கல்வெட்டு ஒன்று, விஜயநகர அரசன் வீரப்பிரதாப கிருஷ்ணராயமகாராயள, சக14[illegible]9 விரோதி (ஆண்டு தவறு) சனிக்கிழமை 11பூசம் என்று முடிகிறது. இக்கல்வெட்டின் தொடர்ச்சி கிருஷ்ண தேவராயன் ஆணைப்படி கொடுக்கம்பட்ட ஊர்க்கொடையாக இருக்கலாம்.

## குறிப்புகள்

1. I. M. P. vol. II Page. 1208
2. Madras District Gazeteers-Salem District vol I Part II
3. ஆத்தூர் பஞ்சாயத்துவைர விழா மலர்—வித்துவான் I நாராயணன்.,
4. நகரப்பிதா—S. N. இளங்கோ.ஆத்தூர்.,
5. Wilson—Catarogne-IIPage XI.,
6. W. Taglor. A Catalogue of Oriental Historical Mss.1835.,
7. F. J. Richard—Salam Gazateers—Page-297.,
8. S. I. I. vol. XIX Dr. D. C. Sircar M. A. 1970.,
9. 405 of 1913.,
10. பிற்காலச் சோழர் சரித்திரம்—சதாசிவ பண்டாரத்தார் பகுதி-II பக் 178.,
11. தற்போது கல்லா நத்தம் என்று வழங்கப்படும் ஊராக இருக்கலாம்.

406 of 1913,

13 A.R.E. 1930-31,தம்மம் பட்டிக் கல்வெட்டுக்கள்(NoI to 4)

14. தற்போது அரச நத்தம் என்று வழங்கப்படுகிறது.

15, 403 of 1913.,

# சங்க இலக்கியத்தில் கொங்கு

க. ப. அறவாணன், M.A.,B.O.L.

கோவை, சேலம் மாவட்டப் பகுதிகளும் திருச்சிமாவட்டத்தைச் சேர்ந்த கருவூரும், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திண்டுக்கல், பழநி சுற்றங்களும் பண்டைய கொங்கு நாட்டின் பகுதிகள். இந் நாட்டுள் குறும்பர், எயினர், வேடர் ஆகியோரின் ஆளுகை ஒரு புறமும், மழவர், கோசர், கொங்கர் ஆளுகை மறுபுறமுமாக அமைந்து கிடந்தன. அந்த ஆறு குழுவினரும், கொங்கு நாட்டை ஆண்டவர்கள். இவர்களில் 'கொங்கர்' என்றே தனியே குறிக்கப்பெறும் குழுவினரைப்பற்றியே இக்கட்டுரை தன் கருத்துரையை வழங்குகிறது. வரலாற்றுக் காலத்திற்குட்பட்ட கி.மு. சில நூற்றாண்டுகளாக கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை வாழ்ந்த தமிழகர் வாழ்வியலைப் படம் பிடிக்கும், சங்க இலக்கியங்கள், கொங்கரைப்பற்றிப் பொதுவாக என்ன சாற்றுகின்றன. சிறப்பாகப் புறநானூறு என்ன கூறுகிறது. என்பதைத் தொட்டுப் பிட்டுக் காட்டுவதே இவ்வுரையின் உள்ளீடு.

### அதியனின் தனிச்சிறப்பு

சங்க இலக்கியத்திலேயே, புறநானூற்றிலேயே மிக அதிகமான 30 பாடல்களால் புகழப்பட்ட வேந்தன், கொங்கர் கோமானாகிய அதியன்தான். மிகப் பாடப்பெற்ற வேந்தர்களுள் நன்னன் 22பாக்கள், குட்டுவன் — 19 பா, செழியன் = 16 பா, கரிகால் வளவன்-19பா என அமைய, அதினுக்கு முப்பது பாக்கள் அமைந்துள்ளன.

ஒரு பெண்ணைத் தன் அவைக்களப் புலவராக, அரசியல் 'தூது வராகப் போற்றிய பெருமையும் கொங்குவேள் அதியனுக்கே உரியது.

### கொங்குப் புலவர்கள்:

புறநானூற்றில் பா எண் 267, 268 ஆகிய பாக்கள் முற்றும் மறைந்து போயின. எஞ்சியவை 398. இவற்றைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 156 - ஆம். இவர்களுள் பொன்முடியார், பெருந்தலைச் சாத்தனார், தருவூர்க்கிழப்பிள்ளை, கருவூர்ப பெருஞ்சதுக்கத்துப் பூதி நாதனார், அந்திகீரனார், கோசனார், உரோகத்துக் கந்தரத்தனார் ஆகியோர் தனித்துக் குறிக்கத்தக்க, சங்ககாலக் கொங்குப் புலவர்கள்.

**'கொங்கு பற்றிய இலக்கியக் குறிப்புகள் :**

கொங்கு பற்றிச் சங்க இலக்கியங்கள் சுட்டுவனவற்றை இருபெருங் கூறுகளாகப் பகுத்துக் கொள்ளலாம். அகப்பாக்கள் கூறுஞ் செய்திகள்.

அகப்பாக்கள் கூறுஞ் செய்திகள்.
புறப்பாக்கள் கூறுஞ் செய்திகள்.

இவற்றுள் அகப்பாவில் கொங்கர் பாண்டியரிடம் தோற்பு குறிப்பு பொறிக்கப்பட்டுள்ளது புறப்பாவில், சோழன், ஆயிடம் பெற்ற தோல்வியும், பாண்டியன், தரைப்படை, கடற்படைகள் வைத்திருந்த செய்தியும், வேளிர் பற்றிய குறிப்பும் பொறிக்கப்பட்டுள்ளன.

''கொங்கு'' பற்றி, நற்றிணை (10), குறுந்தொகை (393), அகநானூறு (253) பதிற்றுப் பத்து (22 : 15 - 16) புறநானூறு (130, 373) ஆகியன வெளிப்படையாகக் குறிப்பிடுகின்றன.

அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும்
பொன்நேர் மேனி மணியின் தாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்தல் ஓம்புமதி! பூக்கேழ் ஊர!

எனவரும் நற்றிணைப் பாட்டில், ''கொங்கர்ப் பணீஇயர்'' என்ற குறிப்புக் காணப்படுகிறது.

குறுந்தொகையில் தோழி கூற்றாக வரும் பாணர் பாட்டுஅருமை யானது. அப்பாட்டால் அறியப்படும் கொங்கு நாட்டு வரலாற்றுச் செய்தி சிறப்பாகக் கருத்தக்கது. பசும்பூண் பாண்டியனுக்கும், கொங்கர் கோமானுக்கும் இடையே பெரும்பகை. இருவர்க்கும் 'வாகை' என்ற இடத்தில் போர் நடந்தது. இப்போரில், பாண்டியனது தளபதியான அதிகன் யானையில் இருந்தபடியே போர் செய்தான். போரில் யானையும் கொல்லப்பட்டது. அதிகனும் கொல்லப்பட்டான். அப்போது கொங்கர் பெரும் ஆரவாரம் செய்தார்கள். இந்த ஆர்வார்த்தைவிட, தலைவன், கனவிலே தலையோடு புணர்ந்த புணர்ச்சி பற்றிய வதந்தி, பெரிதாகப் பரவி விட்டதாகத் தோழி சொல்லுகிருள்.

மயங்குமலர்க் கோதை குழைய மகிழ்நன்
முயங்கிய நாட அச்சில்வே அலரே!
கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூண் பாண்டியன் வினைவில் அதிகன்!
களிறொடு பட்ட நாற்றை
ஒளிறுவாள் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே. (393)

இப்போரின் முடிவில் கொங்கர் தோற்றனர். பசும்பூண் பாண்டியன் வென்றான். தன் தலைநகராம் மதுரை மாநகரில், வெற்றி விழாவைக் கொண்டாடினான். பெரும்புகழ் ஆரவாரம் கிளர்ந்தது. இதனைவிட ஒரு பெண், பிறிதோர் ஆடவனிடம் கொண்டிருந்த அம்பலம் ஏறி ஆரவாரம் ஆயிற்று என்று நக்கீரர், அகநானூற்றில் கூறுகிறார்.

அலரே
வாடாப் பூவின் கொங்கர் ஓட்டி
நாடுபல தந்த பசும்பூட் பாண்டியன்
பொன்மலி நெடுநகர்க் கூடல் ஆடிய
இன்னிசை ஆர்ப்பினும் பெரிதே. (253)

**கொங்கு நாட்டில் நீர்ப்பஞ்சம் :**

'கயிறுகுறுமுகவை' என்ற இருபத்திரண்டாம் பதிற்றுப்பத்து, கொங்குநாடு பற்றிய அரிய செய்தியை நல்குகிறது. கொங்கர் நாட்டில் தண்ணீர் கிடைத்தல் அரிது. பசுமாடுகளோ நிரம்ப வாழுகின்றன. நீர்த்தாகத்தால் மாடுகள் அலைமோதுகின்றன. இவற்றை ஒரு கிணற்றருகே ஓட்டிச் செல்கிறார்கள். அந்தக் கிணறோ பலநெடும்பாறைகளை இருப்புக் குந்தாலிகளால் உடைக்கப் பட்டுத் தோண்டப் பட்டது. நீண்ட ஆழத்தில் கிடக்கும் குழைந்த நீரை முகந்தெடுக்கிறார்கள். ஒரு நீர் முகவையை, நீண்டகயிற்றாற் பிணைத்து, கிணற்றினுள் விட்டு முகந்து, மூச்சுமுட்டமேல் இழுக்கிறார்கள். மேலே வந்த கொஞ்ச நீரைக் கிணற்றுக்குப் பக்கத்தில் மாடுகளுக்காகத் தோண்டி வைத்துள்ள பத்தலில்ஊற்றுகிறார்கள். அவர்கள் ஊற்றுவதற்கு முன்பே, மாடுகள் தாகம் தாங்க மாட்டாமல், குழுமி வந்து முட்டி மோதி மொய்த்துக் கொள்கின்றன. அப்பேர்ப் பட்ட மாடுகளையுடைய கொங்கர் நாடு எனப் பதிற்றுப்பத்து படம் பிடித்துக் காட்டுகிறது.

பொன்செய் கணிச்சித் திண்பிணி உடைத்துச்
சிரறுசில ஊறிய நீர்வாய்ப் பத்தற்
கயிறுகுறு முகவை மேயினை மொய்க்கும்
ஆகெழு கொங்கர் நாடு. (22:-15—16)

**புறநானூற்றில் 'கொங்கு'**

புறநானூற்றில், மழவர், கோசர், சேரர், எயினர், குறும்பர், வேட்டுவர், பற்றிய குறிப்புக்கள் பல உள்ளன. இவை யனைத்தும்

கொங்கு நாட்டினை ஆண்ட மன்னரைப் பற்றியன. கொங்கரைப் பற்றிப் புறநானூறு பேசும் இடங்கள் குறைவு. அவை இரண்டே இடங்கள்தாம்.

இவ்விரண்டும், கொங்கர் பெற்ற இரு தோல்விகளைக் குறிப்பன. இவை இரண்டே எனினும் வரலாற்று முதன்மை வாய்ந்தவை.

ஏணிச்சேரி முடமோசியார் தந்த 130 ஆம் பாட்டு வேள் ஆய் அண்டிரனுக்கும், கொங்கருக்கும் ஊடே நடந்த கடற்போரைக் குறிக்கிறது. மலைநாட்டில் உலாவரும் யானைகள் எண்ணிறந்தன. அவை, கொங்கரைக் கடற்போரில் தோற்கடிக்க வேந்தன், எறிந் திட்ட அம்புகளைக் காட்டிலும் மிகுதி எனப் புலவர் குறிப்பிடுகிறார்.

பிறிதொரு பாட்டு, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், கருவூர் எறிந்தானைக் கோவூர் கிழார் பாடியது. இப் பாட்டில். சோழன் கிள்ளிவளவனுக்கும் கொங்கு மன்னருக்கும் இடையே நடந்த போர் குறிக்கப்படுகிறது.

ஆய் அண்டிரன், சோழன் கிள்ளிவளவன் என்ற இரு பெரு வேந்தர்களும், கொங்கரை வென்ற நிகழ்ச்சி மிகப் பாராட்டப் படுவதால், 'கொங்கர்' பேரரசுகளாலும் வெல்லப்படுதற்கு மிக அரியராய் இருந்தனர் என்பது புலனாகிறது.

# ஊராட்சி முறை

புலவர் செ. இராசு

**நாற்பெரும் பிரிவுகள் :-**

கொங்குநாடு தென்கொங்கு, வடகொங்கு, மேல்கொங்கு, மழ கொங்கம் என்று நான்கு பிரிவுகளாக வழங்கப்பட்டு வந்தது. சிலப் பதிகாரத்திலேயே "குடகக் கொங்கர்"[1] குறிக்கப்படுகின்றன. மேல் கொங்கினைச் சுந்தரரும் 'மீகொங்கு' என்று குறிப்பிடுவார்.[2] காவிரியின் கிழக்கே உள்ள பகுதி 'மழகொங்கம்' எனப்பட்டது.

பூவிரியும் பொழிற்சோலைக் காவிரியைக் கடந்திட்டு அழக மைந்த வார்சிலையின் மழகொங்கம் அடிப்படுத்து என்பன வேள் விக்குடிச் செப்பேட்டு வரிகளாம்.[3] தென் கொங்கு, வடகொங்குப் பிரிவுகள் பல கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றன.[4]

**உள் நாட்டுப்பிரிவுகள் :-**

வேளாளர்கள் 48 ஆயிரம் பேரும். அவர்தம் ஊழியர் 12ஆயிரம் பேரும் (நற்குடி, பசுங்குடி) இங்கு வந்து குடியேறியதாக ஒரு வழக்குண்டு. தொண்டைநாட்டில் 24 கோட்டங்கள் இருந்ததைப் போலவே கொங்கு நாட்டையும் 24 நாடுகளாகப் பிரித்தனர்.

1. பூந்துறை நாடு
2. தென்கரை நாடு
3. காங்கய நாடு
4. பொங்கலூர் நாடு
5. ஆறை நாடு
6. வாரக்க நாடு
7. வையாபுரி நாடு
8. மண நாடு
9. தலைய நாடு
10. தட்டய நாடு
11. பூவாணி நாடு
12. அரைய நாடு
13. ஒடுவங்க நாடு
14. வடகரை நாடு
15. கிழங்கு நாடு
16. நல்லுருக்கா நாடு
17. வாழவந்தி நாடு
18. அண்ட நாடு
19. வெங்கால நாடு
20. காவடிக்கா நாடு
21. ஆனைமலை நாடு
22. இராசிபுர நாடு
23. காஞ்சிக் கோயில் நாடு
24. குறுப்பு நாடு

பூந்துறை நாட்டின் உட்பிரிவுகள் கீழ்கரை, மேல்கரை, பருத்திப் பள்ளி, சேலநாடு, எழுகரை நாடு என்று பல வகையாகப் பிரிக்கப் பட்டன.[5]

ஈரோடு பள்ளி கொண்ட பெருமாள் கோயிலில் உள்ள மதுரை கொண்ட முதற் பராந்தகன் கல்வெட்டில் (கி.பி. 922) "எழுகரைத் திருவாய்ப் பாடி நாடு" குறிக்கப் பெறுகின்றது.[6]

சுந்தரர் தேவாரத்தில் "கொங்கில் குறும்பு" என்று குறுப்புநாடு குறிக்கப் பெறுகின்றது (8ஆம் நூ) எனவே இந்நாட்டுப் பிரிவுகள் 8ஆம் நூற்றுண்டுக்குமுன் ஏற்பட்டன என்பது தெளிவாகிறது.[7]

**பூந்துறை நாடு :-**

கொங்கு நாட்டின் 24 நாடுகளும் பெரும்பாலும் இயற்கையான மலை, ஆறுகள் இவைகளையே எல்லைகளாக வைத்துப் பிரிக்கப் பட்டிருக்கின்றன. எடுத்துக் காட்டாகப் பூந்துறை நாடு வடக்கில் பவானி ஆற்றையும், கிழக்கில் காவிரியையும், தெற்கில் நொய்யலாற்றையும், மேற்கில் சென்னிமலையையும் எல்லையாகப் பெற்றுள்ளது."

**பூந்துறை நாட்டின் ஊர்கள் :-**

மேலே நாம் கண்ட பூந்துறை நாட்டின் முதல் தலை நகர் பூந்துறை. இரண்டாம் தலைநகர் வெள்ளோடு. மூன்றும் தலைநகர் நசையனூர். நான்காம் தலைநகர் எழுமாத்தூர். இந்நான்கு ஊர்கள் தவிர ஏனைய 28 ஊர்கள் இந்நாட்டுச் சபையில் இருந்தன.[9]

| | | | |
|---|---|---|---|
| பூந்துறை | காளமங்கலம் | ஈஞ்சம்பள்ளி | இலவமலை |
| வெள்ளோடு | குழாநிலை | சத்தியமங்கலம் | பனயம்பள்ளி |
| நசியனூர் | கிழாம்பாடி | சேமூர் | ஓடாநிலை |
| எழுமாத்தூர் | முடக்குறிச்சி | மங்கலம் | முருங்கைத் தொழுவு |
| பிடாரியூர் | அனுமன்பள்ளி | ஈரோடு | வீரகநல்லூர் |
| ஈங்கியூர் | பழமங்கலம் | பேரோடு | |
| பெருந்துறை | குலவிளக்கு | சித்தோடு | |
| சாத்தனூர் | காகம் | திண்டல் | |
| | அறச்சலூர் | திருவாச்சி | |
| | விளக்கேத்தி | | |

**உறுப்பினர்கள் :-**

பல தனிப்பாடல்களிலும், காணிப்பாடல்களிலும் தலைநகரம் நான்கும் நகரம் என்று குறிக்கப்படுகின்றன. பூந்துறைநாட்டுச் சபையில் 56 உறுப்பினர்கள் இருந்தனர்.

| | | |
|---|---|---|
| பூந்துறைக்கு | 10 | உறுபிப்னர் |
| வெள்ளோட்டுக்கு | 8 | ,, |
| நசையனூர்க்கு | 6 | ,, |
| எழுமாத்தூர்க்கு | 4 | ,, |
| 4 தலைநகர் நீக்கி ஏனைய 28 ஊர்களுக்கு | 28 | ,, |
| மொத்தம் | 56 | உறுப்பினர். |

ஆனால் பல கல்வெட்டுக்களில் சாட்சிக் கையொப்பமிட்ட போது ஊருக்கு (தலைநகர் உட்பட) ஒருவர்தாம் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

''இப்படிக்கு பூந்துறையில் மேலைச் சாகாடைகளில் அப்பியான் எழுத்து. இப்படிக்கு வெள்ளோட்டு வேளாளன் பயிரர்களில் பிள்ளையாண்டான் எழுத்து. இப்படிக்கு நசையனூரில் வெள்ளாளன் கண்ணர்களில் அழைப்பிச்சான் எழுத்து. இப்படிக்கு சாத்தனூரில் வெள்ளாளன் வண்ணக்கரில் சிவமாலை எழுத்து'' என வருகிறது.[10]

வெள்ளோடு சருவலிங்கேசுவரர் கோயில் கல்வெட்டில் ''இப்படிக்கு முப்பத்திரண்டு ஊரவர் சொற்படிக்கும் கையெழுத்துப் படிக்கும் இந்தத் தம்மசாதனம் எழுதினேன் பூந்துறை நாட்டு வெள்ளோட்டுத் தருளக்கினியரில் வைசிய கோத்திரத்தில் நாட்டுக் கணக்கு திருமலை நாதர் கோப்பணன் எழுத்து'' எனக் குறிக்கப்படுகின்றது [11]

**நாட்டுக் கூட்டங்கள் :**

இக்கூட்டங்கள் பெரும்பாலும் கோயில்களிலும், மண்டபங்களிலும் கூடியிருக்கின்றன.

> ''பொங்கலூர்க் கரை நாட்டவரோம் கொடுவாயில் மாடம் நிறைந்த மணி மண்டபத்து நிறைவற நிறைந்து குறைவறக் கூடி வாட்ட மின்றிக் கூட்டம் பெருகி ஒருமித்து இருந்து எங்கள் நாட்டில் கொடுவாயில் பெருமாள் விண்ணிறைந்த பெருமாள்'' என ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது.[12]

இன்னும் சில கல்வெட்டுக்களில் ''பூந்துறை நாட்டோம் தங்கள் நாட்டு ஈரோட்டில் கூடி'' என்று வருகிறது. இன்னும் சில கல்வெட்டுக்களில் நசையனூர் 'மணிமண்டபத்தில்' கூடியதாகவும், 'கொடுமுடி உலக விடங்கத் திருக்காவணத்தில்' கூடியதாகவும் வருகிறது.[13]

**பல்வேறு அவைகள் :-**

சில சமயங்களில் சில சமூகத்தினர் கூடிய நிகழ்ச்சிகளும் உண்டு. திருச்செங்கோட்டுச் செப்பேடு ''தாசியூர் நகரத்தார் கூட்டம்'' பற்றியும்[14] ஈரோடு பெருமாள் கோயில் கல்வெட்டு வளஞ்சியர்' பற்றியும்[15] கூறுகின்றது.(இவ்வணிகர் சபையாகும்) குன்னத்தூர் இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் கல்வெட்டு 'வீர சோழ வளநாட்டு அருளாளநாடான திருவிடையாட்டம் முகுந்தனூரான விக்ரம சோழச் சதுர்வேத மங்கலத்துச் சபை'' பற்றிக் கூறுகிறது.[16] (இது அந்தணர் சபையாகும்) பப்பிரெட்டி பட்டி

கல்வெட்டில் "சித்திரமேழி நல்லூர்க்கு எழுபத்தொன்பது நாட்டு நாட்டோம்" எனக்குறிக்கப்படுவதும் "எழுகரை நாட்டுப் பதினெண் விஷயம்" என வருவது வேளாளர் சபையாகும். சில கல்வெட்டுக் களில் 'அமண்குடிச்சபை' கூறப்பட்டிருக்கின்றது. இது சமணர் சபையாகும். ஆனால் இவை (சமூக — சமுதாயச் சபைகள்) மிகமிகச் சிலமுறைதான் கூடியிருக்கின்றன. சாதி சமூகச் செய்திகளைக் குறிப்பதற்காக! இதனை வைத்துக் கொண்டு "கொங்கு நாட்டு சமுதாய அமைப்பிற்கு நாடு என்றும், இதில் அங்கம் வகிப்பவர் நாட்டார்" என்று மட்டும் முடிவு கட்டிவிட முடியாது.

**ஊராட்சி அவைகளே !**

குறுப்பு நாட்டு அவையில் "வேளாளரும் வேட்டுவரும்" கலந்து இருந்தனர். பூந்துறை நாட்டு அவையில் வேளாளர் பலருடன் "பாண்டிய வேட்டுவரில் வீரன் புலிக்குத்தி தேவன்" இருந்தான். செட்டியார், கணக்கர், அந்தணர், கட்டுக்கண்ணனிகள் (ஊழியர்) முதலிய அனைவரும் இருந்ததைக் கல்வெட்டில் காணுகின்றோம்.[17] இன்னும் சில கல்வெட்டுக்கள்.[18]

"குறுப்புநாட்டு ஊரும் ஊராளிகளும்"
"குறுப்பு நாட்டு நாட்டவரோம்"
"காங்கய நாட்டு நாட்டார் எங்கள் நாட்டில்"

எனக் கூறுகின்றன.

இச்சபைகள் கூடி சமூகச் செய்திகளை மட்டும் கவனிக்கவில்லை. சாத்தனூரில் நாட்டார் தலைவிலை நீக்கிய செய்தியைப் பின்வரும் தொடர்கள் விளக்குகின்றன.

"பூந்துறை நாட்டோம் சாத்தனூர்க்கெங்களில் அமைவு குடுத்த பரிசாவது....அழிபிழை அநியாயம் செய்தாரை வெட்டுதல் குத்துதல் செய்தால் அவனுக்குத் தண்டம் தலைவிலை யில்லையாக"[19]

வெள்ளோடு, திங்களூர், குன்னத்தூர்க் கல்வெட்டில் நாட்டார் ஜப்தி செய்து சிறையிலிட்டிருக்கின்றனர் என்பதனை அறிகின்றோம்.

"மண்கலந் தகர்த்தும் வெண்கலம் எடுத்துக் கொள்ளக் கடவதாக"
"ஓடிப் போகில் தடுத்து மறிச்சுக் கொள்ளுவதாக"

என்ற வரிகள் அதனை நன்கு விளக்குகின்றன.[20] பேரூர்க்கல்வெட்டொன்று நாட்டார் கூடி சில சமூகத்தினருக்கு உரிமை அளித்தமை பற்றிக் கூறுகிறது.[21]

முடிவுரை:-

செல்வாக்கு மிகுந்த சில தலைவர்கள் நாடு முழுவதையும் தங்கள் அதிகாரத்தின் கீழ்கொண்டு வந்திருக்கின்றனர். காலிங்கராயனை "பூந்துறை நாட்டுக்கு நாட்டானாய் வெள்ளோட்டுக் குடியிருப்புக் காரன்" என்று வமிசாவளி கூறுகிறது.[22]

'புறமலை நாடாள்வானேன்' 'புறமலை நாட்டுத் தகடாதிராயன் செய்யபெருமாள்' என்பவர் சில நாட்டுத் தலைவர்கள்.

இன்றும் கொங்குநாட்டு மக்களிடையே ஊராளும் காணியாளர் பெயர்களும், நாட்டுப் பிரிவுகளும் கல்வெட்டில் கூறியபடியே வழக்கில் இருந்து வருகின்றன. சுமார் 1300 ஆண்டுகளாக இந்நாட்டில் நின்று நிலவும் இம்முறை மிக வியக்கத்தக்கதாகும்.

## குறிப்புகள் :

(1) சிலப்பதிகாரம்-30-159.
(2) சுந்தரர் தேவாரம்—கோயில் திருப்பதிகம்
(3) வேள்விக்குடிச் செப்பேடு
(4) 'கொங்கிரண்டும் ஒன்றாக' (144/1909)
'வடகொங்கில் நரையனூர் (112/1920)
'தென் கொங்கில்' (562/1893)
(5) கொங்கு மண்டல சதகம் - ஊர்த்தொகைப் பாடல்; கொங்கு 1—215.
(6) தென்னிந்தியக் கோயில் சாசனங்கள்—1—247.
(7) சுந்தரர் தேவாரம். குரக்குத்தளி.
(8) காளியண்ணக் கவிராயர் பாடல்.
(9) கொங்கு. 1—215.
(10) ஈரோடு பெருமாள் கோயில் வடக்குச் சுவர்க் கல்வெட்டு.
(11) ஈரோடு வரலாற்றுச் சங்கக் குறிப்பு (வெள்ளோடு)
(12) தென்னிந்தியக் கோயில் சாசனங்கள்—3-1-பக் 1068.
(13) தென்னிந்தியக் கோயில் சாசனங்கள்—1-255.
(14) தென்னிந்தியச் சாசனங்கள் 3-212.
(15) தமிழகம்—20.
(16) ஈரோடு வரலாற்றுச் சங்கக் குறிப்பு (குன்னத்தூர்)
(17) நசியனூர் எழுத்துப் பாறைக் காட்டுக் கல்வெட்டு.
(18) வரலாற்றுச் சங்கக்குறிப்பு; (திங்களூர், பட்டாலி) 227/1920
(19) சாத்தனூர்க் கல்வெட்டு.
(20) குன்னத்தூர்க் கல்வெட்டு.
(21) பேரூர் 562/1893
(22) காலிங்கராயர் கைபீது. D. 3044.